www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 11/00
දිනමුරසු වාරමලර් ஆக.18–24,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 166

## புலிகளின் அடுத்த குறி

## சீர்குலைப்பு எச்சரிக்கை

யால காட்டுக்குள் நடப்பது என்ன ?

டெண்டுல்கர் பரபரப்பு பேட்டி



அரசியல் தொடர்

## ஒப்பரேசன் லிபரேசன்

கூடு – சுவை – சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## யார் வல்லவர்கள் ?

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

அவசரகாலச் சட்டத்துக்கு
ஒன்றரை நாள் விவாதம் கேட்டது
பிரதான எதிர்க்கட்சி.

மயிர் பிளக்கும் விவாதம்தான்!
ஒரு தாக்குதலுக்குரிய தீவிரத்தோடு
எதிர்க்கட்சி உறுப்பினர்கள்
விவாதக் களத்தில் குதித்திருந்தார்கள்.

யுத்தத்தில் அரசாங்கம்
மெச்சத்தகுந்த சாதனை புரியவில்லை
என்பதுதான்- என்பது மட்டும்தான்
விவாத தாக்குதலின் இலக்கு!

யுத்தமே கூடாது என்று சொல்லவில்லை.
யுத்தம் நடத்தத் தெரியவில்லை
என்பதுதான் குற்றச்சாட்டு!

அரசியல் தீர்வுக்கு யோசனை கேட்டால்
சொல்ல மறுக்கிறது எதிர்க்கட்சி.
"அரசாங்கத்தின் அணுகுமுறை சரியில்லை;
எப்படி ஒத்துழைப்பது?"
என்று ரணில் கேட்கிறார்.

அதே எதிர்க்கட்சித் தலைவர்
யுத்தத்தை நடத்த
கூட்டுப்படைத் தளபதி தேவை
என்று யோசனை சொல்கிறார்.

தேவையற்ற யுத்தத்திற்கு
தாமாக முன்வந்து
யோசனை சொல்ல முடிகிறது;
தேவையான தீர்வுக்கு
யோசனை சொல்ல முடியவில்லை!

ஜனநாயக அமைப்பில்
எதிர்க்கட்சியானது
நிழல் அரசாங்கம் போன்றது.

அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுவது
மட்டுமே எதிர்க்கட்சியின் பணியல்ல;
தவறுகள் பற்றிப் பேசும்போது,
சரி எதுவென்றும் கூறவேண்டும்.

யுத்தம் என்ற சதுரங்கத்தட்டில்
மக்களை- காய்களாக வைத்து
எத்தனை நாட்கள்
ஆடிக்கொண்டிருப்பது?

போரின் வெற்றி தோல்வியை
போர் நடத்துகின்றவர்களின்
திறமை சம்பந்தப்பட்ட விடயமாக
குழப்பிக் கொண்டிருக்கக்கூடாது.

அப்படிப்பார்த்தால்
ஐ.தே.கட்சி அரசாங்கமும்
அமோகமான தோல்விகளைச் சந்தித்தது.
தமது ஜனாதிபதியைக்கூட
பாதுகாக்க முடியாமல் பறிகொடுத்தது.

வெல்வது யார், தோற்பது யார்?
என்று வாதிடுவதைவிட
நீதி எது, அநீதி எதுவென்று
ஒரு முடிவுக்கு வருவது நல்லது.

"தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்
தர்மம் மறுபடியும் வெல்லும்!"
சமாதானத்தின் வாழ்வையும்
இங்கே சூது கவ்வியிருக்கிறது.
அதுதான் ஊதிப் பெருத்துவிட்ட
இனப்பிரச்சனை!

சமாதானம் மறுபடியும்
வெல்லுமா?
விடைகாணவேண்டியது அதுதான்!
வெற்று விவாதங்களால்
யுத்தத் தீயை விசிறிவிடுவதல்ல!

சண்டையை நடத்த
படைபலம் தேவை.
சமாதானத்தை மீட்க
மனபலம் போதும்!
சுத்தமான மனமே பலம்!

மனபலம் உள்ளவர்கள்தான்
இன்று தேவை!
ஆனால் அரசியல் என்ற சாக்கடை
புறத்தில் மட்டுமல்ல, அகத்திலும் புகுந்து
அரசியல் வாதிகளை
அசிங்கப்படுத்திவிட்டது.

சட்டையில் சாக்கடை பட்டால்
தோய்த்து உலர்த்திவிடலாம்;
சாக்கடை நீரைக் குடித்துவிட்டாலோ
வாந்தி வரத்தான் செய்யும்.

அப்படி வெளிவருகின்ற வாந்திதான்
யுத்தத்தை நடத்துவதில்
வல்லவர்கள் யார் என்னும்
வாத விவாதங்களும்!

சாக்கடையில் இருந்து
வெளியேறிவராதவரை
அரசியல்வாதிகளின்
அகமும், புறமும் சுத்தமாகாது.

அரசியல் போட்டிகளாலும்
யார் வல்லவர்கள் என்று நிருபிக்கவும்
யுத்தத்தை தொடர்ந்தும் ஏவிவிட்டு
சமாதானத்தை கடித்து குதறினால்
ஓயாத ஓலம்தான்-இந்த
சுந்தரத்தீவை தொடர்ந்து நிறைக்கும்!

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## நம் ஆறுதலின் தேவன்!

உள்ளத்தில் ஏற்படும் ஆழமான காயங்களுக்கு மருந்து எது? துயரங்களை தீர்த்துக்கொள்ளும் வழி என்ன? நிம்மதி எங்கே கிடைக்கும்? உலகம் ஏங்குகிறது! எதிர்பார்க்கிறது! பிரிவு, ஏமாற்றம், கொடுமை, துரோகங்கள், மரணம் உள்ளத்தில் ஆறாத அழியாத காயங்களை ஏற்படுத்துகின்றன! உலகத்தார் தாங்கள் ஆறுதல் பெற சினிமாவுக்கு ஓடுகிறார்கள். மது, குடிவகைகளையும், தூக்க மாத்திரைகளையும் உபயோகித்துப் பார்க்கிறார்கள். வேதனை அதிகமாகுமே தவிர குறைவதில்லை.

ஆனால் நம் தேவன், ஆறுதலின் தேவன். அவர் நம்மோடு அவ்வளவு நெருக்கமாக இருக்கிறபடியால் ஓடி வந்து நம் கண்ணீரைத் துடைக்கிறார். அவர் அன்புள்ளவர். மனதுருக்கமுள்ளவர். ஜீவனோடிருக்கிறவர். கர்த்தருடைய இனிமையான பெயர்களில் ஒன்று "ஆறுதலின் தேவன்" என்பது! (II கொரி 1:3). ஆம், அவரது பாத படிதான் எத்தனை ஆறுதல்! அவர் சமூகம் எவ்வளவாய் நம்மைத் தேற்றுகிறது. அவரது வேத வசனங்கள் நம்மை ஆறுதல் படுத்தி பெலப்படுத்துகின்றன. அப்போஸ்தலனாகிய பவுல், "நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நித்திய ஆறுதலையும், நல் நம்பிக்கையும் கிருபையால் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய தேவன்." (IIதெச 2:16) என்று அழகாய்க் குறிப்பிடுகிறார். நித்திய ஆறுதலைத் தருகிறவர்.

நம் தேவன்! அல்லேலூயா! தி.பெ.தேவபாலன், மட்டக்களப்பு

## ஆன்மீகம்



## கோள் சொல்ல விரும்பாத அல்லாஹ்

ஒரு சமயம் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் மழை வேண்டி அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்கள்.

அதற்கு அல்லாஹ் "மூஸாவே உம்முடைய கூட்டத்தில் கோள் சொல்கின்ற மனிதர் ஒருவர் இருப்பதால் உமது வேண்டுகோளை நிறைவேற்ற முடியாது" என்று அறிவித்தார்.

இதைக் கேட்ட மூஸா "இறைவா அந்தப் பாவியை இப்போது எனக்குக் காட்டுவாயாக. நான் அவனை எம்மில் நின்றும் அகற்றி விடுகிறேன்," என்றார்கள்.

மூஸாவே "ஒருவர் மற்றொருவரைப் பற்றி கோள் புறம் பேசக் கூடாது என்று விலக்கியிருக்க, நானே அந்தக் கோளை சொல்லலாகுமா?" என்று வினவினார் அல்லாஹ்.

அல்லாஹ்வின் அந்தச் சொல்லைக் கேட்ட அங்கிருந்தோர் அனைவரும் உடனே "தௌபா" (பாவமன்னிப்பு) செய்தனர். அப்போது அல்லாஹ்வின் அருள் மழை பெய்யத் தொடங்கியது.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.163

### பரிசுக்குரிய கவிதை

### காலம் மாறியது

கொல்லைப்புறத்து சொந்தக் கிணற்றில்
கையால் அள்ளி நீர் குடித்தால் வெட்கம்!
மோட்டர் பூட்டி தாங்கியில் ஏற்றி
பில்டரில் வடித்து பிரிஜ்ஜில் வைத்து (எவர்)
சில்வரில் எடுத்து ஸ்ட்ரோவைத்துறிஞ்சி
குடித்த சுகமெல்லாம் ஒரு 'ஷெல்' அடியொடு
இல்லாமல் போக- இப்போ நாமொரு செல்லாக் காசு!
அடுத்தவர் தயவில் வாழ்ந்திடும் அகதி!
குடமொன்றை இப்போ இரவல் வாங்கி
நீரினைத்தேடி நெடுந்தொலைவலைந்தோம்!

ஹரேந்திரன்- மட்டக்களப்பு.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்



### தடுக்காதீர்!

குடத்தினில் கொண்டு செல்லல்
குண்டல்ல குடிநீர்! எம்மைத்
தடுத்துமே நிறுத்திடாதீர்!
தாகத்தால் தவிப்பாள் அம்மா!

கி. குலசேகரன்- பிரதானவீதி, கொஸ்லாந்தை.

### கண்ணீர் தேசம்

எங்கெங்கு பார்க்கினும் கண்ணீர்!
தண்ணீரோ தென்படவில்லை.
அழகிய தண்ணீர் தேசம்- இப்போ
கண்ணீர் தேசமாகி விட்டது!

திருமதி க. கதிரவேலு- கரப்பன் காடு, வவுனியா.

### தேன் சொட்டவோ?

பாலையில் நீரைத் தேடும்
பாங்கினில் நாளும் வாடும்
ஏழையர் பெற்ற செல்வம்
ஏந்திய குடத்துக் குள்ளே
நாளை எம் வேட்கை தீர்க்கும்
நற் சமாதான மென்னும்
சோலையின் தேனை அள்ளிச்
சொட்டிடப் போகின்றாரோ?

மெய்யன் நட்ராஜ்- ஹெரோ மேற்பிரிவு,
பூண்டுலோயா.

### சட்டங்கள் அமுலாகட்டும்!

பிடித்தாட்டும் வறுமையால்
படித்தாடும் வயதினில்
கரத்தோடு கொள்கலன்!
கழுத்தோடு கடமைகள்!
குருத்தோடு துன்பங்கள்!
எழுத்தோடு சட்டங்கள்!
கருத்தோடு எடுப்பவர் யார்?

செல்வி வதனிபரம்- அரியாலை,
யாழ்ப்பாணம்.

### அசுத்தம்!

செப்புக்குடம் சுமந்து
சின்னஞ் சிறு கரமிரண்டு
சுத்திச் சுத்தித் திரியுது பாரும்
சுத்தமான நீரெடுக்க;
எங்குபார்க்கினும்
அசுத்தம் அசுத்தம்
பலரின் மனங்களும்தான்!

பீ.எம்.எம். அன்ஸார்- புது தெரு, வெலிகம.

### தேடுகின்றோம்......

தண்ணீர்ப் பந்தலிட்டு
தாகம் தீர்த்த யாழ்நகரே!
குருதியால் நீ நனையும்
கொடுமைதனைச் சகிக்காது
அகதியாய் ஓடிவந்து
குடிப்பதற்கு நீர் இன்றி,
வவுசரைத் தேடுகின்றோம்.

அருணாதேவி- திருமலை.

## கவிதைப் போட்டி இல-166



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை **கவனியுங்கள்** வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி- 24.08.1996

—முகவரி—

கவிதைப் போட்டி இல.166 தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### இல்லையே....!

போர்த்தாகம் கொண்டோர்
பூமியில் இருக்கும்வரை
நீர்த்தாகம் நீங்கியும்
நிம்மதி இல்லையே...!

கி. இராஜேஸ்வரி- சம்பூர்-07.

### தீர்வுப்பொதி

கஷ்டப்பட்டு
நெடுந்தூரம் சுமந்துவந்து
வைத்தபின்தான்
"காலியான" விடயம்
புரிந்தது!

சுபா வரன்- கண்டி.

### நிதானம்....?

அட—
ஆட்டாதடா
இங்கேயே
வெடிச்சிடப்போகுது.....!

எஸ். பிரபா- கொக்காகல.

### கானல்நீர்

சுதந்திரம் சுவைக்கும்
கனவுகள் கலைந்து
கானல் நீரைக்
காணாது அலையும்
நாளைய பரம்பரை.

சீ. தங்கவடிவேல்-
மட்டக்களப்பு.

## வாசக(ர்) சாலை

அன்பின் முரசே!

ரசிகன் தரும் கொள்ளை ராணி "பூலான்தேவி" என்னை மிகவும் கவர்ந்து விட்டது. அது மட்டுமா? காதில பூ கந்தசாமியின் அசத்தலும் கூட.

ஹப்புத்தளையூர் ஸ்ரீதரன்.

அன்பின் முரசே!

உனது பக்கங்களில் காதில பூ கந்தசாமியின் கற்பனை, சினிமா பகுதி, தேன்கிண்ணம், தாய் தொடர் கதை, கவிதைப் போட்டி மற்றும் புதிதாக தொடங்கியுள்ள பூலான் தேவியின் தொடர் ஆகியவை அருமையிலும் அருமை. மொத்தத்தில் அனைத்து பக்கங்களுமே புதுமையானது.

என். நீதன், களுதாவளை.

"பூலான்தேவி" ஆரம்பமே அசத்தல். சூடாக சுவையாக கதையினை நடத்திச் செல்லும் பாங்கு தனியானது. தினமுரசுக்கு நன்றி. ரசிகனைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. எங்கே (ரசிகன்) கையைக் கொடுங்கள்.

அன்பு சாந்தி, திருகோணமலை.

**'தா'வின் வித்தியாசம்!**

அபிமான 'முரசில்', 'பி.கோ.பி' தந்து வரும் 'தா' தொடர்கதையில் அவர் செய்துள்ள 'வித்தியாசம்'; கதை முழுவதையும் 'உரை' (வசன) நடையிலேயே தந்திருப்பதுதான். "அழகாக எழுதி, அசத்துகிறார்."

'பூலான் தேவி'யின் 'பூர்வீகத்'தை, 'புதுமை'யாக வாசகர் மனம் 'பூரிக்கத்' தந்து வரும் என் அபிமான 'ரசிகனுக்கும்' வெளியிடும் 'முரசுக்கும்' எனது பாராட்டுக்கள்.

எம். ரிஷான் ஷெரீப், மாவனல்லை.

பூலான் தேவியை பற்றிய சுவையான தகவல்களை தந்த தினமுரசிற்கு எம் நன்றிகள். சுவையாகவும் விறுவிறுப்பாகவும் செல்கின்றது. இத்தொடர் தொடர்ந்து வர வாழ்த்துக்கள்.

திருமதி ராதா சிவபெருமாள்,
டவுன்சைட் எஸ்டேட்,
வெளிமடை.

வாரா வாரம் வர்ண அட்டையுடன் அனைவரையும் கவர்ந்து புதுமை மிகு ஆக்கங்கள் தந்து மகிழ்விக்கும் மலரே! உன் வருகை எமக்கெல்லாம் புதுமை. உன் தற்போதைய எழில் பொங்கும் வடிவமும் நீ நாளுக்கு நாள் அள்ளித்தரும் அனைத்து அம்சமும் என் மனதை கவர்ந்ததே. கொள்ளை ராணி பூலான் தேவியின் தொடர் மேலும் உனக்கு எழில் ஊட்டுகிறது. நீ மேலும் வளர்க வாழ்க.

எம்.எம். முஹம்மது ஆஸிர், சாய்ந்தமருது-10.

டியர் முரசே!

பட்டுக்கோட்டை பிரபாகர் எழுதிவரும் தா! என்ற தொடர் மிக விறுவிறுப்பாக உள்ளது. உண்மை எதுவோ தெரியவில்லை. கீதாவை கொலை செய்தது மதனாக தான் இருக்க வேண்டும் என்று படித்தளவில் விளங்குகிறது.

மேலும், நந்தினி 440 வோல்ட் விரைவில் வரும் என்று காத்திருக்கிறேன். வாழ்க உன் புகழ், வளர்க உன் பணி.

கே. புவனலோஜினி, சமகிபுர, இறக்குவானை.

முரசின் புதிய தொடரான "தா" அசத்தல். பட்டுக்கோட்டை பிரபாகர் வர்ணனை இல்லாமல் இந்த தொடரை ஆரம்பித்துள்ளது தானே வித்தியாசம், சரியா? தொடரில் தொடக்கத்தில் சூழலையும் கீதாவையும் வர்ணிக்காததில் தெரிந்து விட்டது.


சிறுகதை எழுதுவதில் புதிய இளம் எழுத்தாளர்களுக்கு வாய்ப்பு தருவது வரவேற்கத்தக்கது. எனினும் கதையின் தரத்தையும் கவனித்து வெளியிடுதல் நலம்.

என். சுரேன், வெள்ளவத்தை.

யாழ் மண்ணிலிருந்து எழுதப்படும் மடல் இது. யாழ் மக்கள் நரபலிகளையும், நாச வேலைகளையும் தினமும் கண்டவர்கள். சமாதானம் என்று வெளியே பேசப்பட்டாலும் நா இனித்திடுமா? போரைப்போன்றே சமாதானத்திற்கும் விலைஉண்டு.

மோசமான சமாதானத்தைவிட நல்ல முறையில் சண்டையிடலாம் என்பது எமக்கு பொருத்தப்பாடு உடையதா என்பது காலத்தின் கைகளில்தான் உள்ளது. எது எப்படியிருப்பினும் மனித உயிர்களுக்கு இங்கு கொடுக்கப்பட்ட மதிப்பு இருக்கிறதே.... இந்த நூற்றாண்டின் மோசமான வரலாற்றுப் பதிவுகள் சொல்லும் துயரக் கதைகள், 2000ம் ஆண்டுக்குள் முற்றுப்பெறவேண்டும் என்று ஆண்டவனை வேண்டுவதை தவிர அடியேன் என்ன செய்ய முடியும்?

அன்ருஸ், யாழ்ப்பாணம்.



நாட்டில் நிலவும் நெருக்கடிக்கு ஆளும் கட்சி மட்டுமல்ல, எதிர்க்கட்சியும் காரணம். எதிர்க்கட்சித் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்கள், யுத்தத்தில் படையினர் எத்தனைபேர் பலியானார்கள் என்பது பற்றியே கேள்வி எழுப்பியிருக்கிறார். எத்தனை பொதுமக்கள் பலியானார்கள் என்பதையிட்டு எவ்வளவு தூரம் அக்கறை காட்டுகிறார்? அவர்தம் கேள்விகள் அவரது அரசியல் சார்ந்தவையாக அமைகின்றன. இரு தரப்பின் நிறை குறைகளையும் முரசு சுட்டிக்காட்டிவருவது சரியானதே.

சி. அம்பலவாணர், வவுனியா.

ஆத்மராஜா றூத் சந்திரிக்காவின் சிறுகதைகள் காலத்தைப் பிரதிபலிக்கின்றன. தற்கால அவலங்களை வெளிக்கொணரும் கதைகளுக்கு முதலிடம் கொடுக்கவும்.

எம். சுதாகர், கொழும்பு-05.


படிப்பகம்

www.padippakam.com

# "சிவில் நிர்வாகத்தைச் சீர்குலைப்போம்!"

# விடுதலைப் புலிகள் பகிரங்க அறிவித்தல்

## "கப்பல் போக்குவரத்தையும் தாக்குவோம்"

**கிழக்கு மாகாணத்தில் மின்மாற்றிகளை தகர்ப்பது, மற்றும் யாழ் குடாநாட்டில் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட வேண்டாமென்று அச்சுறுத்தல் விடுத்தது போன்ற நடவடிக்கைகள் புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் அவை தொடர்பாக புலிகள் இதுவரை எவ்வித கருத்தும் வெளியிடாமையால் புலிகள்தான் காரணமா? என்ற சந்தேகமும் நிலவியது. ஆனால் 'முரசு' மட்டுமே மின்மாற்றிகளை புலிகள்தான் தாக்குகின்றனர் என்று முன்னர் செய்தி வெளியிட்டிருந்தது.**

சமீபத்தில் வெளியான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் சிவில் நிர்வாக சீர்குலைப்பு அவசியம் என்பதை புலிகள் வலியுறுத்தியுள்ளனர்.

வடக்கு-கிழக்கில் சிவில் நிர்வாக சீர்குலைவு நடவடிக்கைகளில் தாம் ஈடுபடுவது ஏன் என்பதையும் புலிகள் விளக்கியுள்ளனர். இது தொடர்பாக விடுதலைப்புலிகள் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

"சிறீலங்கா அரசின் ஆட்சியை தமிழர் தாயகத்தில் இருந்து தூக்கி வீசுவதே புலிகள் இயக்கத்தின் அரசியல் கொள்கையாகும்.

தமிழினத்துக்கு எதிரான அடக்குமுறைச் சட்டங்களையும், அதை நடைமுறைப் படுத்துவதற்கான ஆட்சி அலகுகளையும், அவற்றை வலுப்படுத்தும் நிறுவனங்களையும் ஒருங்கே கொண்ட ஒரு சங்கிலித் தொடர் அமைப்புத்தான் சிவில் நிர்வாகமாகும்.

### அத்தியாவசிய தேவைகள்

சிவில் நிர்வாகம் என்ற இந்த விடயத்திற்குள் எமது மக்களின் அத்தியாவசியத் தேவைகளான உணவு, கல்வி, மருத்துவம் போன்ற சில பணிகளும் அடங்கியிருப்பதால், சிவில் நிர்வாகத்தை சீர்குலைத்தல் என்ற புலிகள் இயக்க கொள்கையை சிலர் குழப்பத்துடன் நோக்குகின்றனர்.

மேற்குறிப்பிட்ட பணிகள் சிவில் நிர்வாகத்தின் ஒரு பகுதியாக இருந்தபோதும், இந்தப் பணிகளுக்குப் புலிகள் தடை விதிப்பதில்லை. இன்னும் சொல்லப் போனால் அந்தப் பணிகளுக்கு புலிகளும் உதவுகின்றனர்.

எனினும், மக்களின் தேவைகளை நிறைவேற்றும் சாக்கில் படையினர் தமது தேவைகளை நிறைவேற்றும் புத்திசாதுரியத்தைப் புலிகள் அனுமதிப்பதில்லை.

### கப்பல் போக்குவரத்து

மக்களுக்கான விநியோகங்களை மேற்கொள்ளும் கப்பற் போக்குவரத்தை புலிகள் தடுக்கவில்லை. ஆனால் படையினருக்கான கப்பற்போக்குவரத்தை நிச்சயம் புலிகள் தாக்குவர். அதனால் மக்களுக்கான விநியோகத்துடன், படையினரின் பொருட்களையும் கொண்டு செல்வதிலேயே அரசு குறியாக இருக்கிறது. இதனை அனுமதிக்க முடியாது. இந்நிலையை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

எமது மண்ணிலுள்ள அரசின் சொத்துக்களை அழித்து அதற்கு பொருளாதார நஷ்டங்களை ஏற்படுத்தும் விடயத்திலும் மக்கள் சில சிரமங்களை எதிர்நோக்கக்கூடும்.

கிழக்கு மாகாணத்தில் அரசுச் சொத்துக்களான மின்மாற்றிகளையும், தொலைத் தொடர்பு நிலையங்களையும் புலிகள் தாக்கி அழித்து வருவதால் மக்கள் சில வசதிக் குறைபாடுகளை எதிர்நோக்குகின்றனர் என்பது உண்மைதான். ஆனால் அந்த செயற்பாடுகள் மூலம் படையினரின் நடவடிக்கைகளும் பாரியளவில் பாதிக்கப்பட்டன என்ற உண்மையை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். எனவே மேற்குறிப்பிட்ட வசதிக் குறைபாடுகளை மக்கள் மனமுவந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

### யாழ் குடாநாட்டில்

யாழ்-குடாநாட்டில் அமைதி திரும்பி விட்டது என்று காட்டுவதற்காக, அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த அரசு துடிக்கிறது.

அரசு அக்கறை காட்டுவதற்கு பிரதான காரணம் வெளிநாடுகளில் இருந்து நிதி பெறுவதுதான்.

எனவே-அங்கு சிவில் நிர்வாகத்தை இல்லாது செய்துவிடுதல் என்பது அத்தியாவசியத் தேவையாகின்றது.

அதுமட்டுமல்ல, சிவில் நிர்வாக அமைப்புக்களில் பணிபுரியும் தமிழ் ஊழியர்களும், அதிகாரிகளும் அரசின் புலனாய்வு முகவர்களாகவும் மாறக்கூடும்.

தமிழ் பகுதிகளில் அரசின் சிவில் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுமானால் எமது போராட்டத்திற்கு பெரும் ஆபத்து ஏற்படும். இனத்துக்கும் ஆபத்து ஏற்படும்.

எனவே சிவில் நிர்வாகத்தை சீர்குலைக்கும் நடவடிக்கையானது போராட்டத்திற்கு நன்மை பயக்கும் நடவடிக்கை என்பதை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்." இவ்வாறு விடுதலைப்புலிகள் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரந்தனுக்குப் படை திரும்புமா?

'சத்யஜெய' இராணுவ நடவடிக்கை கடந்த திங்கட்கிழமை ஓய்ந்தது.

கிளிநொச்சியில் உள்ள கரடிப்போக்கு பகுதியில் படையினர் நிலைகொண்டபின்னர் சத்யஜெய இரண்டாம் கட்டம் ஓய்ந்தது.

கரடிப்போக்கு பகுதியில் இருந்து கிளிநொச்சி நகர் ஒன்று அல்லது ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்தில்தான் இருக்கிறது.

கிளிநொச்சி நகருக்குள் படையினர் பிரவேசித்தால் அங்கு பரந்து நிலைகொள்ள பெரும் எண்ணிக்கையான படையினர் தேவைப்படலாம். அதுதவிர புலிகள் மோட்டார் ஷெல் தாக்குதலையும் சரமாரியாக நடத்தினார்கள்.

எனவே கிளிநொச்சி நகருக்கு படையினர் செல்லவில்லை. கிளிநொச்சி நகரை கைப்பற்றுவது தமது நோக்கமாக இருக்கவில்லை என்று இராணுவப் பேச்சாளரான பிரிகேடியர் முனசிங்கா ரோய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி நகரில் இருந்து பார்த்தால் பரந்தன்வரை தெரியுமளவுக்கு கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளன என்று தொண்டர் நிறுவனப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்திருந்தார்.

"கிளிநொச்சியில் தாம் எதனையும் தரைமட்டமாக்கவில்லை" என்று பிரிகேடியர் முனசிங்கா மறுத்துள்ளார்.

டாங்கிப் படையணிகளுக்கு பலத்த எதிர்ப்பை காட்டியதாகவும், நான்கு டாங்கிகளை சேதப்படுத்தியதாகவும் புலிகள் கூறியிருப்பதையும் படைத்தரப்பு மறுத்துள்ளது.

படையினர் தமது இலக்கை அடைந்து விட்டனர் என்று பிரிகேடியர் முனசிங்கா ரோய்டருக்கு தெரிவித்திருக்கிறார். எனவே-படையினர் தற்போது நிலைகொண்டுள்ள பகுதிகளில் இருந்து திரும்பிச் செல்லக்கூடும் என்று தெரிகிறது.

ஆனையிறவு இராணுவ முகாமுக்கு திரும்பாமல் பரந்தனில் நிலைகொண்டு, அதன்மூலம் ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியை பாதுகாக்கும் முன்னரங்க நிலையாக அதனை மாற்றக்கூடும் என்றும் ஊகிக்கப்படுகிறது.

எனினும் கள நிலவரத்தைப் பொறுத்தே முடிவுகள் அமையும்.

## உதவி கோருகிறார் அரச அதிபர்

கிளிநொச்சியில் இடம்பெயர்ந்தும், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உதவி தேவை என்று கிளிநொச்சி அரசாங்க அதிபர் தில்லை நடராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கைமரங்கள், கூடாரங்கள், பிளாஸ்டிக் விரிப்புக்கள், மலசலகூடம் உருவாக்கக்கூடிய உபகரணங்கள், தண்ணீர் தாங்கிகள், குழந்தைகளுக்கான பால்பொருட்கள் போன்றவை உடனடியாக தேவைப்படுகின்றன என்று அவர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்கு உலர் உணவுப் பொருட்களும், மூன்று மாதத்திற்கான சம்பள முற்பணமும் வழங்க வேண்டும் என்றும் திரு.தில்லைநடராஜா சிபாரிசு செய்துள்ளார்.

'சத்யஜெய' இராணுவ நடவடிக்கையின் பின்னர் ஒரு இலட்சத்து 55 ஆயிரம் பேர் கிளிநொச்சி மாவட்டம் கரச்சி உப அரச அதிபர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்துள்ளனர் என்றும் திரு.தில்லைநடராஜா தெரிவித்துள்ளார்.

## "ஆயுதங்களை ஒப்படைக்கவும்"

## மக்களுக்கு புலிகள் அறிவித்தல்

முல்லைத்தீவில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை புலிகளின் முகாமுக்கு கொண்டு சேர்ப்பதற்கும், ஏற்றி, இறக்குவதற்கும் பொதுமக்களையும் புலிகள் ஈடுபடுத்தினர்.

அவசர அவசரமாக அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால் பொதுமக்களில் சிலர் ஆயுதங்களை தம்மோடு கொண்டு சென்றுவிட்டனர்.

இதனையடுத்து கடந்தவாரம் புலிகளால் வன்னிப்பகுதியெங்கும் ஒரு அறிவித்தல் வெளியிடப்பட்டது.

"ஆயுதங்களை தம்மோடு கொண்டு சென்ற பொதுமக்கள் அவற்றை உடனடியாக தமக்கு அருகிலுள்ள புலிகளின் முகாம்களில் ஒப்படைக்க வேண்டும். அவை தனிப்பட்ட உடமைகளல்ல" என்று அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பான விசாரணைகளும் புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## புலிகளின் கோரிக்கை! அமெரிக்கா மறுப்பு!

## "தலையிடுவதற்கு இது தருணமல்ல" என்று தெரிவிப்பு!

இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளுக்கு துணைபோவதை தவிர்த்துவிட்டு, இலங்கை இனப்பிரச்சனை விவகாரத்தில் அமெரிக்கா மத்தியஸ்த்தம் வகிக்க வேண்டும், தீர்வுக்கு உதவவேண்டும் என்று புலிகள் இயக்கம் கூறியுள்ளது. கடந்தவார முரசில் அச்செய்தி பிரசுரமாகியிருந்தது.

புலிகள் இயக்கத்தினரின் கோரிக்கை தொடர்பாக இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரக அரசியல் விவகார அதிகாரி ஸ்கொட் டேலிசி கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் தெரிவித்திருப்பதாவது:

"இலங்கை அரசாங்கமும், புலிகளும் பேச்சுவார்த்தைக்கு தயார் என்று அறிவித்தாலும்கூட அமெரிக்கா இலங்கையின் இனப்பிரச்சனை விடயத்தில் தலையிடப்போவதில்லை.

அவ்வாறு தலையிடுவதற்கு உரிய தருணம் இதுவல்ல. அவ்வாறு தலையிடுவதற்கு உரிய உரிமையும் எமக்குக் கிடையாது.

இலங்கைப் படையினருக்கு அமெரிக்கா வழங்கிய பயிற்சி குறைந்தளவானதாகும். வடக்கு-கிழக்கு போருக்கான பயிற்சியாக அது அமைந்திருக்கவில்லை.

புலிகள் அமெரிக்காமீது கூறும் குற்றச்சாட்டுக்கள் தவறான தகவலின் அடிப்படையில் அமைந்துள்ளன. ஆபத்தான ஆயுதங்கள் எதனையும் அமெரிக்கா இலங்கைக்கு விற்பனை செய்யவில்லை. புலிகளுடன் நடைபெறும் யுத்தத்திற்கு அந்த ஆயுதங்கள் உதவவில்லை.

நீண்டகாலமாக அமெரிக்கா இலங்கையின் ஆயுதப்படையினருக்கு உதவி வருகிறது. அந்த அடிப்படையிலேயே பயிற்சிகளும் வழங்கப்பட்டன. அவை தற்போதைய யுத்தத்துடன் சம்பந்தப்பட்டவையல்ல" என்று டேலிசி தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டு நிறுவனத்தின் பணிகள் இடைநிறுத்தம்

குவேக்கர் பீஸ் அன்ட் சேர்விஸ் (QPS) என்றழைக்கப்படும் குவேக்கர் சமாதானமும் சேவையும் எனும் சர்வதேச வெளிநாட்டு நிறுவனத்தின் பணிகளை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் நிறுத்திக்கொள்ளுமாறு படைத்தரப்பு கேட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இதனால் இந்நிறுவனம் கடந்த இருமாதங்களாகத் தனது பணிகளை இவ்விருமாவட்டங்களிலும் தொடரவில்லை.

இந்நிறுவனம் குறிப்பிட்ட இவ்விரு மாவட்டங்களிலும் பணிகளை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற உத்தரவில் குறிப்பிட்ட எந்தவிதக் காரணங்களும் தெரிவிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

பாதுகாப்புத் தரப்பினரின் மறு அறிவித்தல் வரும்வரை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் இந்நிறுவனம் அதன் பணிகளைத் தொடரமாட்டாது என்று கூறப்படுகிறது. எனினும் அந்நிறுவனத்தின் பிரதிநிதிகள் இன்னமும் அறிவித்தலை எதிர்பார்த்து மட்டக்களப்பிலேயே தங்கியிருக்கிறார்கள்.

கடந்த ஆறு வருடங்களாக கிழக்குப் பகுதியில் தனது பணிகளை ஆற்றி வந்த இந்நிறுவனம் 1990ம் ஆண்டு கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட சமூக வன்முறை மற்றும் படுகொலைச் சம்பவங்களின் இக்கட்டான வேளையில் அனைத்து சமூகங்கள் மத்தியிலும் சிறந்த பணியாற்றியது நினைவிருக்கலாம்.

## புலிகளிடம் குத்தகைக் காணிகள்!

## உரிமையாளருக்குப் பாதிப்பங்கு பணம்

புலிகள் கிழக்கில் தமது பகுதிகளில் சொந்தமாகச் செய்கை பண்ணப்படும் காணிகளினதும் குத்தகைக்கு விடுவோரின் காணிகளினதும் விபரங்களைத் திரட்டி வருகின்றனர். இவ்விபரங்களைச் சேகரிப்பதற்கு வட்டவிதானை என்றழைக்கப்படும் கண்டத்திற்குப் பொறுப்பான கமநல சேவகர்களினதும் உதவியைப் புலிகள் கேட்டுள்ளனர்.

இப்பொழுது தாம் சொந்தமாக நெற்காணிகளைச் செய்கை பண்ணுவோரிடமிருந்து புலிகள் கிரமமாக ஒரு தொகைப் பணத்தை அறவிட்டு வருகின்றனர். இதுதவிர நெற் காணிகளை வைத்திருந்தும் அவற்றை தாம் செய்யாது குத்தகைக்குக் கொடுத்து வருமானம் பெற்றுக் கொள்வோர் இனிமேல் தாம் நேரடியாக.... வேறு யாருக்கும் தமது காணிகளைக் குத்தகைக்குக் கொடுக்கமுடியாது. இத்தகைய காணிகளைப் புலிகள் பொறுப்பேற்று குத்தகைக்குச் செய்ய விரும்புவோருக்குக் கொடுத்து குத்தகைப் பணத்தில் பாதிப்பங்கையே காணிச் சொந்தக்காரர்களுக்கு வழங்கப் போவதாகத் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் பெரும்போகத்திலிருந்து புலிகள் இத்தகைய முறையைச் செயற்படுத்தவிருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே மட்பாண்ட வேலைக்காகக் களிமண் ஏற்றிவரும் மாட்டு வண்டில் காரர்களிடமும் புலிகள் வரி அறவிடுகின்றனர். வண்டிக்காரர்கள் புலிகளுக்கும் செலுத்தும் அதே வரியைத் தாம் செலுத்தி அதிகரித்த விலையில் களிமண்ணை வாங்குவதாக மட்பாண்ட வேலையிலீடுபடும் ஏழைப் பெண்கள் தெரிவிக்கிறார்கள். இப்பகுதிகளில் மாட்டு வண்டியில் கொண்டு வரப்படும் ஒரு களிமண் வண்டிக்குப் புலிகள் 25/= ரூபாவை வரியாக அறவிடுவதாகத் தெரியவருகிறது.

இது ஒருபுறமிருக்க ஜனநாயக வழிக்குத் திரும்பிப் படையினருடன் இணைந்து செயற்படும் சில அமைப்புக்கள் தாம் நிலைகொண்டுள்ள பகுதிகளில் வர்த்தகர்களிடமும் மற்றும் பொதுமக்களிடமும் அறவீடு செய்வதில் மிகுந்த அக்கறை செலுத்துகிறார்கள் என்று பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

## இனமோதலை தூண்டும் சதி முயற்சி!

## விழிப்பாக இருக்குமாறு முஸ்லிம்களுக்கு அறிவுறுத்தல்

(கண்டி நிருபர்)

மத்திய இலங்கையைச் சேர்ந்த முஸ்லிம் கிராமங்கள் பலவற்றில் அண்மைக் காலமாக இடம்பெற்றுள்ள வீதிப் போக்குவரத்து வாகன விபத்துக்களை முன்வைத்து பெரும்பான்மையின மக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் இனக்கலவரங்களை உருவாக்க எத்தனிப்பவர்கள் பற்றி விழிப்பாய் இருக்கும்படி முஸ்லிம் கிராமங்கள் வலியுறுத்தப் பட்டுள்ளன.

கடந்த இரு மாதங்களுக்கிடையில் அக்குறணை, மடவளை, திகன, உகுரஸ்ஸப்பிட்டிய, கஹட்டபிட்டிய போன்ற இடங்களில் பெரும்பான்மையினத்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் இடம்பெற்ற குரோதங்கள் இப்பொழுது உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதால் பெரும் கவலையும் அதிருப்தியும் முஸ்லிம்கள் மத்தியில் நிலவி வருவதைக் காண முடிகின்றது. வாகன விபத்துக்களில் கொல்லப்பட்ட சம்பவங்களின் பின்னர் வாகனம் எரிக்கப்படுவதும் உடைமைகள் சேதமாக்கப்படுவதும் இப்பகுதியில் சரளமாகிவிட்டன.

பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த கும்பல்கள் கூட்டமாகச் சென்று முஸ்லிம்களைப் பயமுறுத்தியும் - அச்சுறுத்தல்கள் மூலம் அவர்களின் ஆத்திரத்தை தூண்டிவிடும் சம்பவங்கள் பல அண்மைக் காலமாக நடைபெற்றவருவது குறித்து பரவலான அதிருப்தியும் கவலையும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி கண்டியைச் சூழ உள்ள முஸ்லிம் கிராமப்புறங்களில் இடம்பெறுவதால் இவற்றை முன்னோடியாகக் கொண்டு நாடு எங்கிலும் இனக்கலவரங்களை உருவாக்க எத்தனிக்கும் குழுக்கள் மீதோ நபர்கள் மீதோ மிக்க உன்னிப்பாக இருக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

முஸ்லிம் அமைச்சர், எம்.பிக்கள் மற்றும் அரசியல் வாதிகளுக்கு இவ்வாறான சம்பவங்கள் அறிவிக்கப்பட்ட உடனேயே அவர்கள் உரியவர்களுடன் தொடர்பு கொண்டு பதற்றத்தையும் கொந்தளிப்பையும் தடுத்து நிறுத்த உதவி வருவதன் மூலம் பாரிய விளைவுகள் இதன் மூலம் தடுக்கப்பட்டு வருவதாக பாதிக்கப்படும் முஸ்லிம்கள் முரசுக்குத் தெரிவித்தனர்.

எதிர்பாராத விதமாக இடம்பெறும் இவ்வாறான வீதி விபத்துக்கள் மற்றும் சம்பவங்கள் தொடர்பாக ஆராயும் காவல் பிரிவினர் ஆரம்பத்திலேயே காட்டும் பாரபட்சமே இவ்வாறான இனக்குரோதங்கள் மேலும் தலைதூக்க பின்னணியாக அமைவதாகவும் அவர்கள் குறை சாற்றுகின்றனர்.

## சொக்ஸியின் யோசனை மரணம்!

இனப்பிரச்சனை தீர்வுக்கு ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு காணமுடியும் என்று சொக்ஸி யோசனை தெரிவித்திருந்தார்.

ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான சொக்ஸி தெரிவித்த கருத்துக்களை உள்ளடக்கி நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஒரு ஆவணத்தை தயாரித்தார்.

'சொக்ஸியின் யோசனைகள்' என்ற பெயரோடு அந்த ஆவணம் பாராளுமன்ற தெரிவுக்குழு முன்பாகவும் நீதியமைச்சரால் முன்வைக்கப்பட்டது.

ஈ.பி.டி.பி., புளொட், ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ ஆகிய கட்சிகளின் கூட்டமைப்பு சொக்ஸியின் யோசனைகளை பரிசீலிக்க முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியும் சொக்ஸியின் யோசனை தமது கட்சியின் கருத்தல்லவென்று கூறியிருந்தது.

திரு.சொக்ஸியும் தான் ஏதோ சில கருத்துக்களை ஆலோசனையாக சொன்னதாகவும், அதற்கும் சொக்ஸியின் யோசனை என்று வெளியிடப்பட்ட ஆவணத்துக்கும் இடையே தொடர்பில்லை என்றும் கூறி விட்டார்.

இந்நிலையில் சொக்ஸியின் யோசனைகள் என்ற விடயத்தை தாம் கைவிட்டு விட்டதாக நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தமிழ் கட்சிகளிடம் தெரிவித்துள்ளார்.

## தமிழக தலைவர்களுக்கு அவசரத் தந்தி

## புலிகளின் சர்வதேச தலைமையகம் தீவிரம்!

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்கள் தமிழகத் தலைவர்களுக்கு தந்தியடிக்குமாறு புலிகளின் சர்வதேசத் தலைமையகம் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி, தமிழக எதிர்க்கட்சித் தலைவர், மற்றும் திராவிடர் கழக பொதுச் செயலாளர் கி. வீரமணி ஆகியோருக்குத் தந்திகள் அடிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தில் உலக நாடுகள் பாராமுகமாக இருக்கின்றன. இலங்கைத் தமிழர்களின் அவலக்குரல் உலக நாடுகளின் செவிகளில் ஏறவில்லை.

இந்நிலையில் இலங்கைத் தமிழர்களை பாதுகாக்கவும், அவர்களது கண்ணீரைத் துடைக்கவும் தமிழக அரசும், தமிழகத் தலைவர்களும் முன்வரவேண்டும். என்ற வாசகங்களுடன் தந்திகளை உடனடியாக அனுப்புமாறு புலிகளின் சர்வதேச தலைமையகம் கோரியுள்ளது.

தந்திகளை தமது 'ஃபக்ஸ்' இலக்கத்துக்கு அனுப்புமாறும், அவற்றை சேகரித்து உரியவர்களுக்கு தாம் அனுப்பிவைப்போம் என்றும் புலிகளின் சர்வதேச தலைமையகம் தெரிவித்துள்ளதுடன், தந்திகள் அனுப்ப வேண்டிய 'ஃபக்ஸ்' இலக்கத்தையும் வெளிநாட்டு தமிழ் பத்திரிகைகள், தனியார் தமிழ் வானொலி சேவைகள் மூலம் வெளியிட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழர் தலைமையைத் துணிவுடன் ஏற்றுக்கொண்டவர்

## 'தலைவர்' குமார் பொன்னம்பலம் மீதான விமர்சனங்களுக்கு ஒரு பதில்!

'வெளிநாட்டுத் தமிழ் பிரஜைகள் குழு' என்ற பெயரில் ஒரு பிரசுரம் இலண்டனில் தபாலிடப்பட்டு முரசுக்கு கிடைத்தது. நாம் அறிந்தவரை இப் பெயரில் ஒரு அமைப்பு எங்குமே கிடையவே கிடையாது. ஆனால் இப்பிரசுரம் இலண்டனில் தபாலிடப்பட்ட திகதியில் குமார் பொன்னம்பலமும் இலண்டனில் தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பிரசுரத்தைப் படித்த முத்தமிழன் எழுதிய பதிலை பக்கம் 7இல் பாருங்கள். அதற்கு முன் இப்பிரசுரத்தைப் படியுங்கள்.

அண்மைக் காலங்களில், குறிப்பாக அவுஸ்திரேலியா, இங்கிலாந்து சுற்றுப் பயணங்களின் பின் படிப்படியாக தமிழர்களின் தலைவனாகப் பரிணமித்து விட்ட தலைவர் குமார் பொன்னம்பலம் மீது பல்வேறு கோணங்களிலிருந்தும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

காய்க்கின்ற மரத்திற்கு கல்லெறி விழும் என்பது உண்மைதான், இருப் பினும் தமிழர்களின் தலைவனாகியுள்ள குமார் மீதான அவதூறுகளை முளையி லேயே கிள்ளியெறியும் நோக்குடனேயே இத்துண்டுப்பிரசுரம் வெளியிடப்படுகின்றது.

### யார் இவர்? என்ன செய்தவர்? என்ன செய்து கொண்டிருக்கிறார்?

அவதூறு பரப்புபவர்கள், முக்கிய மாக மேற்கண்ட கேள்விகளைக் கேட்கிறார் கள்! என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதற்கான பதில் அவர்களுக்கு இப் போது புரிந்திருக்கும்.... தமிழர்களைத் தலைமை தாங்கி வழி நடத்திக் கொண்டி ருக்கிறார்!

-யார் இவர், என்ன செய்து கொண்டி ருக்கிறார் என்பதற்கான பதில்களை, இங்கு சண்றைஸ் வானொலி நிகழ்ச்சியில் பலர் வினவ முயன்றபோது அவர் தலைவருக்கே உரிய தன்னடக்கத்துடன் 'கடந்த காலங்களை மறந்துவிடுவோம், உங்கள் மனச்சாட்சியைக் கேளுங்கள்.' என்று கூறித் தட்டிக் கழித்து விட்டாலும், ஒரு சில விடயங்களைக் கோடிட்டுக் காட்ட வேண்டியது தமிழ் பிரஜைகளாகிய எமது கடமையாகும்.

### யார் இவர்? என்ன செய்தார்?

தமிழர்களின் சாபக்கேடே இதுதான்! யாராவது ஒருவர் முன்னுக்கு வந்தால் "யார் இவர் என்று" பூர்வீகம் கேட்பது! இவர் ஒரு பிரபல வழக்கறிஞனின் மகன், பெரிய செல்வந்தன். கொழும்பில் சிங்களத் தலைவர்களுடன் சரிநிகர் சமானமாக நின்று பேசி, எழுதிவரும் துணிச்சல்காரன். வேண்டு மென்றால் தானுண்டு, தன் குடும்பமுண்டு என்று பேசாமல் இருந்திருக்கலாம். ஆனால் அவரது தமிழ்ப்பற்று, தேசப்பற்று அவரை அப்படி வாழ விடவில்லை. அதன் விளைவே இன்று தமிழ் மக்கள் அவர் மீது சுமத்திய கடமையை அவர் தன்னடக்கத்துடன் ஏற்றுக்கொண்டமை.

### தூரநோக்குள்ள தலைவனுக்கோர் எடுத்துக்காட்டு

70 களில் தமிழ்க் காங்கிரசும், தமிழரசுக் கட்சியும், இலங்கைத் தொழிலாளர் காங்கிர சும் இணைந்து கூட்டணி அமைத்து தமிழர் களின் ஒற்றுமையைக் காட்டவேணும் என்று முனைந்து செயற்படுகையில், இருபது வருடங்களின் பின் ஒற்றுமை, கூட்டணி என்பதெல்லாம் அர்த்தமற்றவையாகிவிடும் என்பதை அன்றே புரிந்து கொண்டதனால், அன்றிலிருந்து இன்றுவரை தனிமனிதனாக தமிழ்க் காங்கிரசைக் கட்டிக்காத்துவந்த பாதுகாவலன், தீர்க்கதரிசி!

### மாற்றுப் பாசறையின் மைந்தன்

சண்றைஸ் வானொலி (இலண்டன்) நிகழ்ச்சியில் 'ஏன் தமிழ்க் காங்கிரசும், விடு தலைப் புலிகள் இயக்கமும் இணைந்து கொள்ளக் கூடாது?' என்று நேயர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் 'புலிகள் ஒரு பாசறை எனில், நான் இன்னுமொரு பாசறையில் வளர்ந்தவன்' என்று சூசகமாகத் தலைவர் குறிப்பிட்டதைப் பலர் புரிந்திருக்க மாட்டீர்கள். ஆம் புலிகள் வீரத்தின் உறை விடம் என்றால், குமார் கல்வி, செல்வம், விவேகத்தின் உறைவிடம் என்று, அவர் தனது தன்னடக்கத்தை விட்டுச் சொல்லிவிடு வார் என்று நீங்கள் எப்படி எதிர்பார்க்க முடியும். ஆம் அன்றைய செல்வநாயகம்-பொன்னம்பலம் கூட்டணியை விட இன்றைய பிரபா- குமார் கூட்டணி பல மடங்கு பலம் வாய்ந்ததும், காத்திரமானதும் என்பதை தமிழ் மக்களில் புரிந்து கொள்ளாதவர்கள் எவரும் இருக்க முடியாது!

### முடிந்த முடிவு போராட்டமே!

வடக்கு கிழக்கிலுள்ள மக்களின் கோரிக்கை பற்றி அங்குள்ள மக்களின் அபிப்பிராயங்களையும் கேட்டாலென்ன என்று ஒருவர் வடகிழக்கில் இன்று வாழும் மக்களின் போராட்ட வேட்கையைக் கொச் சைப்படுத்த முயன்றபோது, நறுக்கென்று உணர்ச்சிவசப்பட்டு பதிலளித்தார் தலைவர்- சிங்கள அரசு, தமிழர்களின் தாயகக் கோட் பாட்டையும், சுயநிர்ணய உரிமையையும் நிபந்தனையற்ற முறையில் அங்கீகரித்தா லொழியப் போராட்டம் உக்கிரமாகத் தொடர வேண்டுமென்றே விரும்புகிறார்கள் என்பதே அவரது நீண்ட பதிலின் சுருக்கமாகும். அங்குள்ள மக்களின் உண்மையான போராட்ட மனநிலையைப் புரியாமல், ஒரு சில சுயநலக்காரர்கள் தமது பெற்றோர், உறவினர்களின் கடிதங்களை அடிப்படை யாக வைத்து, அங்குள்ள மக்கள் வாழ்வு சுமுக நிலைக்குத் திரும்புவதையே விரும்பு கிறார்கள் என்று பரப்பிய குழப்பமான கருத்துக்களுக்கு இது ஒரு நல்ல பதிலடியாக இருந்தது.

### வெளிநாட்டுத் தமிழர்கள் தளமாக அமைய வேண்டும்

தலைவர் குமார் இனங்கண்டிருக்கும் அதிமுக்கிய கடமை, வெளிநாட்டுத் தமிழர்கள் தமிழ் போராட்டத்திற்கான தலைமையை- அதாவது அரசியல் தலைமையைக் கொடுக்க முன்வரவேண்டும் என்ற அறைகூவல்.

இந்த விடயத்தில் தன்னடக்கம் என்று சுற்றி வளைக்காமல் நேரே விடயத்திற்கு வருவோம். இன்றைய வெளிநாட்டுத் தமிழீழ அரசியலின் நிலை என்ன? மக்கள் மத்தியில் விரக்தி, வெளிநாட்டு அரசுகள், கட்சிகளிலிருந்து தனிமைப் படுத்தப்பட்ட நிலை, பயங்கரவாதம் என்ற பெயர் வேறு, இயக்கத்தின் அச்சாணிகளாகச் செயற்பட்டு வந்த கனடா சுரேஷ், சுவிஸ் முரளி போன்றோர் கைது செய்யப்பட்டு மாதங்கள் பலவாகியும் விடுவிக்கப்படாத நிலை. இது ஒரு புறத்தில் வெற்றிடத்தைத் தோற்று வித்திருக்கின்றது. மறுபுறத்தில் கொழும் புத் தமிழ்க் குழுக்கள் விரைவில் அரசியல் வானிலிருந்து அகற்றப்பட்டதும் அங்கும் ஒரு வெற்றிட நிலை தோன்றப் போகின் றது என்று எதிர்பார்க்கப்படுகின்றது. - இந்நிலையில் தீர்க்கதரிசனத் தலைவர் வெளிநாட்டுத் தமிழர்களிடம் தலைமைப் பொறுப்பை ஏற்கும்படி கூறுவதில் என்ன தவறு இருக்கின்றது. வெளிநாட்டு தமிழர்களில் படித்தவர்கள் பலர் உள்ள னர். கத்தியைத் தீட்டிச் சாதித்த காலகட்டம் முடிந்து புத்தியைத் தீட்ட வேண்டிய காலகட்டத்தினுள் நுழைந்திருக்கும் தமிழினத்திற்கு வெளிநாட்டுத் தமிழர்கள் தலைமை தாங்கவேண்டும் என்ற தலைவ ரின் அறை கூவல் தீர்க்க தரிசனமானதும், விவேகமானதும் என்பதை எவரும் மறுக்க முடியாது. இந் நிலையில் வடக்கு-கிழக்கி லுள்ள மக்களின் விடுதலை வேட்கையை, போராட்ட உத்வேகத்தை மதித்து, வெளி நாட்டிலுள்ள தமிழர்கள் போராட்டம் உக்கிரமடைய இயலுமான கடமைகளைச் செய்வதுடன்- தலைமை ஏற்பதற்கும் தம்மைத் தயார் படுத்த வேண்டும் என்ற தலைவரின் அறைகூவலை செயற்படுத்த முன்வாருங்கள்- தொடர்ந்தும் தலை மையை அவதூறு செய்யாதீர்கள்.

▭ இப்பிரசுரம் கண்ட இன்ப அதிர்ச்சி யில் மூர்ச்சையாகிப் போன முத்தமிழனின் மடலை பக்கம்- 7ல் பார்க்கவும். ▭

## தமிழ் சேவை கேட்கவில்லை

நுவர எலியா, வெளிமடைக்கு மத்தியில் உள்ள சில்மியாபுர எனும் ஊரில் தமிழ்ச் சேவை- வர்த்தக சேவை தெளிவே இல்லா மல் இருக்கிறது. சில நாட்களில் காலையிலி ருந்து மாலைவரையும் ஒரு தமிழ்ச் சொல்லேனும் கேட்க முடியாமலிருக்கிறது.

சிலநாட்களில் F.M. சேவையில் காலை 8முதல் மாலை 4 வரையும்தான் கேட்க முடிகிறது. ஆனால் தமிழ்ச் சேவை இல் லாத நாட்கள் தான் அதிகம். பலமுறை அறிவித்தும் பலனில்லை. உரிய முறையில் நடவடிக்கை எடுத்து ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

எஸ். எம். ரஹமத் துல்லா, சில்லமியாபுர

## கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை!

(மன்னார் நிருபர்)

மன்னார்த் தீவுப் பகுதிக்கு 24 மணி நேரமும் மின் விநியோகம் மேற்கொள்வ தற்குத் தேவையான சகல வசதிகள் இருந்தும் அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் இதனை நடைமுறைப் படுத்துவதில் சிக்கல் தோன்றியுள்ளது.

இதனால் அண்மையில் புதிதாக கொண்டுவரப்பட்ட சுமார் 65 இலட்சம் ரூபா பெறுமதியான மின்சார இயந்திரங்கள் தூசி படிந்த நிலையில் காணப்படுகின்றன.

இலங்கை மின்சார சபைக்கும், மன்னார் பிரதேச சபைக்குமிடையில் நடைபெற்றுவரும் கயிறிழுப்புக் காரணமாக மின் விநியோகம் மேற்கொள்வதில் முறுகல் நிலை தோன்றி யுள்ளது.

மன்னார் நகர், பேசாலை போன்ற இடங்களுக்கான மின் விநியோகத்தை இங்குள்ள பிரதேச சபையே கவனித்து வருகிறது. இதனால் பிரதேச சபை மின்சார சபைக்கு சுமார் ஒரு கோடி முப்பது இலட்சம் ரூபா வரை பாக்கிப் பணமாக செலுத்த வேண்டியுள்ளது. இதனை செலுத்தி முடிக்காத வரை 24 மணி நேர மின் விநியோகம் நடைபெற எதுவித ஒத்துழைப் பையும் வழங்க மின்சார சபை மறுத்து வருகிறது.

கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலை யில் மன்னார்ப்பகுதி மக்கள் உள்ளனர்.

## "வழிபாட்டுத் தலம் வளர உதவுங்கள்"

கல்முனைக்குடி ஜும் ஆப் பள்ளிவாசல் இப்பகுதியில் உள்ள முஸ்லிம் வழிபாட்டுத் தலங்களில் மிகப் பழமை வாய்ந்ததாக இருந்துவருகிறது.

1806 ஆம் ஆண்டு ஓலையால் வேயப் பட்ட ஓர் இறை இல்லமாக ஆரம்பிக்கப்பட்ட இப்பள்ளிவாசல் இப்போது கற் கட்டிடமாக காட்சியளிக்கிறது.

ஆனாலும் மனுக்குலத்தின் பெருக்கத் திற்கு இவ்இறை இல்லத்தின் இடவசதி இப்போதைக்கு போதாது. இங்கு வாராந்த ஜும் ஆப் பிரசாரமும் ஐ வேளைத் தொழுகை யும் இடம்பெற்று வருகிறது.

காலத்திற்கு காலம் இப் பள்ளிவாசல் நிர்வாகிகள் மேற்கொள்ளப்பட்ட புனருத் தாரண வேலைகள் எதிர்பார்த்தளவு வெற்றி யளிக்கவில்லை.

இவ்விறை இல்லத்தின் இந்நிலை இன்னும் தொடரக் கூடாது என்பதே இங்கு வாழ் முஸ்லிம் மக்களின் ஏகோ பித்த கருத்து.

எனவே இங்குள்ள சகல கொடை வள்ளல்களும் இவ்வல்லாஹ்வின் ஆலயத் திற்கு வாரி வழங்கமுன்வர வேண்டும்.

அத்தோடு இலங்கையில் உள்ள எம்பசிகள் (தூதுவராலயம்) மூலம் அனைத்துலக முஸ்லிம் நாடுகள் ஊடாக திகாமடுள்ள மாவட்ட உறுப்பினர் அமைச்சர் அஷ்ரஃப் அவர்களும் முஸ்லிம் பாராளுமன்ற எம்பிக்களும் தொடர்பு கொண்டு இவ் வழிபாட்டுத் தலத்தின் வளர்ச்சிக்கு நிதி பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அல்லாஹ்வின் வீட்டை விஸ்தீரப் படுத்த அனைவரும் உதவுங்கள். அதுவே மக்கள் குரல்!

எம்.சி.கலீல்,கல்முனை-05.


## மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHIATRIST)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

ஆகஸ்ட் 18 முதல் 31 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10. RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST..) COLOMBO 11. T.P. 436383, 436390 Fax : 436439 செப்டம்பர் 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்சரி, ஓட்டமாவடியிலும், செப்டம்பர் 7,8,9 தினங்களில் கல்முனை T.M.M.பாமசியிலும், மற்ற நாட்களில் DR. P. ARUMUGAM No: 50, TISSA WEERASINGAM SQ.. BOUNDRY ROAD. BATTICALOAவிலும் சந்திக்கலாம்.

## பெண் விற்பனையாளர் தேவை

கொழும்பில் இயங்கிவரும் பிரபல புத்தகசாலைக்கு அனுபவம் வாய்ந்த பெண் விற்பனையாளர் தேவை. கொழும்பில் வசிப்பவரும் கல்வித் தராதரமும் புத்தக விற்பனை, அலுவலக கடிதத் தொடர்பு செய்யக் கூடியவரும்,20-35 வயதுக்கு உட் பட்டவருமாய் இருத்தல் வேண்டும் சான்றிதழ்களுடன் இருவாரங்களுக் குள் கடிதம் மூலம் விண்ணப்பிக்கவும்.

Advertiser
C/O. Sunbeam Advts
99, Main st. Colombo-11

## Bright ன் தபால் மூலம் கல்வித்திட்டம்

மூன்றே மாதங்களில்
ஆங்கிலம்/ சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத் தரப்படும்
விபரங்களுக்கு கீழ்க்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க.

பெயர்.............................
விலாசம்.............................

BRIGHT BOOK CENTRE (PVT) LTD
S-27, FIRST FLOOR, P.O.BOX 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX.
COLOMBO 11. TEL : 434770

## தேவை

கீழ்வரும் இடங்களுக்கு தினமுரசு விற்பனை முகவர்கள் தேவைப்படுகின்றார்கள்.
விண்ணப்பிக்கவும்

Kahatagasdigiliya
Hemmathagama
Dambadeniya
Deraniyagala
Polgahawala
Welikanda
Hakmana
Hettipola
Hali-Ela
Kegalle
Ragama
Ampara
Welipanna
Akuressa
Nivitigala
Kalawana

விநியோக முகாமையாளர்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772, கொழும்பு.

## என்றும் சந்திக்கலாம்

எங்களது வாடிக்கையாளர்களின் வீண் சிரமத்தையும் அலைச்சலையும் கருத்தில் கொண்டு திரு. P.K.சாமி அவர்களிடம் நுவரெலி யாவிலும் கொழும்பிலும் வரும் வாடிக்கை யாளர்கள் நேரடியாக அவரவர் பிரச்சனை களைக் கூறி தீர்வுக்கான புதுமுறையாக செட்லைட் நெட்வேர்க், T.V. மூலம் திரு.P.K. சாமியுடம் கலந்துரையாடலாம்.

## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

சந்திரன்
144 21 காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06
T.P: 586218, 078-63611
Fax: 503030



## 3 மாதத்தில் தீர்வு

கணவன்-மனைவி பிணக்கு, பிரிந்தவர் ஒன்று சேர, காதலித்தவர் திருமணம் புரிய, தொழில் உயர்ச்சியை மேம்படுத்த, வீழ்ச்சியுற்ற தொழிலை வீழ்ச்சி அடையா வண்ணம் இருந்த நிலைக்கு 3 மாதத்திற்குள் கொண்டு வர, எண்ணிய தொழில் கிடைக்க, திருமணமே ஆகாதோர் விரக்தி உற்றோருக்கு தெய்வீக வரத்தால் திருமணம் நடைபெற இன்னும் முனிவர்களால் அருளிய ஜீவிய கால காண்டம்-நாடி ஜோதிடம் எழுதிக் கொள்ள, அக்குபஞ்சர் சிகிச்சை மூலம் காது கேளாதவர், கண் தெரியாதவர், வாய்பேச முடியாதவர்கள், பாரிச வாதம், முடக்கு வாதம், இடுப்பு வலி, அஸ்மா, படபடப்பு, வீரியமின்மை, பெண்களுக்கு வெள்ளைபடுதல், மாதவிடாய் கோளாறு, மனநோய் (ஹிஸ்டீரியா) குழந்தை பேறின்மை, பாலியல் குறைபாடுகள், ஞாபக சக்தி இன்மை, நித்திரை இன்மை, பசியின்மை, தலை முடி உதிர்தல், தோல், நோய் இப்படி தீர்க்க முடியாத வியாதிகளுக்கு மனோதத்துவ ரீதியிலும், வைத்திய முறையிலும், மாந்திரீக முறைகளிலும் வெற்றி கண்டவர். எத்தனை எத்தனையோ பேர்-இதைவிட பெரிய சக்தி வந்தாரை வாழவைக்கும் மகாசக்தி ஸ்ரீ துர்கா தேவியின் அருளால் வசதி அற்றோருக்கு ஏமாத கடைசியும் கொழும்பிலும், நுவரெலியாவிலும் இலவச அற்புத ஞான தியான பூஜை நடைபெறுகிறது. தேவைகளுக்கு முன் அறிவித்தலுடன் தொடர்புகொள்ளவும். தொடர்புகளுக்கு-

P.K.SAAMI (J.D.G.A.N) & J P, மலையாள மாந்திரீக உச்சாடனம், 162, கொட்டாஞ்சேனை வீதி, லேபேர்ட் ரோட், கொழும்பு -13.
தொலைபேசி - 01.342463/64 344832 விசேட பிரிவு - 344831 EXT FAS

விளம்பரப் பகுதி

## பாகிஸ்தான் குவ்வத்தே பஹார்

Quwathe Bahar

இது முற்றிலும் இஸ்லாமிய முறைப்படி தயாரிக்கப்பட்டது.
முளைப்பலவீனத்தைப் போக்கி உடம்புக்கு புஷ்டியைத் தரும்.
இழந்த சக்தியை மீட்டு தரும்.
வயது வந்தவர்களுக்கு மிகச் சிறந்தது.
தபாற் செலவு உட்பட விலை ரூபா 190/=
For one month use

QUATHE BAHAR
310/2 BULUGOHOTENNA
(off Neerella Road)
AKURANA.

## ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சியின் வருடாந்த மாநாடு

முஸ்லிம் கட்சி
THE MUSLIM PARTY

16.08.96
வெள்ளி மாலை
பொத்துவில்
சந்தை சதுக்கத்தில்.



அனைவரையும்
அன்புடன்
அழைக்கிறோம்.

முஸ்லிம்களின் தாகம் சமத்துவத் தாயகம்




படிப்பகம்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# யாழில் சீர்குலைப்பு தந்திரம்

# வன்னியில் போர்முனைப்பு உக்கிரம்

நாரதர்



'சத்ய ஜெய' நடவடிக்கை மூலமாக வன்னிப்போர்முனை பற்றி போரிடும் இரு தரப்புக்களும் ஒரு கணிப்புக்கு வந்திருக்க முடியும்.

வன்னியின் ஒரு பகுதிதான் கிளிநொச்சி மாவட்டம். ஆனையிறவில் இருந்து கிளிநொச்சிமாவட்டத்தின் ஒரு பகுதியான பரந்தன்வரையுள்ள பகுதியின் தரையமைப்பு மரபுப்போர்முறைக்கு மிகவும் சுலபமானது.

பரந்தனில் இருந்து கிளிநொச்சிநகர் வரையான தரைப்பகுதி கெரில்லா இராணுவ மறைந்திருந்து நிலையெடுத்துத் தாக்கக் கூடிய தரையமைப்பைக் கொண்டிருக்கிறது.

எனவே-கிளிநொச்சி நகரை அண்டிய காடுபிரதேசங்கள்வரை படையினர் சென்றடையவே கடும் மோதலைச் சந்திக்க வேண்டியிருந்தது.

தற்போது கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு சிறுபகுதியை படையினர் தம்வசப்படுத்திக் கொண்டபோதும் அங்கு நிலைகொண்டிருப்பதற்கு புலிகளின் கடும் எதிர்ப்பை சந்தித்தாக வேண்டும்.

படைத்தரப்பு வெளியிடும் அறிக்கைகளில் புலிகள் தொடர்ந்தும் பலத்த பதிலடிகளில் ஈடுபட்டுவருவதாகவே தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி நகர் நோக்கி முன்னேறிய டாங்கிப் பிரிவினர்மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டதாக படைத்தரப்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

தங்கள் தாக்குதல் முயற்சியால் டாங்கிப் படையணிக்கு பாரிய தாக்கம் ஏற்படுத்தப்பட்டதாக புலிகள் கூறியிருந்தனர்.

அதன் பின்னரே கிளிநொச்சி நகர் நோக்கிய முன்னேற்றம் தடைப்பட்டதாக புலிகள் கூறினார்கள்.

எனினும் கிளிநொச்சி நகரை நோக்கி படைத்தரப்பினர் செல்ல தாமதித்ததையாது புலிகளின் கிடுக்குப் பிடியில் சிக்காமல் இருப்பதற்காகவே என்பது புலனாகியது.

சூரியக்கதிர் மூலம் யாழ் நகரை கைப்பற்றியதைவிட 'சத்ய ஜெய' மூலம் கிளிநொச்சி நகரை கைப்பற்றுவது படையினருக்கு கடினமானதாகவிருந்ததையாது புலிகளின் தாக்குதல் திறன் அங்கு மேலோங்கியிருப்பதையே காட்டுகிறது.

'சத்ய ஜெய' இரண்டாம் கட்ட நடவடிக்கைக்கு எதிரான தமது பதில் தாக்குதல் யுத்தத்தில் பலியானதாக இதுவரை 60 புலிகளின் பெயர்களை புலிகள் தரப்பு வெளியிட்டுள்ளது.

4.08.96, 5.08.96 ஆகிய இரு தினங்களில் நடைபெற்ற மோதலில் மட்டும் தமது தரப்பில் ஐம்பத்தொரு புலிகள் பலியானதாக புலிகளின் தரப்பு தெரிவித்திருந்தது.

படைத்தரப்பினர் வெளியிட்ட தகவல்களின்படி சத்ஜெய இரண்டாம் கட்ட நடவடிக்கையில் 75 படையினர் பலியானதாகவும், 115 இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னூறுக்கு மேற்பட்ட புலிகள் வரை பலியானதாகவும் படைத்தரப்பு கூறியிருந்தது.

யாழ்-குடாநாட்டில் கிடைத்த அனுபவம் போல வன்னிப்போர் முனையிலும் புலிகளை விரைவாக பின்வாங்கச் செய்துவிடலாம் என்று படைத்தரப்பு எதிர்பார்த்திருந்ததால் முதல் கனத்திலேயே ஏமாற்றம் கிடைத்திருக்கிறது.

யாழ்-குடாநாட்டில் 'இடி முழக்கம்' நடவடிக்கைக்கு பதிலடியாக புலிகள் ஒரு ஊடுருவும் அதிரடித் தாக்குதலில் ஈடுபட்டனர். முன்கூட்டியே அவ்வாறான ஒரு தாக்குதலை எதிர்பார்த்திருந்த படையினர் தமது வியூகத்துக்குள் புலிகளை உள்ளே இழுத்து பலத்த தாக்குதல் நடத்தினர்.

நூற்றுக்கு மேற்பட்ட புலிகள் அத் தாக்குதலில் பலியானார்கள். அதன் மூலம் படைத்தரப்பினரின் உற்சாகமும் அதிகமாகியது.

படைத்தரப்பினரின் பலம், வெலி ஓயா, மற்றும் இடி முழக்கத் தாக்குதலில் புலிகளை தோற்கடித்ததனால் படைத்தரப்பினரிடம் ஏற்பட்ட மனோபல உயர்வு, யாழ்-குடா நாட்டு தரையமைப்பு, கள நிலவரம் என்று அனைத்தையும் கணிப்பிட்ட பிரபாகரன் வன்னியை நோக்கிப் பின்வாங்கும் முடிவை எடுத்திருந்தார்.

எனினும், பதிற் தாக்குதலே இல்லாமல் படையினரை முன்னேறவிட்டால் அடுத்த கட்ட தாக்குதல்களுக்கான உற்சாகமும் நம்பிக்கையும் படையினரிடம் பெருகிவிடும்.

வன்னியில் தாம் நிலைகொண்டு தயாராவதற்கிடையில்கூட படையினர் தம்பின்னால் வரக்கூடும் என்ற காரணங்களால் யாழ்-குடாநாட்டில் அடையாள எதிர்ப்பையே புலிகள் காண்பித்தார்கள்.

பின்வாங்குவது என்று முடிவு செய்யப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் உக்கிரம் இருக்காது. வெற்றி அல்லது மரணம் என்ற உத்வேகம் காணப்படாது.

எனவே-யாழ் குடாநாட்டில் பின்வாங்கும் முடிவோடு புலிகள் போரிட்டனர். படையினரோ எப்படியாவது யாழ் குடாநாட்டை பிடித்தே தீருவது என்ற உத்வேகத்துடன் போரிட்டனர்.

ஆனால், வன்னி நிலவரம் நேர் எதிர். வன்னித்தளத்தை விட்டுக்கொடுத்தால் புலிகளுக்கு அதைவிட உயர்வான வேறு ஒரு தளப்பிரதேசம் கிடைக்கப்போவதில்லை.

முன்னர் தமிழ்நாடு பின்தளப் பிரதேசம் போல இருந்தமையால் அங்கு சென்று இருந்து கொண்டு தமது நடவடிக்கைகளை திட்டமிடவும், விநியோகங்களை மேற்கொள்ளவும் முடிந்தது.

இப்போது தமிழ்நாட்டுக்குச் செல்ல முடியாது. தமது சொந்தப் பலத்தை மட்டுமே நம்பி, வன்னித் தளத்தை பாதுகாத்துக் கொண்டு செயற்படவேண்டிய கட்டாயம் புலிகளுக்கு இருக்கிறது.

எனவே-வன்னித் தளம் என்பது புலிகளின் உயிர் முடிச்சுப் போன்றது. அங்குதான் பிரபாகரனும் இருக்கிறார். யாழ் குடாநாட்டில் இருந்து பின்வாங்கச் செய்யப்பட்ட அணிகளின் முழுப்பலமும் அங்குதான் குவிந்து கிடக்கிறது.

வன்னித் தளத்தைப் பொறுத்தவரை 'வெற்றி அல்லது வீரமரணம்' என்றரீதியில்தான் புலிகளின் அணிகள் களத்தில் இறங்கும்.

வன்னித் தளத்தை பாதுகாக்கக்கூடியளவுக்கு ஆட்பலம் புலிகளிடம் இருக்கிறதா? என்று கேள்வி எழக்கூடும்.

வன்னியில் முன்னேறும் படையினரை நேரடியாக எதிர்கொண்டு மரபுப் போர் முறையில் சண்டையிடும் அவசியம் புலிகளுக்கு அதிகமாக இருக்காது.

காட்டுப்பகுதிகள், பெரும் நிலப்பரப்புக்கள் என்பவை வன்னியின் தரையமைப்பாக உள்ளன. குடிசன அடர்த்தி குறைவாகவும் நிலப்பரப்பு பெரிதாகவும் உள்ளதால், அங்கு பரந்து நிலை கொள்வதற்கு படையினருக்கும் ஆட்பலம் பாரியளவில் தேவை.

அதுதவிர, குடிசன அடர்த்தியில்லாத நிலப்பரப்பில் நீண்டு பரந்து நிலைகொண்டிருக்கும்போது புலிகளின் மோட்டார் தாக்குதல்கள், ஆட்டிலறி ஷெல் தாக்குதல்களால் பாரிய தாக்கங்களும் ஏற்படக்கூடும்.

யாழ்-குடாநாடு புலிகளின் தளப்பிரதேசமாக இருந்த நிலை மாறியுள்ளதே தவிர, யாழ்-குடாநாட்டில் தற்போதும் புலிகளின் அணிகளும், ஊடுருவல்களும் இருந்து கொண்டே இருக்கின்றன.

யாழ்-குடாநாட்டில் படையினர் நிலைகொள்ளாத பகுதிகளில் புலிகளின் நடமாடும் கெரில்லா அணிகள் தங்கியிருக்கின்றன.

1035 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட யாழ் குடாநாட்டில்கூட சகல பகுதிகளிலும் படையினர் நிலைகொள்ள முடியாமல் இருக்கிறது.

இந்நிலையில் 8885 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட வன்னி பெரு நிலப்பரப்பில் படையினர் பரந்து நிலைகொள்வது என்பது இலகுவான விடயமல்ல.

யாழ் குடாநாட்டுப் போர் முனையில் புலிகளுக்கு படையினர் பின்னடைவைக் கொடுத்தனர்.

ஆனால், தற்போதுள்ள நிலவரப்படி யாழ்-குடாநாட்டில் இருந்து புலிகள் பின்வாங்கியதானது, போர்த்தந்திர ரீதியில் சின்ன மீனைப் போட்டு பெரிய மீனைப் பிடித்தது போலாகிவிட்டது.

1035 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள பகுதியை இழந்த அதே சமயத்தில் 8885 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட பகுதியை புலிகள் தக்கவைத்துக்கொண்டுள்ளனர்.

யாழ் குடாநாட்டையும், வன்னியையும் ஒரே நேரத்தில் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது புலிகளது சக்திக்கு மீறிய காரியமாகும்.

அதே நேரம் யாழ் குடாநாட்டுக்குள் புலிகள் கெரில்லா தாக்குதல்களில் ஈடுபடமுடியும். அதன் மூலம் யாழ்-குடாநாட்டில் படையினர் கணிசமானளவு நிலைகொண்டிருக்க வேண்டிய தேவையையும் புலிகள் ஏற்படுத்துகின்றனர்.

வடபுலப் போரில் படையினரின் பலத்தில் பெரும்பகுதி யாழ் குடாநாட்டு கட்டுப்பாட்டை தக்கவைக்க தேவைப்படுகிறது.

எனவே-வன்னிப் பகுதிக்கு யாழ் குடாநாட்டு படையினரை நகர்த்துவது சிரமம். அவ்வாறு நகர்த்தினால் யாழ் குடாநாட்டில் புலிகளின் அணிகள் பெருமளவு ஊடுருவி பெரும் தாக்குதல்களில் ஈடுபடலாம்.

யாழ்-குடாநாட்டை கைவிட்டு வன்னிப் பகுதி நோக்கி செல்ல நினைத்தால் அரசாங்கம் அரசியல் ரீதியில் யாழ் குடாநாட்டு வெற்றி குறித்து செய்த பிரசாரங்கள் அடிபட்டுப் போய்விடும்.

ஏற்கெனவே கிழக்கின் சில பகுதிகளை போர்த்தந்திர ரீதியில் புலிகளிடம் விட்டுக் கொடுத்துக்கொண்டுதான் யாழ் குடாநாட்டில் படைபலத்தை ஒன்று குவித்து படைத்தரப்பு போரிட்டது.

இந்நிலையில் வன்னிப் பெரு நிலப்பரப்பில் முழுவதுமாக நிலைகொள்ள வேண்டுமானால், யாழ்-குடாநாட்டில் உள்ளதைவிட பலமடங்கு படை பலத்தையும் யாழ் குடாநாட்டுப் போரில் ஏற்படாதளவுக்கு பல மடங்கு இழப்பையும் பிரயோகித்தும், சந்தித்துமே படைத்தரப்பு முன்னேற வேண்டியிருக்கும்.

அரசாங்கத்திற்கும், படைத்தரப்புக்கும் பல கடப்பாடுகள் இருக்கின்றன.

எங்கே சறுக்குவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சிகளிடம் பொல்லைக் கொடுத்து அடிவாங்காமல் இருக்க வேண்டும்.

தாம் கைப்பற்றிய பகுதிகளை கைவிடாமல் பாதுகாத்தாக வேண்டும்.

வடபுலத்தில் மட்டுமல்லாமல் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பாதுகாப்பு நிலவரத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

போர் முனைச் செய்திகளை பூரணமாக வெளியிட்டாலும் பிரச்சனை. வெளியிடாவிட்டாலும் பிரச்சனை.

இந்த நெருக்கடிகள் எதுவும் புலிகளுக்கில்லை. வன்னித் தளப்பிரதேசத்தை பாதுகாப்பது என்பது பிரதானமான நோக்கம் என்று புலிகள் முடிவு செய்துவிட்டால், பின்னர் வேறெந்த கவலையுமே இல்லாமல் காய்களை நகர்த்திக் கொண்டே இருக்க முடியும்.

ஒரு சண்டையில் தோல்வி கண்டாலோ, அல்லது புலிகள் உண்மை விபரங்களை வெளியிடவேண்டும் என்றோ யாருமே புலிகளை நிர்ப்பந்தப்படுத்த முடியாது.

எனவே-வன்னித் தளத்தை பாதுகாப்பது என்ற ரீதியில் வடபுலத்திலும், கிழக்கிலும், ஏன் நாட்டின் ஏனைய பகுதிகளிலும்கூட புலிகள் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியும். அதன் மூலம் படைத்தரப்பின் முழுப் பலமும் தமது பிரதான தளப்பிரதேசத்தை நோக்கித் திரும்பாமல் புலிகளால் தடுக்க முடியும்.

ஆனால், அரசாங்கத்தைப் பொறுத்தவரை வன்னித் தளப் பிரதேசத்தை மட்டும் பிடித்தால் போதும் என்று ஏனைய பகுதிகளையெல்லாம் கைவிட்டுவிட்டுப் போய் சண்டையிட முடியாது.

அதுதவிர, வன்னித் தளப்பிரதேசத்தில் தமது முழுப்பலத்தையும் பாவிக்கப் புலிகள் நினைத்தால், ஏனைய பகுதிகளிலுள்ள தமது அணிகளை இரகசியமாக அங்கு தருவித்துக் கொள்வார்கள்.

படையினரைப் பொறுத்தவரை அவர்களது நகர்வுகள் எப்படியோ தெரிந்துவிடுகின்றன. உள்நாட்டில் செய்தித் தணிக்கை இருந்தாலும்கூட, வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் மூலமாக வானலை வழியாக தகவல்கள் கசிந்து விடுகின்றன.

அது தவிர படையினரின் முகாம்கள் பகிரங்கமானவை. எனவே-புலிகளும் தமது உளவுப்பிரிவினர் மூலமாக படையினரின் நகர்வுகள், ஒன்று குவிப்புக்கள் பற்றி மோப்பம் பிடித்து விடுகின்றனர்.

எனவே-பலவீனமான பகுதியைக் கண்டறிந்து புலிகள் தாக்குதல் நடத்திவிடுகின்றனர். இந்த வாய்ப்பு படையினருக்கு இல்லை. புலிகளின் முகாம்கள் இரகசியமானவை. நகர்வுகளும் இரகசியமானவை.

எனவே-ஒரு முகாமில் இருக்கும் படையினரில் ஒரு குறிப்பிட்ட பகுதியினரை பிறிதொரு பகுதிக்கு அனுப்பும்போது குறிப்பிட்ட முகாமை மூடவேண்டிய அவசியம் படையினருக்கு ஏற்படுகிறது.

அவ்வாறான நேரத்தில் குறிப்பிட்ட பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் சென்றுவிடுகிறது.

ஆக, ஒன்றைப் பிடிக்க வேண்டும் என்றால் இன்னொன்றை புலிகளிடம் இழக்க வேண்டி ஏற்படுகிறது. ஆனால், படையினர் தம் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியை பாதுகாக்க அங்கே நிலைகொண்டேயாக வேண்டும். புலிகளுக்கு அந்தக் கட்டாயம் இல்லை.

தமது கட்டுப்பாட்டு பகுதியை நாலு புலிகள் கூட நிர்வகித்துவர முடியும். ஆனால் அதே பகுதியை படையினர் நிர்வகிப்பதானால் நாலாயிரம் பேர் தேவை. பெரும் முகாம் தேவை.

அதனால் தந்திரோபாயமாக தாம் கைவிடும் பகுதிகளில் புலிகளின் பலத்தில் ஒரு பகுதியை தேக்கிவைத்திருக்கும் லாபமும் படையினருக்கு ஏற்படுவதில்லை.

அதாவது சின்ன மீனைப் போட்டு பெரிய மீனைப் பிடிக்கும் தந்திரம் புலிகளுக்கு சரிப்பட்டுவருமே தவிர, படையினருக்கு தோதாக அமையாது.

இன்று தலைநகரைப் பாதுகாக்க பாரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன. ஆனால் புலிகளின் தலைமைச் செயலகத்தை பாதுகாக்க அதேயளவு ஏற்பாடுகள் தேவையில்லை. காரணம், புலிகளின் தலைமைச் செயலகம் எங்கேயிருக்கிறது என்று எவருக்குமே தெரியாது.

தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பகிரங்கமாகவும், அரச கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தலைமறைவாகவும் இயங்கும் சக்திமிக்க ஒரு கெரில்லா அமைப்பை எதிர்கொள்வது என்பது சுலபமான காரியமல்ல. படைபல பெருக்கத்தின் மூலமாக அதனை சுலபமாக்குவதும் சக்திக்கு மீறிய ஒரு நினைப்பாகவே இருக்கும்.

இதேவேளை யாழ்-குடாநாட்டில் புலிகள் மற்றொரு இலக்கையும் குறிவைத்துள்ளனர்.

சிவில் நிர்வாகம் சீராக இயங்காமல் சீர்குலைவு நடவடிக்கைகளில் ஈடுபடுவதுதான் புலிகளின் நோக்கம்.

இதன்மூலம் யாழ்-குடாநாட்டு மக்களுக்கு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தை விட மேம்பட்ட ஒரு சிவில் நிர்வாகத்தை வழங்கி 'மக்கள் மனங்களை' வென்றெடுக்கும் அரசின் திட்டத்தை முறியடிப்பதுதான் புலிகளின் நோக்கம்.

சிவில் நிர்வாகத்தில் ஈடுபடும் சிவில் உத்தியோகத்தர்கள் புலிகளால் அச்சுறுத்தப்படலாம். அதனால் சிவில் நிர்வாகப் பணிகளின் சுமையும் படையினரின் தோள்களில் மாறிவிடும்.

யாழ்-குடாநாட்டில் தொலைபேசி சேவை, மின்சார சேவைகளை வழங்கினாலும், அவற்றுக்கு கடும் பாதுகாப்பு வழங்க வேண்டியிருக்கும்.

இப்போது யாழ்பாணத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு படையினர் குறிப்பிட்ட நேரம் மட்டும் மின்சாரம் வழங்குகின்றனர். ஜெனரேட்டர் மூலமே மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆனால் அந்த ஜெனரேட்டர்கள் படையினரின் முகாம்களுக்குள்தான் இருந்தாக வேண்டும்.

தற்போது தொலைபேசி வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றுக்கும் பாதுகாப்பு வழங்குவது ஒரு பிரச்சனையாகவே இருக்கும்.

எனவே-யாழ் குடாநாட்டில் புலிகளின் தாக்குதல்களில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதுடன், அங்கு உணவு, மற்றும் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த எந்தவொரு நடவடிக்கைக்கும் பாதுகாப்பு வழங்கும் தேவையும் படையினருக்கு ஏற்பட்டுள்ளது.

ஆக, யாழ் குடாநாட்டில் உள்ள படையினருக்கு அவர்கள் தலைக்கு மேலே பல வேலைகளை சுமத்தியபடியே வன்னித் தளப்பிரதேசத்தை தம்வசம் வைத்திருக்கும் பிரதான நோக்கத்தை புலிகள் கொண்டிருக்கிறார்கள்.

இனிமேல்தான் யாழ் குடாநாட்டு நிலவரம் மேலும் சிக்கிலானதாகக் கூடும்.

புலிகளின் நடவடிக்கைகளுக்கு அப்பால் தமது பலத்தால் மட்டும் யாழ்-குடாநாடு நிலவரத்தை அரசாங்கம் சீர்படுத்த முடியாது. முல்லைத் தாக்குதலையடுத்து யாழ்ப்பாணத்துக்கான கடல் போக்குவரத்து சீர்குலைந்தமையே அதற்கு ஒரு சான்றாகும்.

யாழ்-குடாநாட்டுக்கு வந்த மக்களுக்கு போக்குவரத்தைக்கூட ஒழுங்காக நடத்திக் கொடுக்க முடியாத நிலைக்கு உள்ளாகியிருக்கிறது அராசங்கம்.

கொழும்புக்கு வந்த பலர் யாழ் திரும்ப முடியாமல் தவிக்கின்றனர். புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள மக்களை யாழ் வருமாறு அழைத்தது அரசு.

இப்போது தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் உள்ள யாழ் மக்களைக்கூட யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்க முடியாமல் இருக்கிறது.

சிவில் நிர்வாக சீர்குலைப்பு என்ற புலிகளின் இலக்கில் மக்களின் போக்குவரத்து என்பதும் ஒரு அம்சமாகவே இருக்கும். அதனை நேரடியாக செய்யாமல் கடற்படையினர் மீதான தாக்குதல் என்ற மறைமுக வழி மூலம் புலிகள் மேற்கொள்வர்.

எப்படியோ, யாழ்-குடாநாட்டில் படையினர் நிலைகொண்டிருப்பதை புலிகள் தமக்கு சாதகமாக பயன்படுத்தும் தந்திரோபாயத்தில் இறங்கிவிட்டனர்.

ஒரு தோல்வியை எப்படி வெற்றியாக்குவது என்றரீதியில் புலிகளின் போர்த்தந்திரம் அமைந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 'சத்ய ஜெய' நடவடிக்கையின் இரண்டாம் கட்டமானது வன்னிப் போர் முனையில் புலிகளின் கெரில்லா இராணுவ தந்திரங்களையும், போர் முறைகளையும் குறைத்து மதிப்பிட முடியாது என்பதைக் காட்டியிருக்கின்றன.

கெரில்லா இராணுவத்துக்கு சாதகமான தரைப்பகுதியில் டாங்கிப் படையணிகள் முன்னேறுவதுகூட கடினம் என்பதும் பரீட்சார்த்தமாக கண்டறியப்பட்டுள்ளது.

தற்போது கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரை மீண்டும் ஆனையிறவுக்கோ, அல்லது பரந்தனுக்கோ திருப்பியனுப்புவதில் புலிகள் உக்கிரம் காட்டுவார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மொத்த விஸ்தீரணம் 1279 சதுர கிலோ மீட்டர். இதில் கிட்டத்தட்ட 44 சதுர கிலோ மீட்டர் நீர்நிலைகள்.

தற்போது 'சத்யஜெய' மூலம் கிட்டத்தட்ட 13 சதுரகிலோ மீட்டர் பரப்பரளவுதான் படையினரின் வசம் சென்றுள்ளது.

இதனைக் கைப்பற்றவும், தக்கவைக்கவுமே பலத்த எதிர்ப்புக்களை சந்திக்க வேண்டியதாகியது. எனவே வன்னிப் போர்க்கள நிலவரமும், அரசாங்கத்தின் காலவரையறைக் கணிப்புக்களும் பொருந்துகிறமாதிரித் தெரிகிறதா? என்பது கேள்விக்குறிதான். ○

## அதிரடி அய்யாத்துரை



கல்வித் திணைக்கள அலுவலர் ஒருவருக்கு கெட்ட நேரம். சுற்று நிருபம் ஒன்றில் சிறீலங்கா என்பதற்குப் பதிலாக 'இலங்கை' என்று குறிப்பிட்டு விட்டாராம். அதனை அறிந்த மேலதிகாரிகள் துள்ளியெழுந்து பாய்ந்தார்களாம். அந்த அலுவலர் செந்தமிழ் மொழியினர் என்பதால் அவர் நோக்கத்திலும் சந்தேகம் ஏற்பட்டதாம். இப்போது மேல் விசாரணை நடப்பதாகவும் கேள்வி.

தலைநகரில் தெகிவளையில் விஷ்ணு கோயில் இருப்பது தலைநகர பக்தர்களுக்கு தெரிந்த சமாச்சாரம். ஞாயிற்று கிழமைகளில் கூட்டம் அலை மோதும். போய் வரும் பக்தர்களிடம் சந்தோசமாக காணிக்கை வாங்கும் காரியத்தில் சிலர் ஈடுபட்டுள்ளனராம். அதன் மூலம் நல்ல வரும்படி கிடைக்கிறதாம். கோயில் உண்டியலில் பணம் போடாமல் குறுக்கே நிற்பவர்களின் கையில் போடவேண்டியிருக்கு எண்டு பக்தர்கள் சிலர் கவலைப்படுகினம். போடாவிட்டால் உள்ளே போகவேண்டி வருமல்லோ. வேலிகள் பயிர்களிடம் காணிக்கை கேட்கலாமோ?

வவுனியாவிலிருந்து அலவாங்கு, மண்வெட்டி வாங்கி கொண்டு போறது கஷ்டம். தடைமுகாமில் தடை. ரெண்டு எழுத்தார் பாவிக்கக்கூடிய பொருட்கள் எண்டு பல அயிட்டங்களுக்கு தடையிருப்பதும் தெரிந்த விசயம். சில நியாயமும் தடையில் இருக்குத்தானே எண்டு ஒரு நண்பரிடம் சொன்னேன். சொன்ன நேரம் சரியில்லை. ஒரு முறைப்பு முறைத்துவிட்டு கேட்டார் பாருங்கோ ஒரு கேள்வி: "ரெண்டு எழுத்தாருக்கு தேவையானதை அவை அங்கேயே எடுத்துக் கொள்ளுகினமல்லோ அங்குள்ள இரும்பெல்லாம் கொடுத்துப்போட்டு இங்கே இரும்பை தடுத்து என்ன செய்யுறது? உள்ளதைக் கையில் கொடுக்க ஆள் இல்லை எண்டு அவை ஆள் தேடுகினம். அலவாங்கு என்ன இழவுக்காம் அவைக்கு?" நான் மூச்சு விடேல்லை.

ஒரே கூட்டுக்குள் இரு பாலாரையும் போடுகினமாம். தலைநகர காவல் நிலையங்கள் சிலவற்றில் இக் காட்சியைக் கண்ட அரசியல் பிரமுகர் ஒருவர் பொருமினார். எடுத்துச் சொன்னாலும் எவர் காதிலும் ஏறுவதுமாதிரித் தெரியேல்லையாம்.

கடுமையான அடிபிடிதானாம். யானைகளுக்கும் சேதமாம். எண்டெல்லாம் கதைகள் அடிபட்டாலும், எனக்கு உள்ள கவலையென்ன தெரியுமோ உந்தச் சண்டைகள் ஓய்ந்து ஆனையிறவுப் பாதையால யாழ்ப்பாணம் போய்வரும் காலம் வராதோ எண்டதுதான்.

வன்னியின் பெண் பிரதிநிதி உஷாராகத்தான் சபையில் பேசுகிறார். அடிக்க கைநோகும் எண்டு சனத்தைக் கடித்த சம்பவத்தையும் சூடாக சுட்டிக்காட்டினாராம். அதுக்காகப் பாராட்டலாம். ஆனாலும் ஒரு குறை. ஒற்றையாட்சி விஷயத்திலை தலைநகர கணேசருக்கு உள்ள துணிச்சல் வன்னி அம்மையாருக்கு ஏன் வரவில்லை?

மூன்று கிலோ அரிசிக்கு முப்பது கிலோமீற்றர் தூரம் நடையாய் நடக்க வேண்டிக்கிடக்கு. நடந்தாலும் கிடைக்குமோ என்பது தெரியாது. ஒரு குடம் தண்ணியுள்ள ஒரு கிணற்றைச் சுற்றி முன்னூறுபேர் காவல். இதெல்லாம் நடப்பது வன்னியில்தான் பாருங்கோ. இடம்பெயர்வால் சனம் படும் இடர்களெல்லாம் யாருக்குத் தெரியுது?

வன்னியில் வீட்டுக்கு வீடு ஒரு இளநீர் குலை தரவேண்டும் எண்டு ரெண்டு எழுத்தார் கேட்டிருக்கினமாம். காயப்பட்ட உறுப்பினர்களுக்கு தேவைப்படுவதாகக் கூறப்படுகிறதாம்.

மலையகத் தனித்துவ தலைவருக்கு காலம் நல்லாயில்லை. அவரது ஆதரவான ஏடாக இருந்த பத்திரிகையே நார் நாராக கிழித்துப்போட்டுது. தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனப் பிழை எண்ட ஸ்டைலில் வேலை நிறுத்தத்துக்கு துரோக முத்திரை குத்தியது பண்பட்ட தலைவருக்கு அழகல்ல என்பதுதான் பரவலான அபிப்பிராயம்.

முல்லைச்சமர் நேரத்தில்தான் ஆடிப்பிறப்பு விழாவும் வந்தது. தலைநகரில் மயூராபதி அம்மன் கோயிலில் மூன்று தேர்களும் வலம் வந்தன. சூழல் சரியில்லை. அப்படியிருந்தும் பல இலட்ச ரூபாய் தங்க, வைர நகைகளுடன் அம்பாள் கலாதியாக பவனிவந்தாவாம். நகைகளை சாத்திவிட்டு ஆலயபரிபாலனர் அம்பாளிடம் சொன்னாராம். "தாயே, உன்ன நீயே பாதுகாத்துக் கொள்!"

ஒரு நகைச்சுவையான கவிதை. காதலர்களுக்கு பிடிக்கக்கூடும்.

### எச்சரிக்கை

"காதலர்கள்
காத்திருக்கும் பாதைகளில்
குளத்தை தோண்டாதீர்கள்.
எதிர்பார்ப்பவர்
வரவில்லையென்றால்
காத்திருப்பவர்
கற்களை வீசியே
குளத்தை மூடிவிடுவார்!"

(மு.இரவிக்குமார்)

www.padippakam.com

## அரசியல் தொடர்




# தந்திரமாக விரிக்கப்பட்ட இராணுவ வலை!

### அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

### அற்புதன் எழுதுவது

**திட்டம் தயாரானது**

யாழ்-குடாநாட்டை எப்பாடுபட்டாவது தமது கட்டுப்பாட்டில் கொண்டுவர திட்டமிட்டது அரசாங்கம்.

ஏனைய இயக்கங்கள் புலிகளால் தடைசெய்யப்பட்டிருந்தமையால் புலிகளும், ஈரோஸ் அமைப்பினரும் மட்டுமே இருந்தனர்.

எனவே-அதுதான் சரியான தருணம் என்று திட்டமிட்டார் தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலி.

யாழ்-குடாநாட்டை தமது கட்டுப்


லலித் அத்துலத்முதலி

பாட்டில் கொண்டுவரும் நடவடிக்கைக்கு 'ஒப்பரேசன் லிபரேசன்' என்று பெயர் சூட்டியது அரசாங்கம்.

பிரபாகரன் பிறந்த ஊரான வல்வெட்டித்துறையில் இருந்து நடவடிக்கையை ஆரம்பிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

பிரபாகரனும் அப்போது வல்வெட்டித்துறையில்தான் தங்கியிருந்தார். அத் தகவலும் புலனாய்வுத்துறை மூலமாக அரசாங்கத்துக்கு கிடைத்திருந்தது.

'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கையைத் திட்டமிடும்போது இஸ்ரேலிய மொசாட்டின் ஆலோசனையும் பெறப்பட்டது.

பாலஸ்தீன இயக்கங்களுக்கு எதிரான நடவடிக்கைகளின்போது பாலஸ்தீன மக்களின் உயிரிழப்புக்கள் தொடர்பாக கவலையேபடாமல் படுகொலைத் தாக்குதல் நடத்துவது இஸ்ரேலின் பாணியாகும்.

'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கைக்கு ஆலோசனை வழங்கிய மொசாட் அவ்வாறான ஒரு யோசனையை வழங்கியிருக்கும் என்பது ஊகிக்கக்கூடியதே.

யாழ்-குடாநாட்டிலுள்ள இராணுவ முகாம்களுக்கு நீண்டதூர பீரங்கிகள் அனுப்பிவைக்கப்பட்டன.

புலிகளுக்கு போக்குக் காட்டுவதற்காக யாழ்-குடாநாட்டிலுள்ள சகல முகாம்களிலும் படை குவிக்கப்படுவதுபோல காட்டப்பட்டது.

**மே18**

1987 மே 18ம் திகதி ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து படையினர் வடமேற்கு திசை நோக்கி முன்னேறத் தொடங்கினார்கள்.

புலிகளின் அணிகளை அங்கு இழுப்பதற்கான ஒரு தந்திரோபாயமான நடவடிக்கையே அதுவாகும்.

புலிகளின் அணிகளை வெவ்வேறு திசைகளில் இழுத்து பலவீனமாக்கிவிட்டு, வடமராட்சி ஊடாக பிரதான நடவடிக்கையை மேற்கொள்வதுதான் தந்திரம்.

ஆனையிறவில் இருந்து முன்னேறிய படையினர் பாதைகளில் மரங்களைப் போட்டு தடை செய்திருந்தனர்.

இராணுவத்தினரின் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுவிட்டதை அறியாத தனியார் பஸ் வண்டி ஒன்று பயணிகளோடு சென்று கொண்டிருந்தது.

பாதையின் குறுக்கே மரம் போடப்பட்டிருப்பதைக் கண்ட பஸ் சாரதியும், பயணிகளும் மரத்தை தூக்கி ஓரத்தில் போட்டுவிட்டு பயணத்தைத் தொடர்ந்தனர்.

பஸ் சிறிது தூரம் சென்றதும் பாதையின் இருமருங்கிலும் பதுங்கியிருந்த இராணுவத்தினர் பஸ்ஸை நோக்கி சரமாரியாக சுட்டுத் தள்ளினார்கள்.

பஸ்ஸில் இருந்த பயணிகள் அபயக்குரல் எழுப்பினார்கள். துப்பாக்கிப் பிரயோகம் நிறுத்தப்பட்டது.

பயணிகளில் பலர் படுகாயமடைந்திருந்தனர். பஸ்ஸில் பயணம் செய்தவர்களில் டாக்டர் ஒருவரும் இருந்தார்.

காயமடைந்தவர்களுக்கு உடனடியாக அவர் சிகிச்சை மேற்கொண்டதால் பயணிகளில் பலர் உயிர் பிழைத்துக்கொண்டார்கள்.

லங்கா சீமெந்து கம்பெனி பொறியியலாளரான ஜெகத்சனும் பயணிகளில் ஒருவர். துப்பாக்கிச் சூடு காரணமாக அவர் பலியானார்.

மே மாதம் 20ம் திகதி நாவற்குழி இராணுவ முகாமிலிருந்தும், பலாலி இராணுவ முகாமிலிருந்தும் நடவடிக்கைகள் ஆரம்பித்தன.

முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையே கடும்மோதல் இடம்பெற்றது.

பலாலியிலிருந்து படையினரின் முன்னேற்றத்தை தடுப்பதில் புலிகளது மற்றொரு அணி ஈடுபட்டிருந்தது.

**ராதாவுக்கு குறி**

கட்டுவன் பகுதியில் புலிகளின் காவலரண்கள் இருந்தன. இராணுத்தினரின் காவலரண்களுக்கும் புலிகளின் காவலரண்களுக்கும் இடையே தூரம் குறைவாகவே இருந்தது.

காவலரண்களில் இருந்த தமது உறுப்பினர்களை பார்வையிட சென்றார் யாழ் மாவட்ட புலிகளின் தளபதி ராதா.

ராதாவின் நடமாட்டத்தை இராணுவக் காவலரனில் இருந்து தொலைநோக்கி மூலம் இராணுவத்தினர் அவதானித்துக் கொண்டிருந்தனர்.

புலிகளின் முதலாவது காவலரணில் இருந்து இரண்டாவது காவலரண் நோக்கி ராதா சென்று கொண்டிருந்தபோது, இராணுவக் காவலரணிலிருந்து குறிவைக்கப்பட்டது.

புலிகளின் இரண்டாவது காவலரணை ராதா நெருங்கிக் கொண்டிருக்க, இராணுவக் காவலரணில் இருந்து வேட்டுத் தீர்க்கப்பட்டது.

பின் தலையில் குண்டுபட்டு விழுந்தார் ராதா.

இராணுவக் காவலரணை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி ராதாவை காப்பாற்ற விரைந்தனர் புலிகள்.

ஆனால்-ராதா குண்டடிபட்டவுடனேயே பலியாகியிருந்தார்.

புலிகளுக்கு ஏற்பட்ட பாரிய இழப்பு அதுவாகும்.

மன்னார் தளபதியாக இருந்த விக்ரர் பலியானபின்னர் மன்னார் தளபதியாக இருந்தவர் ராதா.

கிட்டுமீதான தாக்குதலையடுத்து யாழ் மாவட்ட தளபதியாக ராதாவை நியமித்தார் பிரபாகரன்.

கொழும்பில் வங்கியொன்றில் அதிகாரியாக பணியாற்றிய ராதா 1983 இனக்கலவரத்தின் காரணமாக யாழ் சென்று புலிகளோடு தன்னை இணைத்துக்கொண்டார்.

ஹரிச்சந்திரா என்பதுதான் ராதாவின் சொந்தப்பெயர். யாழ் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர்.

**இறுதி மரியாதை**

யாழ்ப்பாணத்தில் சிவலிங்கப்புளியடியில் இருந்த ராதாவின் வீட்டில் இறுதிச் சடங்கு நடைபெற்றது.

பெருந்திரளான மக்கள் சோகமே உருவாக இறுதிச் சடங்கில் கலந்துகொண்டனர்.

ராதாவின் உடல்வைக்கப்பட்டிருந்த பேழையை புலிகளின் பிரதித்தலைவர் மாத்தையா உட்பட முக்கிய பிரமுகர்கள் சுமந்து சென்றனர்.

வண்ணார்பண்ணையில் உள்ள கோம்பயன்மணல் மயானத்தில் ராதாவின் உடல் தகனம் செய்யப்பட்டது.

ராதாவின் இறுதிச் சடங்கில்தான் முதன் முதலாக ஆயுதம் தாங்கிய பெண் புலிகளை மக்கள் கண்டனர். ராதாவின் உடல் தகனம் செய்யப்படுவதற்கு முன்பாக பெண்புலிகள் வானத்தை நோக்கி இறுதி மரியாதை வேட்டுக்களைத் தீர்த்தனர்.

பார்த்துக்கொண்டிருந்த மக்களுக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை.

"பெண்பிள்ளைகளும் சோக்காகச் சுடுகிறார்கள்" என்று பேசிக்கொண்டனர்.

பெண்கள் சைக்கிள் ஓடத் தொடங்கிய போதே வியப்போடு பார்த்தவர்களுக்கு, பெண் புலிகள் ஆயுதங்களோடு தோன்றியதும், வேட்டுக்களைத் தீர்த்ததும் நீண்ட நாட்களாக பேசப்படக்கூடிய ஆச்சரியமான விஷயமாக இருந்தது.

லெப்டினன்ட் கேணல் ராதாவின் பின்னர் யாழ் மாவட்ட புலிகளின் தளபதியாக குமரப்பா நியமிக்கப்பட்டார்.

அதற்கு முன்னர் மட்டக்களப்பு புலிகளின் தளபதியாக செயற்பட்டவர் குமரப்பா.

**புலிகளான படையினர்**

பலாலியிலிருந்து முன்னேறிய இராணுவத்தினர் இடைக்காடுவரை சென்றபோது, புலிகளும் பதில் தாக்குதலில் ஈடுபட்டனர்.

படையினரில் மூவர் பாதை தெரியாமல் தடுமாறி புலிகளிடம் மாட்டிக்கொண்டனர். மூவரையும் கைதுசெய்த புலிகள் அவர்களை அழைத்துச் சென்றபோது, ஹெலிகொப்டரிலிருந்து புலிகளின் அணிமீது தாக்குதல் நடத்தப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட படையினர் மூவரும் சீருடையில் இருந்தனர். எனவே அவர்களைக் கண்டால் ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறாது என்று கருதினார் புலிகளின் தாக்குதல் பிரிவு ஒன்றுக்கு பொறுப்பான கோணேஷ். எனவே பதுங்குநிலை எடுக்காமல் சென்று கொண்டிருந்தனர்.

ஆனால், ஹெலிகொப்டரிலிருந்து குண்டு வீசப்பட்டது. கைதுசெய்யப்பட்ட மூன்று இராணுவத்தினரும் பலியானார்கள். அவர்களோடு நின்ற புலிகளின் லெப்டினன்ட் கோணேசும் பலியானார்.

மறுநாள் மே மாதம் 24ம் திகதி இலங்கை வானொலி பின்வருமாறு செய்தி வெளியிட்டது.

"நான்கு புலிகள் இடைக்காட்டில் கொல்லப்பட்டனர்"

மே மாதம் 25ம் திகதிவரை படையினரின் பிரதான இலக்கு எது? எந்தப் பாதை வழியாக படையினர் முன்னேறப்போகிறார்கள் என்பதை புலிகள் திட்டவட்டமாக அறியவில்லை.

குறிப்பாக வடமராட்சியால் படைகள் முன்னேறக்கூடும் என்று புலிகள் எதிர்பார்க்கவில்லை.

ஆனையிறவில் இருந்து இயக்கச்சி, பளைப்பகுதிகளை நோக்கி படையினர் முன்னேறக்கூடும் அல்லது பலாலி இராணுவ தளத்திலிருந்த படையினர் முன்னேறக்கூடும் என்றே புலிகள் எதிர்பார்த்தனர்.

ஆனையிறவில் இருந்து முன்னேறும் இராணுவத்தினரை தடுத்து நிறுத்துமாறு ஈரோஸ் இயக்கத்திடம் பொறுப்பை ஒப்படைத்தனர் புலிகள்.

யாழ் கோட்டை இராணுவ முகாம் பகுதியிலும் புலிகளின் அணி ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது.

பலாலி இராணுவ முகாமிலிருந்து முன்னேறும் படையினரை எதிர்கொள்ளவும் புலிகளின் அணியொன்றும், ஈரோஸ் அணியொன்றும் தயார் நிலையில் காத்திருந்தது.

**கிட்டு வந்தார்**

யாழ்-கோட்டை முகாமிலிருந்து சரமாரியான ஷெல் வீச்சுக்கள் நடைபெற்றன.

கோட்டை முகாமை சமீபமாகவுள்ள புலிகளின் காவலரண் பகுதிக்கு காரில் சென்றார் கிட்டு. காரில் இருந்தபடியே கோட்டை முகாமை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்.

கிட்டுவைக் கண்டதும் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு உற்சாகம் வந்துவிட்டது.

"கிட்டண்ணா வந்துவிட்டார். அடியுங்கோ" என்று உற்சாகமாகச் சொல்லியபடியே கோட்டை முகாமை நோக்கி புலிகளும் மோட்டார் தாக்குதல் நடத்தினார்கள்.

யாழ்-குடாநாடெங்கும் ஷெல் வீச்சுக்களாலும், குண்டுவீச்சுக்களாலும் ஒரே பதட்டம். எங்கும் பீதிநிலவியது.

'ஏனைய இயக்கங்களை தடை செய்யாமல் விட்டிருந்தால், அவர்களும் நின்றிருப்பார்களே' என்று மக்கள் புலிகள்மீதும் குற்றம்சாட்டத் தொடங்கினார்கள்.

அச்சுவேலிப் பகுதியில் பதுங்குகுழி ஒன்றுக்குள் இருந்த மக்கள் வெளியே கொண்டுவரப்பட்டு இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். 9 பேர் அதில் பலியானார்கள்.

மே 23 ம் திகதி பலாலி இராணுவ முகாமில் இருந்து முன்னேறிய இராணுவத்தினர் பின்வாங்கிச் செல்வதுபோல போக்குக் காட்டினார்கள்.

தமது தாக்குதலால் படையினர் பின்வாங்கிச் செல்வதாக புலிகள் நினைத்துக் கொண்டிருக்க தமது பிரதான நடவடிக்கையை ஆரம்பிப்பதுதான் படைத்தரப்பின் தந்திரம்.

**15 ஆயிரம் படைகள்**

மே 18ம் திகதி முதல் மே 25ம் திகதி வரை படையினரின் தந்திர நாடகம் தொடர்ந்தது.

புலிகளை களைப்படையச் செய்வதும், படையினரின் பிரதான முன்னேற்றப் பாதையில் இருந்து புலிகளை வேறு திசைகளுக்கு இழுத்துச் செல்வதும் தான் படையினரின் திட்டம்.

உண்மையில் மிகவும் கச்சிதமான திட்டம்தான். இத் திட்டத்துக்கு மொசாட்டின் ஆலோசனை இருந்தபோதும், நேரடியாக படைகளை வழி நடத்தியவர்கள் மூன்று பேர்.

அப்போது பிரிகேடியர் தரத்தில் இருந்த டென்சில் கொப்பக்கடுவ, பிரிகேடியர் ஜெரி டி சில்வா (முன்னர் இராணுவத்தளபதியாக இருந்தவர்), கேணல் விஜயவிமலரத்ன.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக அப்போதிருந்தவர் ஜெனரல் ஆட்டிக்கல. முப்படைத்தளபதியாக இருந்தவர் ஜெனரல் சிறில் ரணதுங்கா. (இவர்தான் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் இருந்தவர்).

மிகவும் இரகசியமாகவும், கச்சிதமாகவும் ஒரு இராணுவ வலை விரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதை மே 26ம் திகதி விடியும் வரை புலிகள் அறிந்திருக்கவில்லை.

உண்மையில் வடபுலப் போர் வரலாற்றில் அதற்கு முன்னரும், இன்று வரையும் காணாத அருமையான யுத்த தந்திரம் அது.

வடமராட்சியில் இருந்த பிரபாகரனுக்கும், புலிகளின் அணிகளுக்கும் தமக்கு மிக சமீபமாகவுள்ள தொண்டமானாறு இராணுவமுகாமில் ஒரு பெரும் படை தயாராகிக்கொண்டிருப்பது கடைசி நிமிடம் வரை தெரியாது.

கிட்டத்தட்ட 15 ஆயிரம் இராணுவத்தினரைக் கொண்ட படையணி தொண்டமானாறு இராணுவ முகாமில் பூரண தயாரிப்போடு வடமராட்சியை இரவோடு இரவாக கைப்பற்றும் திட்டத்தோடு ஆயத்தமானது.

பிரபாகரன் வல்வெட்டித்துறையில்தான் தங்கியிருக்கிறார் என்பதும், தங்கியிருந்த வீடு தொடர்பான தகவலும் டென்சில் கொப்பக்கடுவவின் கையில்


டென்சில் கொப்பகடுவ

இருந்தது.

பிரபாகரனை வல்வெட்டித்துறையில் இருந்து வெளியேறாமல் சுற்றிவளைத்து பிடித்துவிடவேண்டும் என்பதும் பிரதான குறி.

**மே 26ம் திகதி இரவு**

தொண்டமானாறு முகாமில் இருந்து நான்கு முனைகளால் படையினர் 'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கையில் இறக்கப்பட்டனர்.

வல்வெட்டித்துறையில் உள்ள ஒரு வீட்டில் பிரபாகரனுக்கு தன்னை நோக்கி படைநகர்வது அப்போது தெரிந்திருக்கவில்லை.

தொண்டமானாறு முகாமிற்கு சமீபமாகவுள்ள காவலரண்களில் விரல்விட்டு எண்ணத்தக்க புலிகளே காவல் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

ஆயிரமாயிரம் படையினர் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர்.

கோயில் சந்தை என்ற பகுதியில் ஈரோஸ் இயக்க அலுவலகம் ஒன்று இருந்தது. உள்ளே ஈரோஸ் உறுப்பினர்கள் தூக்கத்தில் இருந்தனர்.

பருத்தித்துறைக்கு பொறுப்பான ஈரோஸ் அமைப்பின் முக்கிய உறுப்பினர் முரளி தூக்கத்தில் இருந்து தட்டி எழுப்பப்பட்டார்.

தூக்கக் கலக்கத்தோடு கண்ணைத் திறந்து பார்க்கிறார் முரளி.

துப்பாக்கிகளை நீட்டியபடியே பச்சை உடைகளோடு இராணுவத்தினர் அவரையே பார்த்துக்கொண்டு நிற்கின்றனர்.

(தொடர்ந்து வரும்)

---

# யால காட்டுக்குள் நடப்பது என்ன?




'யால' காட்டுப் பகுதியில் புலிகளின் நடமாட்டம் இருப்பதாக பரபரப்பான செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

முதலில் யால காட்டுப் பகுதி தொடர்பாக ஒரு சுருக்கமான விளக்கம்.

யால, குமண பகுதிகளை உள்ளடக்கிறது றுகுணு தேசியப் பூங்கா. இதனை 'யால சரணாலயம்' என்றும் அழைப்பர்.

யானை மற்றும் காட்டுவிலங்குகள் சுதந்திரமாகச் சுற்றித்திரிய ஒதுக்கப்பட்ட பகுதியாகும் இது. பிறநாட்டுப் பறவைகளும் இங்கு வந்து செல்வதுண்டு. ரஷ்ய நாட்டுப் பறவைகள் கூட இங்கு வந்து செல்வதுண்டு.

உல்லாசப் பயணிகளை கவர்ந்திழுக்கும் பகுதிகளில் இதுவும் ஒன்றாகும்.

யாலவுக்கு சமீபமாக பொத்தன என்னும் இயற்கைத் துறைமுகம் ஒன்றும் இருக்கிறது.

1972 ல் வல்வெட்டித்துறையிலிருந்து கதிர்காமம் வரும் பக்தர்கள் முல்லைத்தீவு திருமலை வழியாக மட்டக்களப்பு, பொத்துவில், உகந்த (திருத்தலம் உண்டு), குமண, யால எல்லாம் கடந்துதான் கதிர்காமம் செல்வர்.

மட்டக்களப்பில் இருந்தும் யால காட்டுப் பகுதி ஊடாக பக்தர்கள் கதிர்காமம் சென்றதுண்டு. கிழக்கு மாகாணத்தில் பொத்துவிலில் இருந்து யால காட்டுப்பகுதிக்கு அருகிலுள்ள பாணம வரை பிரதான சாலை இருக்கிறது. அதன் பின்னர் யால செல்வதற்கு உப சாலைகள் இருக்கின்றன.

யால பகுதியில் உள்ள குமண என்ற பகுதியை ஒட்டியே 'கும்புக்கன் ஓயா' என்னும் ஆறு பாய்கிறது. இதனையே புலிகள் தமிழ் ஈழத்தின் தென் கிழக்கு எல்லையாக தமது வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

புலிகளால் தமிழ் ஈழ தென்கிழக்கு எல்லையாக கூறப்படும் குமண மற்றும் யால பகுதிகளை உள்ளடக்கிய காட்டுப்பகுதிதான் இப்போது பிரச்சனைக்குரிய பகுதியாக மாறியுள்ளது.

அக் காட்டுப்பகுதியில் புலிகள் நடமாடுவதாக வெளியான செய்திகளே பரபரப்புக்கு காரணமாகும். கடந்த ஜுலை 13ம் திகதி நடைபெற்ற ஒரு சம்பவம்தான் பரபரப்புக்கு காரணமாக அமைந்தது.

இரண்டு செக் குடியரசு உல்லாசப் பயணிகள் சென்ற ஜீப் வண்டி ஒன்று ஆயுதம் தாங்கியவர்களால் வழி மறிக்கப்பட்டு கடத்திச் செல்லப்பட்டது. உல்லாசப் பயணிகள் இறக்கி விடப்பட்டனர்.

புலிகள்தான் ஜீப்பைக் கடத்திச் சென்றனர் என்று நம்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற சில சம்பவங்களும் புலிப்பீதியை கிளப்பிவிட்டுள்ளன.

யால காட்டுப்பகுதிக்குள் துப்பாக்கி வேட்டொலிகள் கேட்பதுபோல சத்தங்கள் கேட்டன என்றும், ஆயுதம் தாங்கிய நபர்களின் நடமாட்டத்தைக் கண்டதாகவும் கிராமவாசிகள் கூறியிருக்கின்றனர்.

அதுமட்டுமல்லாமல் பொத்துவில், பாணமவுக்கு அருகிலுள்ள குமணவில் வசிக்கும் சிங்கள கிராமவாசிகள் அங்கிருந்து வெளியேறுமாறு புலிகளால் அச்சுறுத்தப்பட்டனர். பல குடும்பங்கள் பயத்தில் வெளியேறியுமுள்ளனர். அவர்கள் 'கிரண்துருகோட்டே' என்ற இடத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

யால காட்டுப் பகுதியில் வலிமாத்தகம என்ற ஊருண்டு. 1983 இல் நடைபெற்ற இனக்கலவரத்தில் அந்த ஊரில் இருந்த கிருஷ்ணா என்பவரும், அவரது இரு சகோதரிகளும் காடையர்களால் தாக்கப்பட்டனர். சகோதரிகள் இருவரும் காடையர்களின் காம வெறிக்கும் இரையாகினர்.

அந்த இரு பெண்களும் தற்போது கதிர்காமப் பகுதியில் இருப்பதாகவும், புலிகளின் உதவியோடு தம்மை அழிக்கவரலாம் என்று பயந்த காடையர்கள் சமீபகாலமாக கிளம்பிய புலிப்பீதியால் ஓடி ஒளிந்துவிட்டனராம்.

தற்போது யாலப் பகுதியில் இராணுவத்தினர் தடை முகாம்களை அமைத்து வருகின்றனர்.

இதற்கிடையே, பொத்தன பகுதியில் ஜுலை 14ம் திகதி 7 படகுகளில் வந்த புலிகள் தமது வலைகளைச் சேதப்படுத்தி விட்டு சென்றதாக மீனவர்கள் புகார் செய்துள்ளனர்.

யால சரணாலயப் பகுதியில் நாளொன்றுக்கு இரண்டு இலட்சம் ருபாய்வரை உல்லாசப் பயணிகள் மூலமாக வருமானம் பெறப்படும்.

தற்போதைய புலிப் பீதியாலும், இராணுவ தடை முகாம்களாலும் உல்லாசப் பயணிகள் அங்கு செல்ல அஞ்சக்கூடும் என்று கருதப்படுகிறது.

கிழக்கில் உள்ள புலிகள் இயக்கத்தினர் தமது தற்காலிக பதுங்குமிடமாக யால காட்டுப் பகுதியை பயன்படுத்தக்கூடும் என்று நம்பப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் காடுகளுக்குள் படையினரின் தேடுதல் வேட்டைகள் நடைபெறுமானால் புலிகள் பின்வாங்கி யால காட்டுப் பகுதிக்குள் வந்துவிடலாம்.

எனவே, யால காட்டுப்பகுதிகளோடு பரிச்சயமாகிக்கொள்ள புலிகள் அங்கு தற்காலிக முகாம்களை அமைத்திருக்கலாம் என்று நம்பப் படுகிறது.

ஜே.வி.பி.ஆயுதப் போராட்டம் நடத்திய காலத்தில் யால காட்டுப்புற தென்மேற்கு பகுதியை பயன்படுத்தினார்கள். புலிகள் பயன்படுத்தும் பகுதி கிழக்கு மாகாணத்தின் காட்டுப்பகுதியை அண்டியதாகும்.

இதனால் எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் புலிகளின் நடவடிக்கைகளுக்கு பிரதான பின் தளப்பகுதிகளில் ஒன்றாக கிழக்கின் காட்டுப்பகுதி மட்டுமல்லாமல் யால காட்டுப்பகுதியும் மாறலாம்.

கிழக்கு காடுகளில் குண்டு வீசுவதுபோல யால காட்டுப் பகுதியில் குண்டுவீச முடியாது. வீசினால் உல்லாசப் பயணிகளை கவரும் இயற்கைவனம் பாதிக்கப்படலாம்.

அதனை கருத்தில் கொண்டே யால காட்டுப்பகுதிமீது புலிகளின் கவனம் திரும்பியிருப்பதாக கருதப்படுகிறது.


படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது- இராஜதந்திரி

# புலிகள் கோரும் அமெரிக்க மத்தியஸ்தம்

இலங்கையின் இனப்பிரச்சனைத்தீர்வு குறித்து வாய்ஓயாமல் பேசப்பட்டு வருகிறதே தவிர எதுவும் உருப்படியாக உருவாகவில்லை.

கடந்தகாலங்களில் பதவியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமல்ல, இன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு கூட அரசியல் தீர்வு பற்றி உரத்துப் பேசி வருகின்றதே தவிர, அர்த்தமுள்ள விதத்தில் எதனையும் மேற்கொள்ளவில்லை.

இந்தியாவுடனான மத்தியஸ்தத்துடன் ஐ.தே.க. ஆட்சியில் வடக்கு-கிழக்குப் பிரச்சினை அணுகப்பட்டது. ஆனால் 'குரங்கு அப்பம் தின்ற கதை'யாகவே இந்தியாவின் மத்தியஸ்தம் விளங்கியது.

இந்திய-இலங்கை ஒப்பந்தம், வடக்கு-கிழக்கு பிரச்சினை தொடர்பாக கொண்டுவரப்பட்டது. ஆனால் அந்த ஒப்பந்தம் அரைகுறையானதாகவும், முழுமையான தீர்வைத்தராததாகவும் இருந்தது.

இதனையடுத்து, அன்றைய ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவினால் எல்.ரி.ரி.ஈ.யினருடன் சமரசமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அந்த சமரச நடவடிக்கை, எல்.ரி.ரி.ஈ.யினரும், பிரேமதாஸா அரசும் ஒருவர் மீது மற்றொருவர் சவாரி விடுவதுபோல இடம்பெற்றதே தவிர, எதிர்பார்த்த தீர்வு எட்டப்படவில்லை.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்ததும் வடக்கு-கிழக்குப் பிரச்சினை தொடர்பாக விரைந்து ஒரு தீர்வு எட்டப்படுமென்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அந்த எதிர்பார்ப்பு காற்றோடு கலந்து மீண்டும் 'கந்தகவாடை'யே வடக்கு-கிழக்கில் வீசி வருகிறது.

ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் பேசியபோது "கடந்த 13 வருடங்களுக்கும் மேலாக வடக்கு-கிழக்கு யுத்தம் இடம்பெற்று வருகிறது. இந்த யுத்தத்தில் கடந்த ஒரு வருட காலயுத்தமே மிக மோசமானது!" என்று கூறியிருந்தார்.

ஜனாதிபதி கூறியதில் உண்மை இருக்கவே செய்கிறது. எல்.ரி.ரி.ஈ.யினருக்கும், அரசாங்கத்துக்குமிடையேயான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முறிவடைந்தது. இதனையடுத்து இருதரப்பிலும் வெடித்த மோதல் ஒரு கொடிய யுத்தமாகவே தொடர்ந்து வருகின்றது.

விமானங்கள், கப்பல்கள், ஆயுத தளபாடங்கள் கவசவாகனங்கள் என்பவற்றை அரசு பெருமளவில் பறிகொடுத்துள்ளது.

எண்ணிலடங்காத உயிர்களையும் பலிகொடுத்து, உண்மையான இழப்பு விபரங்களையும் வெளியிடுவதற்கு ஆட்சியாளர்கள் தயக்கம் காட்டியுள்ளனர்.

இத்தகைய மோசமான யுத்தநிலபரம் தணிந்துபோவதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை. மாறாக யுத்தச் செலவுகள் 50 பில்லியன் ரூபாவரை அதிகரிக்கவுள்ளதாக வரவு செலவுத்திட்டத்தைத் தயாரிக்கும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்..

புதிய யுத்த விமானங்களையும், தளபாடங்களையும் ஆட்சியாளர்கள் மேலும் வாங்கப் போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம், தனது 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை மூலமாக அமெரிக்க மத்தியஸ்தம் பற்றிக் குறிப்பிட்டுள்ளது.

அமைச்சர்கள் லக்ஷ்மன் கதிர்காமர், பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஆகியோர் கடந்த வாரங்களில் அரசின் பேச்சுவார்த்தை தொடர்பான நிலைப்பாட்டைத் தெரிவித்திருந்தனர்.

அரசுக்கும், எல்.ரி.ரி.ஈ.யினருக்குமிடையேயான கடந்தகால சமரச முயற்சிகள் தோல்வியில் முறிவடைந்தமைக்கு தகுந்த மத்தியஸ்தமில்லாமையும் ஒரு காரணமாகும்.

ஒருவர் மீது ஒருவர் பரஸ்பர விசுவாசத்தை வெளியிடாத போது இருதரப்பினரையும் கையாளும் விதத்தில் ஒரு நடுநிலையான மத்தியஸ்தம் ஏற்படுவது அவசியமாகின்றது.



மார்ட்டின் லூதர் கிங்

பிரிட்டனின் வட அயர்லாந்துப் பிரச்சினை, இஸ்ரேலிய-பாலஸ்தீனப் பிரச்சினை என்பவற்றில் அமொக்கா வகித்துவரும் பங்களிப்பை நன்கறிய முடியும்.

வெள்ளை மாளிகையைக்கூட சமரச ஒப்பந்தங்களை மேற்கொள்ள அமெரிக்கா இடமளித்துள்ளது!

கருத்து வேறுபாடுகளைக் கொண்ட தலைவர்கள் வாஷிங்டனுக்கு வர அனுமதிக்கப்பட்டு பிரச்சினைகள் அணுகப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜரை மட்டுமல்ல வட அயர்லாந்தின் ஷின் பெயின் அமைப்பின் தலைவரான ஜெரி அடம்ஸையும் வாஷிங்டனுக்கு அழைத்து அவர்களது பிரச்சினைகள் ஆராயப்பட்டுள்ளன.

அத்துடன் இரு தரப்புக்கும் அரசியல் ஆலோசனைகள்கூட வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைப்பிரச்சினையில் அமெரிக்கா ஆர்வங்காட்ட விரும்பினால் முதலில் அப்பிரச்சினையை அந்நாடு தெளிவுற அறியவேண்டும்.

வடக்கு-கிழக்குப் பிரச்சினை தொடர்பாக இலங்கையின் ஆட்சியாளர்கள் அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ், சீனா, தென்னாபிரிக்கா, இந்தியா ஆகியவற்றின் உதவிகளை நாடியிருந்தனர்.

ஆனால் இந்த உதவிகள் யாவும் இராணுவ ரீதியிலான உதவிகளாகவே இருந்தன. இந்தியா அரசியல் ரீதியாக மத்தியஸ்தத்துக்கு ஒத்துழைத்தபோதிலும், இறுதியாக தனது இராணுவ பலத்தையே பிரயோகித்திருந்தது.

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சினை தொடர்பாக எந்தவொரு நாடும் ஆக்கபூர்வமான அரசியல் ஒத்துழைப்பை வழங்க முன்வரவில்லை. கூடவே இலங்கையின் ஆட்சியாளர்களும் வெளிநாடொன்றின் அரசியல் மத்தியஸ்தத்தைக் கோரவில்லை.

அடிப்படை மனித உரிமைகள், ஜனநாயகம், இனங்களின் தனித்துவம் ஆகியனவற்றை மதிக்கும் ஒரு வல்லரசு என்று அமெரிக்கா தன்னை வெளி உலகுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

எனவே இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சினையும் ஓர் இனத்தின், அதாவது தமிழினத்தின் தனித்துவம், அடிப்படை உரிமைகள், ஜனநாயக மேம்பாடு என்பவை சார்ந்ததாகவே இருக்கின்றதென்பதை அமெரிக்கா அறியவேண்டும்.

இலங்கையில் இரு தேசிய இனங்கள் உள்ளன. சிங்களவர்கள், தமிழர்கள் ஆகியோரே இந்த இரு தேசிய இனத்தினருமாவர்.

இலங்கையில் சுயநிர்ணய உரிமைகளோடு வாழ்வதற்காகவே பெரும்போராட்டமொன்றை தமிழினம் நடத்திவருகின்றது.

இப்போராட்டம் பற்றிச் சரிவர புரிந்து கொள்ளாது அமெரிக்கா வெளியிடும் கருத்துக்கள், கண்ணோட்டங்கள் என்பன எவ்வகையிலும் நியாயமான தீர்வொன்றைக் காண்பதற்கு உதவமாட்டா.

ஒரு நாட்டின் ஒருமைப்பாடு குறித்து இன்னொரு நாடு அக்கறை கொள்வதில் எவ்வித தவறும் இல்லை.

ஆனால் இந்த ஒருமைப்பாடென்பது எவ்வளவு தூரம் அர்த்தமுள்ளதாக இருக்கின்றதென்பது சீர்தூக்கிப் பார்க்கப் படவேண்டும்.

சோவியத் யூனியன் உடைந்து போகும் வரை 'பனிப்போர்' (Cold War) என்ற விடயம் அமெரிக்காவுக்கும், அன்றைய சோவியத் யூனியனுக்குமிடையே பெரும் வல்லரசுக் கெடுபிடியையே ஏற்படுத்தியிருந்தது.

அப்போது எந்தவொரு சர்வதேச பிரச்சினையிலும் அமெரிக்காவும், அன்றைய சோவியத் யூனியனும் இருவேறான அணிசேர்ந்து முரண்பட்டிருந்தன.

'ஆனால் தற்போது சோவியத்யூனியன் உடைந்து 'பனிப்போர்' என்பதும் உருகிப்போயுள்ளது.

அமெரிக்கா தன்னோடு அணிசேர்ந்துள்ள நாடுகளுடன்- தொடர்ந்து தனது மேலாதிக்கத்தைப் பேணிவரவே காணப்படுகின்றது.

இத்தகைய மேலாதிக்கத்தன்மையைக் கொண்ட அமெரிக்கா இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையில் அவசரப்பட்டுக் கருத்துக்களைத் தெரிவிக்கலாகாது; தீர்மானங்களையும் கொண்டுவரலாகாது.

அமெரிக்காவும், அதன் நேசநாடுகளும் இலங்கை அரசுக்கு அனுசரணையாகக் கருத்துக்களை வெளியிடலாம். ஆனால் மறுபுறத்தே இலங்கையின் ஆட்சியாளர்கள் அமெரிக்காவினதும், அதன் நேசநாடுகளினதும் நிலைப்பாடுகள் குறித்து மாறுபாடான கண்ணோட்டத்தையும் கொண்டுள்ளனர்.

மேற்கத்தேய நாடுகளே எல்.ரி.ரி.ஈ.யினருக்கு உதவிவருகின்றன. ஆயுதங்களை வாங்குவதற்கும், நிதி சேகரிப்பதற்கும், மேற்கத்தேய நாடுகள் இடமளித்துள்ளன என்பதும் இலங்கை ஆட்சியாளர்களது குற்றச் சாட்டுக்களாக இருக்கின்றன.

இலங்கையில் அரசியல் நடவடிக்கைகள் தகுந்த வடிவம் பெறாது, அரசாங்கமும் எல்.ரி.ரி.ஈ.யினரும் ஒரு முரட்டு யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நியாயம் எப்பக்கமிருக்கின்றது என்பதை அறியமுயலாது, ஒரு பக்கச்சார்பாக இலங்கையின் யுத்தம் குறித்து தமது கருத்துக்களை அமெரிக்காவோ, ஏனையநாடுகளோ வெளியிடலாகாது.

அமெரிக்கா ஒரு வல்லரசாகப் பலம்பெற்றிருக்கலாம். ஆனால் அங்குகூட இனவாதம் இன்னுங்கூடப் புரையோடிப்போயுள்ளது.

அமெரிக்காவின் அட்லாண்டாவில் ஒலிம்பிக் போட்டிகள் கோலாகலமான முறையில் நடந்துமுடிந்திருந்தன.

இந்த ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்கா கூடுதல் வெற்றிப் பதக்கங்களுடன் முன்னணியில் திகழ்ந்தது.

இக்கூடுதல் பதக்கங்களை அமெரிக்காவின் கறுப்பின வீரர்களே பெருமளவில் வென்று குவித்தனர். அமெரிக்காவின் வெற்றிப் பதக்கங்களில் 90 வீதத்துக்கதிகமானவை கறுப்பினத்தவர்களால் வெல்லப்பட்டன.

இருந்தபோதிலும் அட்லாண்டா ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாவதற்குச் சிலவாரங்களுக்கு முன்னர் பல்வேறு அமெரிக்க மாநிலங்களிலும் நிற வெறியர்களால், கறுப்பின மக்களின் தேவாலயங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

இந்த நடவடிக்கையை அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் கூட வன்மையாகக் கண்டித்திருந்தார்.

அமெரிக்கா ஏனைய நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் ஆர்வங்காட்டுகிறது. ஆனால் அமெரிக்காவினுள் இனவெறி, நிறவெறி என்பன தொடர்ந்து இருக்கவே செய்கின்றது.

இந்நிலையில் ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் அமெரிக்கா தலைபோடும் போது தனது பலம், பலவீனம் என்பவற்றையும் சரிவர எடைபோடவேண்டும்.

அமெரிக்கக் கறுப்பின மக்களின் உரிமைகளுக்காக ஓங்கிக் குரல் கொடுத்த முக்கியஸ்தர்கள் அமெரிக்காவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

மார்ட்டின் லூதர் கிங் கறுப்பினத் தலைவர்களில் உன்னதமானவர்.

அமெரிக்கக் கறுப்பின மக்களின் உரிமைகளுக்காக அவர் போராட்டங்களை நடத்திய காலத்தில் "எமது நாட்டு மக்கள் எப்போதோ ஒரு நாள் பேதங்களை மறந்து ஒன்றாக வாழ்வார்கள் என்று எனக்கொரு கனவு உண்டு!" எனக்கூறியிருந்தார்.

அக்கூற்றே இத்தடவை அட்லாண்டா ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்ப வைபவத்தில் ஒரு பாடலாகவும் இசைக்கப்பட்டது.

மார்ட்டின் லூதர் கிங்கின் அக்கனவு முழுமையாக நிறைவேறியதா? என்பது சந்தேகமாகவே இருக்கின்றது.

ஆகவே இலங்கையின் விவகாரத்தில் அமெரிக்காவோ, அல்லது வேறு நாடுகளோ ஆர்வங்காட்டுவதானால், நடுநிலை என்பதையே ஓர் ஆயுதமாக அவை கொள்ள வேண்டும்.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒரு வெளிச்சக்தியின் மத்தியஸ்தமே அவசியம் தேவைப்படுகின்றது. அம்மத்தியஸ்தம் நடுநிலையாகவே அமைந்திருக்கவேண்டியது இன்றியமையாததாகின்றது.

# தீர்க்கதரிசி குமாருக்கு-ஒரு திறந்த மடல்

**அன்பார்ந்த தீர்க்கதரிசித் தலைவர். அண்ணன் குமாருக்கு வணக்கம்.**

'வெளிநாட்டுத் தமிழ் பிரஜைகள் குழு' என்ற பெயரில் வெளியான பிரசுரம் கண்டு புல்லரித்துப்போனேன்.

அதனை எழுதி வடித்திருப்பவர் ஒரு சாணக்கியராக இருக்கவேண்டும். அது ஏன் தாங்களாக இருக்கக்கூடாது என்று என் மனம் கிடந்து தவியாய்த் தவிக்கிறது.

தீர்க்கதரிசி என்பதுடன் சாணக்கியர் என்ற மகுடத்தையும் தங்கள் பெருந்தலையில் சூட்டிப்பார்க்க விரும்புகிறேனேயல்லாமல் வேறொன்றுமில்லை.

வரலாற்றில் எப்போதாவது ஒரு முறை தான் தீர்க்கதரிசிகள் தோன்றுவதுண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

நாம் வாழும் காலத்தில் ஒரு தீர்க்கதரிசியான உங்களைத் தந்தமைக்காக பொன்னாவுக்கு நன்றி சொல்வதா, உங்களை தாங்கி நிற்கும் பூமிமாதாவுக்கு நன்றி சொல்வதா என்று தெரியாமல் தவிக்க வேண்டியிருக்கிறது.

உங்கள் தீர்க்கதரிசனத்தில் பொன்னாவின் தியாக மனப்பான்மையும் புல்லுக்குள் கிடக்கும் கல்போல கலந்தே கிடக்கிறது.

மலையகத் தமிழ் மக்களை நாடற்றவர்களாக்கிய சட்டத்தை தியாக மனப்பாங்கு இல்லாத தந்தை செல்வா எதிர்த்தார். தங்கள் தந்தை பொன்னா மட்டுமே போனால் போகிறார்கள் மலையக தமிழர்கள் என்ற தியாக உணர்வோடு ஆதரித்தார். அதனைப் போய் காட்டிக்கொடுப்பு என்று சொல்பவர்கள் அரசியலின் அடிச்சுவடி தெரியாதவர்கள்.

பாழாய்ப்போன யாழ்ப்பாண மக்கள் ஒரே ஒருமுறை தன்னை தோற்கடித்துவிட்டார்கள் என்பதற்காக, தன் மீதிவாழ்நாள் முழுக்க யாழ் மண்ணையே மிதிக்காதிருந்த பொன்னாவின் கொள்கை உறுதியை இப்போது நினைத்தாலும் மெய் சிலிர்க்கிறது.

கூட்டணியின் தலைவர்களில் ஒருவராக பொன்னாவை நியமித்தபோதும், அந்த மாபெரும் தலைவர் ஒருமுறைகூட 'தமிழ் ஈழம்' என்ற சொல்லை உச்சரித்ததேயில்லை. அதுவன்றோ கொள்கை குன்றுக்கு சாட்சி.

அமைச்சர் பதவியிலிருந்து பொன்னா என்ன சாதித்தார்? நாற்காலியாசை பொன்னா காலத்தில் தான் ஆரம்பமானது என்று சிலர் வியாக்கியானம் செய்வதை நான் காதில் வாங்குவதில்லை.

உங்கள் தந்தையின் அரும்பெரும் குணத்தோடு அவரது மறைவின் பின்னர் நீங்கள் அரசியலில் குதித்தீர்கள். சந்திர சூரியர்கள் எல்லாம் வானத்திலிருந்து பூ மழை பொழிந்ததாக சொல்வதில் தவறில்லை.

அண்ணன் அமிருக்கு வானத்தை பார்க்க நேரமில்லை. பார்த்திருந்தால் அங்கொரு துருவ நட்சத்திரம் தோன்றியதைக் கண்டிருக்கக்கூடும்.

அவர் வானத்தைப் பார்க்கத் தவறியதால் உங்களுக்கு வட்டுக்கோட்டைத் தொகுதியைக் கூட தர மறுத்துவிட்டார்.

அதனால்தான் ஒரு தீர்க்கதரிசியான நீங்கள் கூட்டணி ஒழிக என்று சாபமிட்டீர்கள். தமிழ் ஈழம் ஒருநாளும் கிடைக்கப்போவதில்லை என்று உறுதியாகத் தெரிவித்தீர்கள்.

அப்போது உங்களைப் பார்த்து, மறத்தமிழன், மானத்தமிழன், பணமும் உள்ள தமிழனான உங்களைப் பார்த்து 'துரோகி குமார்' என்று தூற்றினார்கள்.

அரசாங்க அதிபராக இருந்த உங்கள் அருமை மாமனார் முருகேசம்பிள்ளையின் தியாக வரலாறு பற்றியும் ஒரு துளியாவது சொல்லவேண்டும்.

அன்றைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா யாழ்வந்தபோது கூட்டணியினரும், இளைஞர்களும் பகிஸ்கரிப்பு, கறுப்புக்கொடி என்றெல்லாம் பிரச்சனை பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

உங்கள் மாமனார் முருகேசம்பிள்ளை துணிச்சலானவர். வீரத்தமிழர். அவர் நல்ல நீர் எடுத்து சிறிமாவோ அம்மையாரின் காலுக்கு ஊற்றி வரவேற்பு கொடுத்து வந்தாரை வரவேற்கும் வளநெஞ்சகத்தை காட்டினார்.

அதனைச் சொல்லியும் உங்களை துரோக பரம்பரை என்று வண்ணை ஆனந்தன் திட்டித்தீர்த்தார். அவருக்கு வீரமும் போதாது. விவேகமும் போதாது. அதனால்தான் வண்ணை ஆனந்தன் பகிரங்க விவாதத்துக்கு அழைத்தபோதும் நீங்கள் வீரத்தோடு ஒதுங்கிக் கொண்டீர்கள்.

அரசியல் நுட்பம் தெரியாத யாழ் மக்கள் உங்களை தோற்கடித்தார்கள்.



முதற்கோணல் முற்றுங்கோணல் என்பார்கள். பாழாய்ப்போன யாழ்ப்பாண மக்கள் உங்களை முதற்தேர்தலில் தோற்கடித்துவிட்டதால், தொடர்ந்து தோல்வியைத் தழுவிவருகிறீர்கள். தோல்வியைக் கண்டு துவண்டுவிடாத உங்கள் தூய தமிழ் வீரம் யாருக்கு வரும்?

பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த வரை உங்களை கவனிக்கவேண்டிய முறையில் கவனித்தார். உங்கள் வீரம் அவருக்குத் தெரிந்திருந்தது.

முன்னாள் ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜயதுங்காவுக்கும், ஜானாதிபதி சந்திரிக்காவுக்கும் உங்கள் தீர்க்கதரிசனப் புலமை தெரியவில்லை. அதனால் நீங்கள் யார் என்பதை காட்டுவதற்கு, தினம் அறிக்கை, கட்டுரை என்று ஆங்கிலப் பத்திரிகைகளில் எழுதவேண்டி இருக்கிறது.

நீங்கள் ஒரு சாணக்கியர் என்பதற்கு ஒரே ஒரு சான்றை வெளியிட அனுமதியுங்கள். தன்னடக்கம் காரணமாக நீங்கள் மறுத்தாலும் நான் சொல்லியே ஆகவேண்டும்.

கொழும்பில் உள்ள தமிழ் கட்சிகளை புலிகள் மூலம் அழித்துவிடுவது. அதுவரை புலிகளுடன் நட்பு பாராட்டுவது. அதன் பின்னர் புலிகள் என்ன கொழும்புக்கு வந்து அரசியலா நடத்தப்போகிறார்கள்? உயர மதில் சுவர் வீடு கோட்டை மாதிரியிருக்க உங்களுக்கு பயம் ஏன்? தனிக்காட்டு ராஜாவாக அரசியல் நடத்தலாம். உங்கள் சாணக்கியம் புரியாமல் நீங்கள் ஏன் திடீரென்று புலிகளை பாராட்டுகிறீர்கள் என்று சிலர் தலைமுடியைப் பிய்த்துக்கொள்கிறார்கள்.

வெளிநாட்டு தமிழர்கள்தான் அரசியல் தலைமை கொடுக்க வேண்டும் என்று நீங்கள் ஆரம்பித்துள்ள புதிய பணி ஒன்றே போதும். புலிகளை நீங்கள் வைக்கவேண்டிய இடத்தில் வைத்திருக்க விரும்புகிறீர்கள் என்பதற்கு.

புலிகளுக்கு சண்டைபோடத்தான் தெரியும். அவர்கள் சாகப்பிறந்தவர்கள். நீங்கள் சாதிக்கப் பிறந்தவர்கள்.

கல்வி, செல்வம் நிறைந்த குடும்பத்தில் பிறந்த நீங்கள், முதலில் படி, பின்னர் அரசியலைப் பிடி என்ற தத்துவத்தை அறிந்த வித்தகர்.

உங்கள் தகுதிக்கு சமமானவர்கள் வெளிநாடுகளில்தான் இருக்கிறார்கள்.

இனம் இனத்தோடு சேரும். பணம் பணத்தோடு சேரும். உங்கள் இனம் அதாவது புலமையும், பணச் செருக்கும் கொண்டவர்கள் வெளிநாடுகளில்தான் இருக்கிறார்கள்.

இங்கு-புயல் ஓய்ந்து, எல்லோரும் இறந்து, சாம்பல் மேடானபின்னர் அவர்கள் வரத்துடிக்கும் துடிப்பன்றோ மறத்தமிழ் உணர்ச்சிக்கு உதாரணம்.

எனவே- தப்பித் தவறி தமிழ் மக்களுக்குள் அவதரித்த தீர்க்கதரிசியான உங்கள் 'பணி' தொடர வாழ்த்தி விடைபெறுகிறேன்.

பணம், படிப்பு, பவிசு என்ற
முக்குணம் கொண்ட உங்கள்
அகராதிப்படியான
-'முத்தமிழன்'-



படிப்பகம்

# கொள்ளை ராணி
## பூலான்தேவி

5

புத்திலால் என்மீது பரவிக்கொண்டிருக்க, எனக்கு மூச்சு முட்டியது.

உடம்பெல்லாம் வலித்தது. அவன் கைகள் என் உடம்பெங்கும் அலைந்தன. என் கழுத்தருகே அவன் மூச்சுக்காற்று பட்டுக் கொண்டிருந்தது.

என் பலம் முழுவதும் போய்விட்டது. என்னால் அவனை என்மீதிருந்து தள்ளிவிட முடியவில்லை.

என் தொடைகள் அவனது தொடைகளால் அழுத்தப்பட்டுக்கொண்டிருந்தன. நோஞ்சான் மாதிரித் தெரிந்தாலும் புத்திலால் பாரமாக இருந்தான்.

என் சேலையை அவன் முழுவதுமாக அகற்றியிருந்தான். என் சட்டையை மட்டும் அவசரத்தில் அகற்றாமல் விட்டிருந்தான். என் மார்பை தன் கைகளால் பிடித்து திருகிக்கொண்டிருந்தான்.

எனக்கு வலித்தது. என் மேலே ஒரு அருவருப்பான சொறிநாய் புரள்வது போல வெறுப்பாய் இருந்தது.

மூச்சு முட்டி என் நினைவு மங்கும் போதுதான் எனக்குள் அந்த மாற்றத்தை உணர்ந்தேன்.

முன்பும் ஒரு முறை என் கனவில் தோன்றிய அந்த வெள்ளையுடைத் தேவதை இப்போதும் எனக்குள் என் மனக்கண்ணில் தெரிந்தாள். அழகான அவள் முகத்தில் ஒரு ஆவேசம் தெரிந்தது.

'பூலான் விடாதே, புத்திலாலை விடாதே' என்று அவள் சொல்வதுபோலக் கேட்டது.

எங்கிருந்து அத்தனை பலம் வந்ததோ தெரியவில்லை பற்களைக் கடித்தபடி வலுக்கட்டாயமாக முயன்று என் கண்களைத் திறந்தேன்.

புத்திலால் அப்போதுதான் என் பாவாடை முடிச்சை அவிழ்க்கத் தெரியாமல் அவதிப்பட்டுக்கொண்டிருந்தான்.

ஒரு முடிச்சை அவிழ்க்கக்கூட அவனால் முடியவில்லை. அவசரமும், காம வெறியும் அவனை நிதானமிழக்கச் செய்திருந்தன.

என் பலத்தை பிரயோகித்து அவனைத் தள்ளிவிட்டேன். புத்திலால் அதனை எதிர்பார்க்கவில்லை. சட்டென்று உருண்டான். பின்னர் சுதாகரித்துக் கொண்டு "எடியே சிறுக்கி, என்னையா தள்ளிவிட்டாய்?"என்று கத்தினான்.

அதற்குள் நான் எழுந்திருந்தேன். நான் ஒரு முடிவுக்கு வந்திருந்தேன். 'பூலான் யார் என்று காட்டவேண்டும்.'

புத்திலால் எழுந்து என்னை நோக்கி நிர்வாணமாகவே நடந்து வந்தான். நான் சுவரோடு சுவராக ஒட்டிக்கொண்டு அவன் அருகில் வரட்டும் என்று காத்திருந்தேன். முன்னர்போல அல்லாமல் இப்போது பயம் துளியும் இல்லாமல் போயிருந்தது.

"சிறுக்கி நாயே இந்தாடி....."

தொடர்ந்து மோசமான ஒருவார்த்தைப் பிரயோகத்தை சொல்லியபடி என்னை நெருங்கி, என் கழுத்தில் பிடித்தான்.

நான் எதிர்ப்பும் காட்டவில்லை. பயமும் காட்டவில்லை.

என்னை சுவரோடு சேர்த்து அழுத்திக்கொண்டு என் பாவாடைமுடிச்சை வெறிகொண்டவன்போல அறுத்தெறிந்தான்.

இப்போது நான் இடுப்புக்கு கீழே எதுவுமில்லாமல் நின்றேன். ஏனோ தெரியவில்லை மறைக்கவேண்டும் என்ற எண்ணமோ, வெட்கமோ எனக்கு வரவேயில்லை. உடம்பும், உணர்வும் மரத்துப் போயிருந்தன.

பாவாடை முடிச்சை அறுத்துவிட்டு குனிந்து என் உடலை வெறித்துப் பார்த்தான். பின்னர் என் முகத்தைப் பார்த்தான். இதுவரை அவன் முகத்தில் இருந்த கோபமெல்லாம் மறைந்து, தாபத்தோடு என்னைப் பார்த்தான். "பூலான்" என்று கூப்பிட்டபடி என் வாயோடு தன் வாயை பொருத்தக் குனிந்தான்.

இதுதான் தருணம்.

பூலான் விடாதே!

என் மனம் சொல்வதுபோல் கேட்டது. என் உடம்பெங்கும் ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டதுபோல தெரிந்தது.

நாயே வா! நான் யார் என்று காட்டுகிறேன் பார்! என்று நினைத்தபடி என் பலத்தையெல்லாம் திரட்டி தயாரானேன்.

அவன் என் உதட்டை தன் வாயால் கவ்விய அதே நொடியில்,

என் முழங்காலை நான் மடித்து அப்படியே வேகமாக உயர்த்தி,

என் முழுப்பலத்தோடும் அவன் ஆண் உறுப்புப் பகுதியில் இடித்தேன். இடியென்றால் இடிதான்!

"யம்மா!" என்று தீடீர் முனகலோடு பொத்திப்பிடித்தபடி புத்திலால் மடங்கி அமர்ந்தான்.

நான் தாமதிக்கவில்லை. ஓடிப்போய் குவியலாய் வீசப்பட்டிருந்த என் சேலையை வாரியள்ளிக்கொண்டு, கதவைத் திறந்து கொண்டு ஓடினேன்.

அவன் இன்னமும் முனகிக் கொண்டிருந்தான். எனக்கு நல்ல சந்தோசமாக இருந்தது.

வெளியே புத்திலாலின் அம்மா தூங்காமல் இருந்தாள். வாரிச் சுருட்டிக் கொண்டு ஓடிவந்த என்னைப் பார்த்ததும் எழுந்துவந்து அணைத்துக்கொண்டாள்.

எனக்கும் அந்த அணைப்பு தேவையாக இருந்தது. இதுவரை மரத்துக்கிடந்த உணர்ச்சியெல்லாம் அந்த அணைப்பில் வெடித்து விம்மியது. நான் வாய்விட்டுக் கதறி அழுதேன்.

ஒரு பசுமாட்டுக்காக என்னை ஒரு நாயிடம் தாரைவார்த்த என் அப்பா, ஒரு பூமாலையை குரங்கின் கையில் கொடுப்பது தெரிந்தும் தடுக்க வழிதெரியாமல் அப்பாவுக்கு அடங்கிப்போன என் அம்மா, ஒரு ஓட்டைச் சைக்கிளைக் கண்டதும் என்னை மறந்துவிட்ட என் தம்பி சிவநாராயணன் என்று எல்லோர்மீதும் இருந்த வெறுப்புத்தீர அழுது முடித்தேன்.

நான் அழுது முடிக்கும்வரை என் தலையை பரிவோடு தடவிக்கொடுத்தபடி இருந்தாள் புத்திலாலின் அம்மா.

ஏன் அழவேண்டும். எதற்காக அழவேண்டும்? என் மனதில் ஏற்பட்ட விசித்திரமான எண்ணங்களை நினைக்க எனக்கே வியப்பாக இருந்தது.

அழு என்றும் மனம்தான் கட்டளையிட்டது. இப்போது 'அழாதே பூலன்' என்றும் மனம்தான் சொல்கிறது.

யாருமே உதவிக்கு இல்லாத என் போன்ற பரிதாபத்துக்குரியவர்களுக்கு மனம்தானே ஒரே ஒரு துணை.



பூலான்

என் மனம் உருவாக்கிய நாயகிதான் அந்த வெள்ளையுடைத் தேவதை.

நான் அழுவதை நிறுத்திவிட்டு கண்களைத் துடைத்துக் கொண்டேன். நான் அப்படிச் செய்தது புத்திலாலின் அம்மாவுக்கு ஆச்சரியமாக இருந்திருக்க வேண்டும். என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தாள்.

அப்போதுதான் உள்ளேயிருந்து புத்திலால் தட்டுத் தடுமாறி வெளியே வந்தான். இடுப்பில் ஒரு துண்டு கட்டியிருந்தான்.

என் இடியின் வலி இப்போதும் அவன் முகத்தில் தெரிவதுபோலிருந்தது.

எனக்குத் தெரியும், என்னை அடித்து துவைக்கப் போகிறான். துவைக்கட்டும். ஆனால் மீண்டும் என் மேலே படுக்க வந்தான் என்றால் மீண்டும் அதே இடிதான். நான் செத்தாலும் பரவாயில்லை. இந்த நாய் என்மீது படுக்கக்கூடாது. 'பூலான் யார் என்று நினைத்தான்? பூலான் யார் என்று காட்டத்தான் போகிறேன்!'

என் தலைமுடியில் பிடித்திழுத்தான். "விடு அவளை" என்று தடுத்தாள் புத்திலாலின் தாய். ஒரு கெட்டவார்த்தையால் தாயாரை திட்டிவிட்டு, அவள் தோளில் கைவைத்து பின்புறமாய் தள்ளிவிட்டான். பாவம், கிழவி, பின்புறமாய் சரிந்து மல்லாந்து விழுந்தாள்.

"பாவி, பாவி, உருப்படுவியா நீ?" என்று வலியிலும், வேதனையிலும் புலம்பினாள்.

என்னை தலைமுடியில் பிடித்து தரதரவென்று அறைக்குள் இழுத்துச் சென்று, கதவை படீரென்று அறைந்து சாத்தி தாளிட்டான்.

நான் பயப்படவேயில்லை. என்னதான் செய்துவிடுவான் என்று பார்க்கலாம். இனி நான் அனுபவிக்க வேண்டியது சாவொன்று தானே. நான் தயார்.

என் தலைமுடியை விட்டுவிட்டு ஒரு மூலையில் குப்பையாகக் கிடந்த பொருட்களுக்குள் தேடி ஏதோ ஒன்றை கையில் எடுத்துக்கொண்டான்.

அது ஒரு சவுக்கு.

கையில் சவுக்கோடு என்னை ஒரு பார்வை பார்த்தான். அது நாறிய மீனைப் பூனை பார்ப்பதுபோல இருந்தது. 'சனியன்! சண்டாளன்.' என்று மனதில் சபித்தேன்.

என் அருகில் வரவில்லை. சற்று எட்டவே நின்று கொண்டான். எல்லாம் ஒரு இடிக்குக்குப் பின் ஏற்பட்ட மரியாதை.

எட்டிநின்றபடியே சவுக்கை வீசினான். என்வலது தோளில் விளாசி விலகியது. பயங்கரமாய் சுள்ளென்று வலித்தது. பல்லைக் கடித்துக் கொண்டேன்.

"கழட்டடி எல்லாவற்றையும்" என்றான். நான் வெறித்துப் பார்த்தேன். அவன் மீண்டும் சவுக்கை வீசினான். இப்போது என் வலப் பக்க தொடையில் பட்டது. மரணவலி. ஆனாலும் என்னிடமிருந்து ஒரு முனகல் கூட எழவில்லை.

அவனுக்கும் அது ஆச்சரியமாக இருந்திருக்க வேண்டும். கொஞ்சம் பயந்துவிட்டான் போலவும் தெரிந்தது. என் முகத்தை கூர்ந்து பார்த்தான்.

எனக்கே ஆச்சரியம்தான். ஒரு சின்னப் பிரம்பால் அம்மா அடித்தல்கூட ஏழு வீடு அறிய சத்தம் போட்டு அழுவேன்.

"நான் இன்னமும் அடிக்கவேயில்லையேடி. ஏன் ஆர்ப்பாட்டம் பண்ணி ஊரைக் கூட்டுகிறாய்? கள்ளி. பொல்லாத கள்ளி" என்று அம்மா திட்டிவிட்டு பிரம்பைப் போட்டுவிட்டுப் போய்விடுவாள்.

இப்போது சவுக்கின் முனைபட்டு சுள்சுள் என்று வலிக்கும்போதும் நான் அழ வில்லை. ஒரு சொட்டுக் கண்ணீர்கூட விடவில்லை.

"என்னடி சிறுக்கி, குத்துக்கல்லாட்டம் நிற்கிறாய்?" என்று கேட்டான் புத்திலால்.

அப்போதும் நான் அசையாது நின்றேன். அவனையே வெறித்துப்பார்த்துக்கொண்டு நின்றேன்.

சட்டென்று சவுக்கை வீசினான். எப்போது என் கை உயர்ந்தது. என் கையில் சவுக்கு நுனி எப்படி மாட்டியது என்று எனக்கே தெரியவில்லை. ஏதோ ஒரு உணர்வில் உந்தப்பட்டு புத்திலால் வீசிய சவுக்கை தடுத்து அதன் நுனியில் பிடித்தபடி, புத்திலாலைப் பார்த்தபடி சொன்னேன்;

"வேண்டாம். இனி அடிக்காதே!"

என் குரல்தானா அது? எங்கோ ஒரு உயரத்தில் இருந்து ஒலிப்பதுபோல எனக்கே என் குரல் திருப்பிக்கேட்டது. நான் சவுக்கு நுனியை விட்டேன்.

புத்திலால் பயந்துவிட்டான். பயந்ததை வெளியே காட்டிக்கொள்ளாமல், "உன்னை என்ன செய்கிறேன் பார்!" என்றுவிட்டு, சவுக்கை வீசிவிட்டு வெளியே சென்று விட்டான்.

அப்போதுதான், புத்திலால் பயந்து மிரண்டு வெளியேறிய அந்த நொடியில்தான்,

என் மனதில் ஆழமாக, அந்த உண்மை உரைத்தது.

குரைக்கிற எந்த நாயும் கடிப்பதில்லை. துரத்துகிற நாய் நாம் ஓடும்வரைதான் துரத்தும். நின்று கல்லெடுத்து அடிக்கத் தொடங்கினால் எந்த நாயும் தொடர்ந்து துரத்தாது!'

என் பிற்காலவாழ்க்கையை தீர்மானிக்கப் போகும் எண்ணமாயும், விதையாயும் அது இருக்கப்போகிறது என்பதை அந்த பதினொரு பயதில் நான் உணரவில்லை.

ஆனால், வயதுக்குமீறிய தைரியமும், வன்மமும் அந்த வதினொரு வயதிலேயே எனக்குள் ஏற்பட்டுவிட்டிருந்தன.



பத்துநாட்கள் புத்திலால் என் அருகிலேயே வரவில்லை. பதினொராவது நாள் நான் கிணற்றுக்கு சென்று பானையில் நீர் எடுத்துவந்தேன்.

என்னைவிட பெரிதான நான்கு ஐந்து பையன்கள் என்னைப்பார்த்து அசிங்கமாக ஏதோ சொல்லிச் சிரித்தார்கள். நான் கவனியாததுபோலச் சென்றேன்.

என் தலையில் இருந்த பானையில் ஒரு கல்வந்து விழுந்தது. பானை பொத்துக் கொள்ள நீர் கொட்டியது. நான் முழுவதும் நனைந்துபோனேன்.

பானையைக் கிழே போட்டுவிட்டு திரும்பினேன். "வேசிமக்களே! உங்கள் அக்காள் தங்கைமார் எங்கேயடா? நாய்களுக்கா பிறந்தீர்கள் நாய்களே!" என்று கத்தினேன்.

அவர்கள் எதிர்பார்க்கவில்லை. எடுத்தார்கள் ஓட்டம். நான் போட்ட சத்தம் கேட்டு கிணற்றில் நீர் அள்ளிக்கொண்டிருந்த பெண்கள் என்னை ஒரு வேண்டாத்தகாதவள் போலப் பார்த்தார்கள். நான் போய்விட்டேன்.

புத்திலால் அப்பாவுக்கு கடிதம் போட்டிருந்தான். அப்பா வரும்போது நான் கடும் காய்ச்சலில் இருந்தேன். அப்பாவிடம் புத்திலால் சத்தம் போட்டான்.

"பெண்ணா அது பிசாசு, குட்டிப்பிசாசு. என்ன நீ ஏமாற்றிவிட்டாய். உனக்கு பாடம் புகட்டாமல் விடமாட்டேன். முதலில் இந்தப் பிசாசை கூட்டிப்போ" என்று கத்தினான்.

அப்பா மன்றாடினார். அவன் சமாதானமாகவில்லை.

என்னால் நடக்க முடியவில்லை. வெளியே மழை வேறு அடித்துப் பெய்தது.

என்னைத் தூக்கி தோளில் போட்டுக் கொண்டு மழையில் நடக்கத் தொடங்கினார் அப்பா. அவரது கண்களில் இருந்து கண்ணீர் மழையோடு சேர்ந்து கொட்டிக்கொண்டிருந்தது. எனக்கு ஏனோ அப்பாமீது இரக்கம் வரவில்லை.

என் வாழ்வின் இரண்டாவது திருப்பம் ஆரம்பமாகப்போகிறது என்று பெய்து கொண்டிருந்த மழைக்கும் தெரியுமோ என்னவோ. ——— (தொடர்ந்து வரும்)

**தருவது — ரசிகன்**

---

# அம்பலமாகிறார்
# ஆசாமி பிரேமானந்தா

தமிழ்நாட்டை கலக்கிய சாமியார் பிரேமானந்தாவை மறந்திருக்கமாட்டீர்கள். இடையில் தமிழகத் தேர்தல், புதிய ஆட்சி பதவிக்கு வந்த அமர்க்களம், ஜெயா–சசி ஊழல்கள் அம்பலம் என்று பல்வேறு பரபரப்புக்களால் தமிழ்நாட்டில் கூட பிரேமானந்தா விவகாரம் அமுங்கிப்போயிருந்தது.

இப்போது மறுபடி பிரேமானந்தா விவகாரம் தமிழகப் பத்திரிகைகளிலும் அடிபட்டுக்கொண்டிருக்கின்றது.

பெண் நீதிபதி ஒருவர் முன்பாக பிரேமானந்தா வழக்கு விசாரணைகள் சூடாக நடைபெற்று வருகின்றன.

பிரேமானந்தாவால் பாதிக்கப்பட்ட மற்றும் பாவிக்கப்பட்ட பெண்கள் இரகசியமாக சாட்சியமளித்து வருகின்றனர்.

ஆரம்பத்தில் விசாரணைகள் பகிரங்கமாகவே நடைபெற்றன. பத்திரிகையாளர்களும் விசாரணைகளைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டனர்.

பிரேமானந்தா ஆசிரமத்தில் முக்கிய புள்ளியாக இருந்த ஒருவர் அரசதரப்பு சாட்சியாகமாறி உண்மைகளைக் கக்கிக் கொண்டிருக்கிறார்.

அவரது சாட்சியத்தில் வெளிப்படும் உண்மைகள் திடுக்கிட வைக்கின்றன.

ஆசிரமத்தில் உள்ள பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போது காவி வேட்டியை நழுவ விட்டுவிடுவாராம் சாமியார்.

சில பெண்கள் உடனே முகத்தைத் திருப்பிக் கொள்வார்கள். ஒரு சிலர் மட்டும் விழிகளை அலையவிடுவார்களாம். உடனே எடை போட்டுவிடுவார் சாமியார்.

விழிகளை அலையவிட்ட பெண்களை



பின்னர் தனியாக தன் அறைக்கு வர வழைப்பாராம். அவர்களோடு ஜாலியாக இருப்பாராம்.

தனது உதவியாளர்களை அழைத்து ஆசிரமப் பெண்களை முத்தமிடுமாறு கூறுவார் சாமியார். உதவியாளர்களும் சாமியார் சொல்லும் பெண்களை கட்டியணைத்து முத்தமிடுவார்கள். சாமியார் எல்லாவற்றையும் கண்ணாரக் கண்டு ரசித்தபடியிருப்பாராம்.

ஆசிரமப் பெண்களும் அழுதழுது சாட்சியம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆசிரமத்தில் தனியாக குளியலறை இருந்தாலும் சாமியார் தங்களை வெளியே உள்ள கிணற்றில்தான் குளிக்கச் சொல்லுவாராம்.

சிறிய துணியை மார்புக்கு குறுக்காக கட்டிக்கொண்டு குளிக்குமாறு நிபந்தனையும் போட்டுவிடுவார்.

பின்னர் அவர்கள் குளிக்கும்போது நேரில் வந்து கண்டு களிப்பாராம் சாமியார்.

ஆசிரமப் பெண்களை அடிக்கடி அழைத்து கெட்ட வார்த்தைகளால் அசிங்கமாகவும், ஆபாசமாகவும் திட்டுவது சாமியாரின் பொழுது போக்குகளில் ஒன்று.



பிரேமானந்தா எத்தனை பெரிய அயோக்கிய ஆசாமி என்று தெரிந்தும் கூட ஒரு பிரபல சட்டத்தரணி அவருக்காக ஆஜராகிறார்.

அவரது பெயர் ராம்ஜெத்மலானி. அரசியலில் ஊழல், நேர்மையீனம் என்பவற்றுக்கு எதிராக போராடுவதாக கூறிக் கொள்பவர் அவர்.

தொழில் என்ற ரீதியில் வாதாடுவதாகக் கூறிக்கொண்டு, கடைந்தெடுத்த அயோக்கியர்களை காப்பாற்ற தமது சட்ட மூளையைப் பயன்படுத்துவதும் அயோக்கியத்தனம்தான்.

தன்னை ராம்ஜெத்மலானி காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையுடன் கூலாக இருக்கிறார் பிரேமானந்தா.

ஜெயலலிதாவின் உடன்பிறவா சகோதரி சசிகலாவும் பிரேமானந்தாவின் பக்தகோடிகளில் ஒருவர். இருவருமே தற்போது சென்னைச் சிறையில்தான் இருக்கின்றனர்.

சசிகலா தன்னிடம் "பிள்ளை வரம் கேட்டு வந்தார்."என்று கூறியிருக்கிறார் சாமியார்.

சசிகலாவுக்கு வியாபாரரீதியிலும் சாமியாருடன் தொடர்பு இருந்தது. அதனை வெளியிட சாமியாரும் விரும்பவில்லையாம்.

ஆனாலும், சசிகலா தன்னைக் காப்பாற்றத் தவறிவிட்டார் என்ற கோபம் மட்டும் சாமியாரிடம் மறையவில்லை.

சட்டத்தின் ஓட்டைகளுக்குள் புகுந்து விடுதலையாகிவிடலாம் என்று நம்பிக் கொண்டிருக்கும் சுவாமிக்கு ஒரே ஒரு கவலைதான். அது திவ்யா 'மாதாஜி'யைப் பற்றிய கவலை.

திவ்யா இலண்டனில் ஒரு தொழில் அதிபரோடு காதலாகிவிட்டதாக ஒரு செய்தி எட்டியிருக்கிறதாம். அதனால் அப்செட்டாகி இருக்கிறாராம் சாமியார்.

திவ்யா கொழும்பில் ஒரு தொழிலதிபர் உதவியோடு பதுங்கி இருப்பதாகவும் மற்றொரு தகவல் கிடைத்திருக்கிறது.

தொழிலதிபர்கள் என்றால் திவ்யா மாதாஜிக்கு ஒரு தனிப்பிரியம். அவர்கள் கேட்கும் வரமெல்லாம் வாரிக்கொடுப்பாராம்.

தற்போது எந்தத் தொழில் அதிபருக்கு திவ்யா வரம் கொடுத்துக்கொண்டிருக்கிறார் என்று அறியமுடியாமல் சாமியார் ஆடிப் போயிருக்கிறார்.

---

# "நான் மீண்டும் சரிவில் இருந்து மீளுவேன்!"

இந்திய கிரிக்கெட் அணி கப்டனாக டெண்டுல்கர் பதவி ஏற்றுள்ளார்.

இலங்கையில் சிங்கர் கிண்ணக் கிரிக்கெட் போட்டி ஆகஸ்ட் 24 முதல் செப்டம்பர் 7ம் திகதிவரை நடக்கவுள்ளன.

அதன் பின்னர் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே ஐந்து நட்புமுறை போட்டிகள் கனடாவில் நடைபெற உள்ளன. இந்தப் போட்டிகள் சகாரா கிண்ணத்திற்காக நடைபெறுகின்றன.

டெண்டுல்கர் கப்டனாக பொறுப்பு ஏற்ற பின்னர் முன்னாள் கப்டன் அசாருதீனின் நிலைபற்றி கேள்வி எழுந்துள்ளது. அசார் தொடர்ந்து விளையாடுவரா இல்லையா? என்பதுதான் கேள்வி.

அசாருதீன் அளித்துள்ள பேட்டி ஒன்றில் தனது எதிர்காலம் குறித்து கூறியுள்ளார். தனது பேட்டியில் அசார் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

தற்போதைய சூழ்நிலையில் நான் பிரச்சனையில் இருக்கிறேன். அதற்காகப் பயந்து ஒதுங்கி விடமாட்டேன். தொடர்ந்து 'பேட்டிங்'கில் கவனம் செலுத்துவேன். கடந்த காலங்களில் பல சீனியர் வீரர்கள் உதவி உள்ளனர். எனக்குப் பதவி இருந்தாலும் இல்லையென்றாலும் ஒன்றுதான். தொடர்ந்து எனது திறமையை நிருபிப்பதில் கவனமாக இருப்பேன். தென்னாபிரிக்க சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது நல்ல பலன் கிடைக்கவில்லை. அப்போது கப்டன் பதவியை உதறித்தள்ள முடிவு செய்தேன். அப்போதும் எனக்குச் சாதகமான நிலைமை இல்லை. அதனால் அப்படி ஒரு முடிவு எடுத்து. பிறகு அதை மாற்றிக் கொண்டேன்.

என்னுடைய 12 ஆண்டு கிரிக்கெட் வாழ்வில் ஏற்றத் தாழ்வுகள் இருந்துள்ளது. நான் தேசிய அணிக்கு ஆடத் தொடங்கிய போது தொடர்ந்து 3 சதம் அடித்தேன். அப்போது என்னைப் பாராட்டாதவர்களே கிடையாது. ஆனால் சமீபத்தில் இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் 3 டெஸ்ட்டில் 42 ரன் மட்டும் எடுத்தேன். இந்தக் குறைந்த ரன்களால் மிகவும் விமர்சிக்கப்பட்டேன்.

கிரிக்கெட் வரலாற்றில் என்னைத் தக்க வைத்துக் கொள்ளக் கடுமையாகப் பயிற்சி செய்தேன்.

தற்போது எனக்கு எதிராக அனைவரும் விமர்சனம் செய்கின்றனர். ஏன் அப்படி நடந்து கொள்கிறார்கள் என்று தெரியவில்லை. இந்த விமர்சனம் மிகவும் வேதனையைத் தருகிறது. என்னைப் பற்றிய வதந்திகள் வேகமாகப் பரவுகின்றன. அதற்குத்தான் அனைவரும் முக்கியத்



துவம் தருகின்றனர். என்னுடைய தனிப்பட்ட அந்தரங்க வாழ்க்கையை ஏன் அலசி ஆராய்கிறார்கள் என்று தெரியவில்லை.

விரைவில் நான் சரிவில் இருந்து மீளுவேன். அப்போது இகழ்ந்தவர்கள் மீண்டும் புகழ்வார்கள். எப்படிப்பட்ட விமர்சனம் வந்தாலும் நான் நிலைகுலைய மாட்டேன்.

இவ்வாறு தனது பேட்டியில் அசார் தெரிவித்துள்ளார்.



www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com




## மலையும் - மலையும் மோதிக்கொண்டால்

மலையும் மலையும் மோதிக்கொண்டால் மல்யுத்தம் என்று அர்த்தம். இடி இடித்ததுபோல மைதானம் அதிர இந்த மலைகள் மோதியது இம்முறை ஒலிம்பிக் போட்டியில்தான்!

அலெக்சாண்டர் கறெலின் (ரஷ்யா), பெஹெமொத் மற் கஃபாறி (அமெரிக்கா) இருவரும் மல்யுத்த மலைகள். அலெக்சாண்டர் கறெலின் (இடதுபுறம்) ஏற்கெனவே இரண்டு தடவை தங்கம் வென்றவர். இம் முறையும் தங்கத்தை குறிவைத்து களத்தில் இறங்கினார்.

அதிபார கிரேக்க-றோமன் மல்யுத்தம் என்றழைக்கப்படும் இந்தப் போட்டியில் இம்முறையும் அலெக்சாண்டர் கறெலின்தான் அமெரிக்க வீரரை மண் கவ்வச் செய்துவிட்டு தங்கத்தை தட்டிக்கொண்டார்.



## பதமறிந்து பழம் பறிக்கும் ரோபோக்கள்

தக்காளிப் பழங்களை மரத்திலிருந்து பறிப்பதற்காக இப்புதிய ரோபோ-(இயந்திர மனிதன்) கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பழங்களுக்கு எந்த விதமான பழுதும் ஏற்படாமல்-நன்றாகக் கனிந்த பழங்களை பதம்பார்த்து தெரிவுசெய்து இது பறித்தெடுப்பதுதான் இதன் விசேஷ திறமை. தெற்கு இங்கிலாந்திலுள்ள பெட்ஃபோட்ஷையரிலிருக்கும் சில்சு ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானி நிக் ரில்லற் இந்த இயந்திர மனிதனை வடிவமைத்துள்ளார். தனது கருவி எவ்வாறு தக்காளிப் பழங்களைத் தேர்ந்தெடுக்கிறது என்பதை ரில்லற் விளக்கிக் காட்டுகிறார்.

அடர்த்தியாக வளரும் தக்காளிச் செடிகள் ஒரே தடவையில் நூற்றுக் கணக்கான பழங்களைத் தரும். இச் செடியின் கிளைகளுக்குள் மனிதன் தன் கைகளை விட்டுப் பழங்களைப் பிடுங்கும்போது பல பிரச்சனைகள் உருவாகின்றன. இயந்திர மனிதனால் மிகவும் சுலபமாகவும் வேகமாகவும் பழுதடையாமலும் பழங்களைப் பறிக்க முடிகிறதாம். இன்னும் எதற்கெல்லாம் இயந்திர மனிதனை தயார்படுத்தி விடப் போகிறார்களோ?

தகவல் எம்.எச்.அலாவுதீன், சவுதி.



## உச்சத்தில் உல்லாசம்

உலகில் மிக உயரமானதும், மிக மிக நவீனமானதுமான ஹோட்டல் இதுதான். படத்தில்தான் சிறிதாகத் தெரிகிறது. பக்கத்தில் சென்றால்தான் பிரமாண்டம் தெரியும்.

இந்த நவீன ஹோட்டல் அமெரிக்காவில் உள்ள லாஸ்வேகாஸ் நகரில் இருக்கிறது. 'ஸ்ராடோஸ்பர் டவர்' என்பது இதன் பெயர். 1149 அடி உயரமான நான்கு இணைத் தூண்களின் மேல் இக் ஹோட்டல் கட்டப்பட்டுள்ளது. இணைத் தூண்கள் மத்தியில் உள்ள 'லிப்ட்' மூலமாகத்தான் ஹோட்டலுக்கு செல்ல வேண்டும். ஹோட்டல் அறைகள் வழியாக நகரின் முழு அழகையும் கண்டு ரசிக்கலாம்.

காதலர்கள்தான் இங்கு மொய்க்கின்றனர். திருமண ஜோடிகளும் வருகின்றனர். யாருடைய இடையூறும் இல்லாமல் உச்சத்தில் உற்சாகமாக இருக்கலாம். தடையே இல்லாமல் முழுதாக ரசிக்கலாம் நகரை.



## தகவல் பெட்டி

## நாசம் அல்ல வாசம்!

என்ன ஒரு வித்தியாசமான காட்சி பார்த்தீர்களா? நீண்ட சுடு தூரப் பீரங்கியின் (கனன்) வெற்றுச் ஷெல் கூட்டுக்குள் பூங்கொத்தை செருகுகிறார் ஒரு படைவீரர். பொஸ்னியாவில் உள்ள சேர்பிய படைவீரர் இவர்.

நம் நாட்டிலும் ஷெல் கூடுகளுக்குள் பூங்கொத்தை வைக்கும் பூங்காலம் வருமா? பூங்கொத்து ஷெல் வீட்டு கூரைமீது விழுந்தால்கூட மன்னிக்கலாம். நாசம் செய்யாது வாசம்தான் வீசும்.

www.padippakam.com

## தங்கைக்கு வாய்ப்பில்லை

ஏ.ஆர். ரகுமானுக்கு ஒரு தங்கை இருக்கிறார். அவரது பெயர் ரேகா. குரல் வளம் நன்றாக இருப்பதால் பின்னணி பாட ஆசைப் பட்டார்.

அண்ணனிடம் வாய்ப்புக் கேட்க அவரும் விரும்பவில்லை. தங்கை என்ற ரீதியில் வாய்ப்புக் கொடுக்க ரகுமானும் விரும்பவில்லை.

வாய்ப்புக் கொடுத்திருப்பவர் இசையமைப்பாளர் சிற்பி. ரேகாவின் குரல் வளம் உங்கள் செவிகளை விரைவில் நிறைக்கலாம்.

## மீண்டும் லதா

எம்.ஜி.ஆர். படங்களில் நடித்தவர் எம்.ஜி.ஆரோடு நெருக்கமாக பேசப்பட்டவர்களில் ஒருவர் லதா. பின்னர் எம்.ஜி.ஆரோடு பிரச்சனை. இடையிலே ரஜினியோடு காதல். அதன்பின்னர் இலங்கைத் தொழிலதிபர் ஒருவரை மணந்தார். தற்போது மீண்டும் நடிக்க வரப்போகிறார்.

ராஜ்கிரண் நடிக்கும் படம் ஒன்றில் அம்மாவாக நடிக்கப்போகிறாராம் லதா.

## சர்மிளாவின் குணம்

மலையாள நடிகரும், 'பூவிழிவாசலிலே', சூரியன் போன்ற படங்களில் நடித்த தாடிக்கார வில்லன் நடிகருமான பாபு ஆன்டனியை காதலித்தவர் சர்மிளா. காதல் திடீர் தோல்வியில் முடிய தற்கொலை செய்யவும் துணிந்தவர் சர்மிளா.

பழசையெல்லாம் மறந்துவிட்டு இப்போது மலையாளப் படங்களில் நடித்து வருகிறார் சர்மிளா.

சர்மிளா பற்றி அவருடன் நடிக்கும் நடிகர்கள் சொல்லும் புகார் என்ன தெரியுமா?

கொஞ்சம் அவருடன் நட்புரிமையோடு பழகிவிட்டு, வேறு நடிகையுடன் சிரித்துப் பேசினால் கூட சர்மிளாவால் தாங்க முடியாது" என்கிறார்கள்.

கவுண்டமணியோடு முன்னர் கிசுகிசுக்கப்பட்ட ஷர்மிலியும், சர்மிளாவும் ஒன்றல்ல.

## குளிய...
## தணிக்கைய...

குளியல் பல வகை...
திட்டுகிறார்களே என்...
தமிழ்ப் படங்களி...
அதாகப்பட்டது கவர்...
தணிக்கைக் குழு...
கவர்ச்சிக்காட்சி தப்பு...
யோடு ஒட்டியது ...
கவர்ச்சியாகவும் அ...
கள் கடைப்பிடிக்கும் ...
சமீபகாலத்தில் ...
தேடிக்கொடுத்த பு...
'ரசிகன்' படத்தில் வி...
ரசிகர்களை குளிர...
அநேகமான படங்க...
படமெடுத்தார்கள்.
குளிக்கும் கதா...
என்னமோவெல்லாம் ...
வெட்கப்படுவார். நா...
மின்சாரம் பாய்ந்து இ...
உடனே கனவுக் காட்...
பாண்டியன் பட...
'கடவுளே, கடவுளே' ...
துடிப்பார் குஷ்பு. அ...
அதன்பின்னர் வந்த ...
பல நடிகர், நடிகைக...
பாரதிராஜாவுக்கு...
குறுக்காக பாவாடை...
பசுமையான பின்ன...
தமிழ்ப் படங்கள்...
படங்களில் சற்றுத் தா...
படங்களில் குளிப்பது...
ரசிப்பதற்கென்றே த...
இருக்கிறது.
திரைப்பட உல...
குளிப்பது கவர்ச்சி...
விரும்பி ரசிப்பதால் கு...
அவ்வப்போது ...
கொண்டிருக்க ...
இருக்கிறது என்றா...
ஒரு தயாரிப்...
பாளர்.

## அகானா வருகிறார்

'அரண்மனைக் கிளி', 'சீவலப்பேரி பாண்டி' போன்ற படங்களில் நடித்த அகானாவை யாராவது ஒருவர் நினைத்துப்பார்த்தீர்களா? நீண்டநாட்களாக படவாய்ப்பு இல்லாமல் மொடலிங் உட்பட பல்வேறு தொழில்கள் செய்தார்.

'சீவலப்பேரி பாண்டியில்' நடிக்கும்போது நெப்போலியனுடன் ராசியாக இருந்தவர் அகானா. சமீபத்தில் நெப்போலியனைச் சந்தித்து பழைய நினைவுகளை மலரவிட்டிருக்கிறார்.

'சிவன்' படத்தில் நெப்போலியன் கதாநாயகன். ஜோடி சுவாதி. மற்றொரு கதாநாயகன் அருண் பாண்டியன் அவருக்கு ஜோடியாக அகானாவை சிபாரிசு செய்தார் நெப்போலியன். சிபாரிசு ஏற்றுக் கொள்ளப் பட்டது.

## ஊர்மிளா தரிசனம்

'இந்தியன்' படத்தில் ஊர்மிளாவின் அழகை போதியளவு காணமுடியவில்லையே என்று ஏங்கிய ரசிகப் பெருமக்களுக்கு ஒரு நற்செய்தி.

தெலுங்கில் சக்கரவர்த்தியும், ஊர்மிளாவும் ஜோடியாக நடித்த படம் தமிழில் மொழிமாற்றப்படுகிறது. 'அன்று ஒரு நாள்' என்ற பெயரில் தமிழில் வரப்போகிறது.


இதயமே, இதயமே பட நாயகனும், மகேஸ்வரியின் காதலருமான சக்கரவர்த்தியை விழுந்து விழுந்து காதலிக்கிறார் ஊர்மிளா. அதாவது படக்கதைப்படி காதலிக்கிறார்.

காதலுக்கு எதிர்ப்பு வருகிறது. இருவரும் வீட்டைவிட்டு ஓடிச் செல்கிறார்கள். அப்போது பார்த்து முதலமைச்சர் கொலை செய்யப்பட, அதில் காதலர்கள் மாட்டிக்கொள்கின்றனர். அதன் பின்னர் ஒரே விறுவிறுப்பாகப் போகிறது படம். இயக்கம்: ராம்கோபால் வர்மா.

வை. விஜயா, ரகுவரன். ஆகியோரும் நடிக்கின்றனர். தமிழில் பாடல்கள், வைரமுத்து. இசை: ஸ்ரீ.



அருண்குமார்-மந்த்ரா
படம்- பிரியம்



## 'பிரியமுடி'

இரண்டு கோடி ரூபாய் செலவில் பிரமாண்டமாக தயாராகும் படம் 'பிரியம்'. படப்பிடிப்புக்கள் அநேகமாக முடிந்து விட்டன.

'முறைமாப்பிள்ளை' படம் நன்றாக ஓடியது. 'பிரியம்' படமும் நன்றாக ஓடினால் போதும் அருண்குமார் முன்னணி ஹீரோவாகி விடுவார்.

விஜயகுமாரின் மகனான அருண்குமார் இளவயது விஜயகுமார் போலவும், ஆவேசப்படும்போது இளவயது சத்யராஜ் போலவும் சாயலில் இருப்பதும் சாதகமான விஷயம்.

'பிரியம்' படத்தில் சண்டைக் காட்சிகளில் மட்டுமல்லாமல் மந்த்ராவுடன் காதல் காட்சிகளிலும் புகுந்து விளையாடியிருக்கிறாராம் அருண்குமார்.

## வந்தான் தமிழ் செல்வன்

கவிஞர் வாலிக்கு பல வருடங்களுக்கு பின்னர் வாய்ப்புக் கொடுத்திருக்கிறார் பாரதிராஜா. 'தமிழ் செல்வன்' படத்தில் 'இரண்டு கண்ணும் பார்வையால் மோதுகின்றதே' என்ற பாடல் வாலி எழுதியதுதான்.

நீண்ட நாட்களாக தயாரிப்பில் இருந்த படம் தமிழ் செல்வன். தற்போதுதான் வெளிவந்துள்ளது. சத்யராஜின் மனைவியும், தயாரிப்பாளருமான ராமநாதனுக்கும், பாரதிராஜாவுக்கும் இடையில் ஏற்பட்ட இழுபறிதான் படம் தாமதமாக காரணம். விஜயகாந்த் தலையிட்டு சமரசம் செய்தமையால் பிரச்சனை தீர்ந்து படம் வெளியாகியுள்ளது.

## வெளிநாட்டு இறக்குமதிகள்

தமிழ் படங்களில் நடிக்க மும்பாய் நடிகைகளை இறக்குமதி செய்வதில் இயக்குநர்களுக்கு சலிப்பு ஏற்பட்டுவிட்டது. அதனால் இப்போது வெளிநாட்டு அழகிகளை தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

ரமேஷ் அரவிந்த் ஜோடியாக 'அமெரிக்கா அமெரிக்கா' படத்தில் அமெரிக்காவில் உள்ள தமிழ்ப் பெண் ஒருவர் நடிக்கிறார். மன்சூர் அலிகான் நடிக்கும் 'மாயாவி' படத்திலும் அமெரிக்க அழகி வைஜந்திரோஸ் மன்சூருக்கு ஜோடியாக நடிக்கிறார். ஆர்.சுந்தர்ராஜன் இயக்கத்தில் விஜய் நடிக்கும் படத்திலும் இலண்டன் அழகி ஒருவரை நடிக்க வைக்கப் போகிறார்கள். அவரும் ஒரு தமிழ் பெண் தானாம்.

பாவம், மும்பாய் நடிகைகளின் பிழைப்புக் கெட்டு விட்டது.

## கைமேல்...


தெலுங்கில் பிஸியாக கொண்டாலும் குறிப்பிடும்... யாருக்கு என்றா கேட்கி... தமிழில் சத்யராஜி... படத்தில் நடித்துவரு... 'சேனாதிபதி' பட... படப்பிடிப்பில் மட்டு... பாலுவுக்கு ஒத்து... தர்யா.

ஒத்துழைப்பு... திருப்பூர் பா... கள் இரண்... தர்யாதான்...

## முகப்பில் மீனா

பார்த்திபன்

படம்- பாரதி கண்ணம்மா



ராம்கி-சங்கவி
பொண்டாட்டி போட்ட முடிச்சு



விஜயகாந்த்-ரோஜா
படம்- தமிழ்செல்வன்

## 'ரசிகை'

விஜய் நடிக்க அவரது தந்தை எஸ்.ஏ.சந்திரசேகர் இயக்கிய படம் 'ரசிகன்' விஜய்யின் அம்மா ஷோபாவும் கதை எழுதுபவர்தான். 'நண்பர்கள்' படத்தை அவரே இயக்கினார்.

இப்போது மகனை வைத்து ஒரு படம் இயக்கப் போகிறார் ஷோபா. படத்திற்கு சூட்ட திட்டமிட்டுள்ள பெயர்: ரசிகை.

## மணியின் கலக்கம்

கவுண்டமணி கவலையில் இருக்கிறார். கவலைக்கு காரணம் இல்லாமல் போகுமா?

கவுண்டமணி இருந்தால்தான் படம் ஓடும். படத்தின் வெற்றிக்கு அவரும் ஒரு காரணம் என்றெல்லாம் நம்பப்பட்டது. அதனால் சம்பளத்தை உயர்த்திக் கொண்டே போனார் கவுண்டமணி.

சமீப காலத்தில் மூன்று படங்கள் பிரமாத வெற்றி பெற்றன. 'பூவே உனக்காக, 'சுந்தரபுருஷன்', 'காதல் கோட்டை'. மூன்று படங்களுக்கும் ஒரு பொது ஒற்றுமை என்ன தெரியுமா? மூன்றிலும் கவுண்டமணி இல்லை. அதுதான் மனுசன் கலங்கிப் போயிருக்கிறார்.

## கமலின் முடிவு

ஒரு படம் முடியும்வரை இன்னொரு படத்தில் நடிப்பதில்லை என்ற முடிவில் உறுதியாக இருக்கிறார் கமல்.

'இந்தியன்' படம் முடியும் வரை காத்திருந்துவிட்டுத்தான், அவ்வை சண்முகிக்காக மேக்கப் போட்டார்.

ஒரே நேரத்தில் இரண்டு படங்களில் நடிப்பதால் முழுக் கவனமும் செலுத்த முடியாமல் போய்விடும் என்கிறார் கமல்.

கதை, இயக்கம் என்று தான் நடிக்கும் படத்தின் சகல விஷயங்களிலும் கமல் ஈடுபாடு காட்டுவதால்தான் இந்த முடிவு.


படிப்பகம்

www.padippakam.com

## ...லோ குளியல்!
### ...பில் மாட்டாத கவர்ச்சி

...ப்படும். அனுபவித்துக் குளிப்பது, வீட்டில்
... கட்டாயத்தால் குளிப்பது என்று பலவகை.
... வரும் குளியல் ஒரே ஒரு வகைப்படும்.
...சிக் குளியல்.

...வினருக்கு காரணம் சொன்னால்தான்
...ம். குளிப்பதுமாதிரி படம் எடுத்தால் கதை
...ாலவும் இருக்கும், கதையோடு ஒட்டிய
...யும் என்பது தொன்று தொட்டே இயக்குநர்
...தந்திரம்.

...ளியல் காட்சிக்கு மாபெரும் விளம்பரம்
...ண்ணியம் எஸ்.ஏ.சந்திரசேகருக்கு சேரும்.
...ஜய்-சங்கவி ஜோடி குளியல் காட்சிமூலம்
...வத்தது. அதன்பின்னர் சங்கவி நடித்த
...ல் அவரை கண்டிப்பாக குளிக்கவைத்து

...ாயகியைக் கண்டதும் கதாநாயகனுக்கு
... செய்யும். நாயகனைக் கண்ட நாயகி
...கன் முதுகில் சோப் போடுவார். உடனே
...ருவரும் கட்டியணைத்துக் கொள்வார்கள்.
...ி. ஒரு பாடல்.

...தில் குளிக்கும் நாயகனை கண்டுவிட்டு
...ன்று பாம்பைக் கண்டு பதறியதுபோல்
... காட்சிக்கு பயங்கர வரவேற்பு. பிறகென்ன,
...ல படங்களில் கடவுளே, கடவுளே என்று
...ள கத்தவைத்து படம் எடுத்துவிட்டார்கள்.
... குளிப்பு என்றால் பிடிக்கும். மார்புக்கு
...கட்டிய கிராமத்துப் பெண்கள் குளிப்பதை
...யில் படமாக்கிக் காட்டுவார்.

...் மட்டும்தான் என்றில்லை, ஹொலிவுட்
...ளமாகவே குளிப்பார்கள். மலையாளப்
...கென்றே தனியான நடிகைகளும்,
...யான ரசிகர் பட்டாளமும்

...கைப் பொறுத்தவரை
... நலம். ரசிகர்கள்
...யல் காட்சிகளை
...ாடுத்துக்
...ண்டி

## ஞானப்பழம் எங்கே?

பாக்யராஜ், சுகன்யா நடிக்க ஆர்.பி.விஸ்வம் இயக்கும் படம் 'ஞானப்பழம்.'

நீண்டநாட்களாக பழுக்காமல் இருக்கிறது. காரணம் சுகன்யாதான் என்கிறார்கள். இல்லை இயக்குநர்தான் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார் என்கிறார் சுகன்யா.

பாக்யராஜ் 'வேட்டியை மடிச்சுக்கட்டு' படத்தில் நக்மாவோடு பிஸியாக நடித்துக்கொண்டிருக்கிறார்.

பாக்யராஜின் பாணியே தனிதான். பக்குவமாகச் சொல்லித் தருகிறார். நன்றாகவும் நடிக்கிறார் என்று பாராட்டியிருக்கிறார் நக்மா. 'வேட்டிய மடிச்சுக் கட்டு' படத்தை இயக்குவதும் பாக்யராஜ்தான்.

## ரேஷ்மா கற்றுக் கொண்டார்

தமிழ்ப்பட உலகில் இடம்பிடிக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் என்று கற்றுக் கொண்டாராம் ரேஷ்மா. 'கிழக்கு முகம்' படத்தில் கார்த்திக் ஜோடியாக நடித்தவர் ரேஷ்மா. பின்னர் போதியளவு பட வாய்ப்பு இல்லை.

தயாரிப்பாளர்களையும், இயக்குநர்களையும் அனுசரித்துப் போகத் தெரியவில்லை என்று ரேஷ்மாமீது புகார் எழுந்தது.

உடனடியாக துணிந்து கோதாவில் இறங்கினார் ரேஷ்மா. நீச்சல் உடை, முத்தக்காட்சி எதற்கும் தயார் என்றார்.

'வெண்ணிலா' படத்தில் அஜித்குமாரோடு முத்தக்காட்சியில் ஆழமாகவே சென்றிருக்கிறார். அதன்பின்னர் 'பூமணி' படத்திலும் முரளியின் ஜோடியாக நடிக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

## அஜித்துக்கு மவுசு

நம்நாட்டில் கூட அஜித்குமார் படங்களுக்கு மவுசு. வீடியோ கடைகளில் அஜித்குமார் படங்கள் நன்றாகப் போகின்றன. 'காதல் கோட்டை' பட வீடியோ கசட்டுக்கள் பரபரப்பாக சென்று கொண்டிருக்கின்றன.

'காதல் கோட்டை' படத்தையும், அஜித்குமாரையும் முரசு நன்கு பிரபலம் செய்ததும் கூட வீடியோ கசட்டுக்கள் பரபரப்பாக செல்ல ஒரு காரணம் என்று முரசுக்கு ஐஸ் வைத்தார் ஒரு வீடியோ கடை நண்பர்.

## அரட்டைக் கச்சேரி

'மின்சாரக் கனவு' படப்பிடிப்பு மீண்டும் ஆரம்பமாகிவிட்டது. கஜோல் மும்பாயிலிருந்து வந்து படப்பிடிப்புக்களில் கலந்து கொள்கிறார்.

'இந்தியில்' சில படங்களுக்காக கொடுத்திருந்த தேதிகளை இரத்துச் செய்துவிட்டு மின்சாரக் கனவுக்காக வந்தாராம் கஜோல்.

கஜோலுக்கு பொழுது போக்கு ஆண் நண்பர்களுடன் அரட்டைக் கச்சேரி நடத்துவதுதானாம். "யாரையும் என்னைத் தொட விடமாட்டேன். எல்லாம் பேச்சோடு சரி" என்று பேட்டி கொடுத்திருக்கிறார் கஜோல்.

## எத்தனை இடர்கள்?

"முன்பெல்லாம் இங்கிருந்துதான் மும்பாய் பக்கம் நம் நடிகைகள் சென்றார்கள். ஆனால் தற்போது மும்பாயிலிருந்து இங்கே வருகிறார்கள். கவர்ச்சியால் மட்டுமே ரசிகர்களை தம் பக்கம் இழுக்கிறார்கள்.

இத்தனை இடர்ப்பாடுகள் மத்தியில் மிகவும் கஷ்டப்பட்டு, நல்ல கதாபாத்திரங்களை தெரிவு செய்து, ஒப்பனையில் உடையில் பல மாற்றங்களை செய்து, மும்பாய் நடிகைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் கவர்ச்சி காட்டி நடித்து காலத்தைத் தள்ள வேண்டியுள்ளது." இப்படி பொருமியிருக்கிறார் தமிழக சஞ்சிகைப் பேட்டி ஒன்றில் மீனா.



அஜித்குமார்-மகேஸ்வரி
படம்- உல்லாசம்

## கட்சியில் ரேவதி?

ரேவதி இந்திய பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்திருந்தார் அல்லவா. ஆனாலும் அரசியல் ஈடுபாட்டை அவர் கைவிடவில்லை.

ஏதாவது ஒரு அரசியல் கட்சியில் சேர்ந்தால்தான் முன்னுக்கு வரலாம். பொதுச் சேவையையும் தொடரலாம் என்று பலர் யோசனை சொல்கிறார்களாம்.

சேருவதானால் மூப்பனார் தலைமையில் உள்ள தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியில்தான் சேருவேன் என்று சொல்லியிருக்கிறார் ரேவதி.

அப்படிச் சேர்ந்தால் ஒரு வேளை கொள்கைப் பரப்புச் செயலாளர் பதவி கிடைத்தாலும் கிடைக்கலாம்.

## பலன்

...ருப்பதாக சொல்லிக்
...யாக படம் எதுவும் இல்லை.
...கள். சௌந்தர்யாவுக்கு
ஜோடியாக சேனாதிபதி
...ார் சௌந்தர்யா.
...த தயாரிப்பவர் திருப்பூர் பாலு.
...லாமல், மற்றும் சகலவகையிலும்
...ப்புக் கொடுத்தார் சௌந்
... கைமேல் பலன்.
...ின் புதிய படங்
...ல் சௌந்
...தாநாயகி.



பார்த்திபன்-மீனா
படம்- பாரதி கண்ணம்மா

## மன்சூரின் தமயந்தி

வில்லனாக வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தாலும் கதாநாயகனாக நடிப்பதையும் ஒரு உப வேலைபோல வைத்திருக்கிறார் மன்சூரலிகான்.

'தமயந்தி' என்ற பெயரில் தயாராகும் புதிய படத்தில் மன்சூரலிகான்தான் கதாநாயகன். பாட்டுப்பாடி மாடு மேய்ப்பவராக வித்தியாசமான பாத்திரமாம். மன்சூருக்கு ஜோடியாக புதுமுகம் ஒருவர் நடிக்கிறார். விஜயகுமார், மணிவண்ணன், ஆர்.சுந்தர்ராஜன், பொன்னம்பலம், கே.ஆர்.விஜயா ஆகியோரும் நடிக்கின்றனர். கதை, திரைக்கதை, இயக்கம் கவுதமன். பிரபல இயக்குநர்களிடம் உதவியாளராக இருந்தவர்.

## சினி மினி

* விஜயசாந்தி நடித்து அடுத்து வெளிவர இருக்கும் படம் 'திலகவதி சி.பி.ஐ.' தமிழில் வெளியாகும் அதே நேரத்தில் இப்படம் தெலுங்கில் 'சி.ஐ.டி.' என்ற பெயரிலும், கன்னடத்தில் 'ஆயுதா' என்ற பெயரிலும் வெளியாகவுள்ளது.

* 'எங்கிருந்தோ வந்தான்' படத்தைத் தயாரித்த வேலூர் சுந்தர், அடுத்து தயாரிக்கும் படத்திலும் சத்யராஜ் நடிக்கவுள்ளார். இந்தப்படத்தை 'அதர்மம்' படத்தை இயக்கிய ரமேஷ் கிருஷ்ணன் இயக்குவார் எனத் தெரிகிறது.

* கமல்-மீனா நடிக்கும் 'அவ்வை சண்முகி' படத்தில் இரண்டாவது நாயகியாக ஹீரா நடிக்கிறார். 'சதிலீலாவதி'க்குப் பின்னர் ஹீரா, கமலுடன் சேர்ந்து நடிக்கிறார்.

* ஆர்.வி.உதயகுமார் இயக்கத்தில் அர்ஜுன் ரேவதி இணைந்து நடிக்கும் 'சுபாஷ்' படத்தில் அர்ஜுன் சொந்தக் குரலில் பாடலொன்றைப்பாடியுள்ளார். இசை-வித்யாசாகர்.

* ரஜினி, கமல், விஜயகாந்த், சத்யராஜ், சரத்குமார், பிரசாந்த் ஆகியோரைத் தொடர்ந்து பார்த்திபனும் பெண் வேடத்தில் நடித்துள்ளார். இந்தக் காட்சி 'டாட்டா பிர்லா' படத்தில் இடம் பெறுகிறது.

* 'தொட்டாச்சிணுங்கி' படத்தில் அறிமுகமான தேவயாணி, அண்மையில் நடித்த 'வான்மதி' வெற்றிகரமாக ஓடுவதால் பல புதிய படங்களில் கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

* 'என் ராசாவின் மனசிலே' படத்தில் இருந்து கடைசியாக வெளியான 'நாட்டுப்புறப்பாட்டு' படம் வரை கஸ்தூரிராஜா இயக்கிய எல்லாப் படங்களுக்கும் இசையமைத்தவர் இளையராஜா. தற்போது கஸ்தூரிராஜா இயக்கும் 'எட்டுப்பட்டி ராசா' படத்திற்கு இசை தேவா.

* செந்தில் நாதன் இயக்கத்தில் மன்சூர் அலிகான்-அருண்பாண்டியன் இணைந்து நடித்த 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' படம் தெலுங்கில் 'அதிகாரி' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

* மூன்று தமிழ்ப்படங்களில் கதாநாயகனாக நடித்து வரும் பிரகாஷ்ராஜ், முதன் முறையாக தெலுங்குப்படமொன்றில் கதாநாயகனாக நடிக்கவுள்ளார். இதில் இவருக்கு ஜோடியாக ஆம்னி நடிக்கவுள்ளார்.

* கே.எஸ்.ரவிக்குமார் இயக்கும் 'தர்மசக்கரம்' படத்தில் விஜயகாந்திற்கு ஜோடியாக முதலில் ரோஜாவை ஒப்பந்தம் செய்திருந்தனர். இப்போது ரோஜாவுக்குப் பதிலாக ரம்பா நடிக்கவுள்ளார்.



கீர்த்தனா
படம்- புதிய தீர்ப்பு

## ரோஜாவின் ஆசைக்கு ஒரு படம்
## தயாராகிறது போலீஸ் அதிகாரி

நடிகை ரோஜாவின் தொல்லை தாங்க முடியாமல் கதை தேடினார் இயக்குநர் ஆர்.கே.செல்வமணி. ஏற்கனவே ரோஜாவின் பணத்தில் ரோஜாவை அதிரடி கதாநாயகியாக வைத்து செல்வமணி ஒரு படம் எடுத்தார். அந்தப் படத்தின் பெயர் 'அதிரடிப்படை' படம் வசூல் குவித்து ஓடும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் தியேட்டரைவிட்டே பிய்த்துக் கொண்டு ஓடிவிட்டது அதிரடிப்படை. ரோஜாவுக்கு பலத்த நஷ்டம்.

சொந்தப்பட ஆசை வரக்கூடாது. வந்தாலும் கதாநாயகியாக நடிக்கக்கூடாது என்று ரோஜா முடிவு செய்திருப்பார் என்றுதான் நம்பப்பட்டது. ஆனால் ரோஜா ஓய்ந்திருக்க விரும்பவில்லை.

ரம்பா, மீனா, நக்மா எல்லோரும் பல படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் மட்டும் வீட்டில் இருப்பதா? இளமையிருக்கிறது. அதைக் காட்ட கமரா இருக்கிறது. உடனே ஒரு படம் தொடங்கவேண்டும் என்று செல்வமணியை விரட்டிக்கொண்டிருந்தார். தனது பல பட வேலைகள் மத்தியிலும் செல்வமணி ரோஜாவுக்காக ஒரு படம் தயாரிக்கிறார்.

படத்தின் பெயர் 'பொலிஸ் அதிகாரி'. தமிழ், தெலுங்கு ஆகிய இருமொழிகளிலும் தயாராகிறது. தனக்கு மட்டுமே முக்கியத்துவம் இருக்க வேண்டும். அதனால் சின்ன ஹீரோவாக போடுங்கள் என்றாராம் ரோஜா. அதனால் ரோஜாவின் ஜோடியாக ஆனந்த் நடிக்கிறார். வில்லனாக ஒரு புதுமுகம் அறிமுகமாகிறார். பெயர், நம்பிர்ராஜ். வசனம், லியாகத் அலிகான். இசை; ஆதித்யன். கதை; ஆனந்தராஜ். இயக்கம், கோடி ராமகிருஷ்ணா. 'இதுதாண்டா பொலிஸ்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் அவர்.

விஜயசாந்தியைப்போல அதிரடி நாயகியாக ரோஜா ரொம்பத்தான் விருப்பப்படுகிறார். ரசிகர்கள் விரும்பவேண்டுமே.

## செலவை மிஞ்சிய வரவு

'சுந்தர புருஷன்' படம் ரம்பாவின் மார்க்கெட் சூடுபிடிக்க முன்னரே தயாரிக்கப்பட்ட படம். அதனால் ரம்பாவுக்கு கொடுத்த சம்பளமும் குறைவு.

லிவிங்ஸ்டன்- ரம்பா ஜோடியை வைத்து குறைந்த பட்ஜெட்டில் தயாரான 'சுந்தர புருஷன்' தமிழ்நாடெங்கும் சக்கைபோடு போடுகிறது.

குறைந்த பட்ஜெட்டில் வெளியாகி வசூல்மழை பொழிந்த படவரிசையில் 'சுந்தர புருஷன்' படமும் சேர்ந்துவிட்டது.

பெரிய பட்ஜெட், பிரமாண்டம் என்று பல கோடிகளை கொட்டி படம் எடுத்து கையைச் சுட்டுக்கொண்ட தயாரிப்பாளர்கள் திகைத்துப் போயிருக்கிறார்கள்.

'காலம் மாறிப் போச்சு.' 'நாட்டுப்புறப் பாட்டு', 'பூவே உனக்காக', 'சுந்தர புருஷன்' போன்ற சமீபகாலப் படங்கள் குறைந்த முதலீட்டில் கொள்ளை லாபம் சம்பாதித்துக் கொடுத்திருக்கின்றன. இதேவேளை கோடி கோடியாக பணம் கொட்டித் தயாரான படங்கள் பல படுதோல்வி கண்டுள்ளன.

## கனகாவின் திருப்தி

'கட்டப்பஞ்சாயத்து' படம் படுதோல்வியானாலும், ஒரு விஷயத்தில் மகிழ்ச்சியாக இருக்கிறார் கனகா.

கார்த்திக் தன்னை எப்போதும் நினைவில் வைத்திருப்பதுதான் கனகாவுக்கு மிக மகிழ்ச்சியான சமாச்சாரமாம்.

கார்த்திக்கின் சிபாரிசில் ஒரு படத்தில் அவருடன் ஜோடி சேரப் போகிறாராம் கனகா.

கார்த்திக் நினைவில் வைத்துக்கொள்ளும் படியாக அப்படி என்னதான் செய்தீர்கள் கனகா?

www.padippakam.com

# காதலர்கள் கவனிக்கவும்

மனிதர்களை மிருகங்களாகவும், மிருகங்களை மனிதர்களாகவும் மாற்றக் கூடிய சக்தி காதலுக்கு உண்டு. காதல் என்ற விசித்திரமான உணர்வுக்கு யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் அடிமையாகக் கூடும். காதல் வயப்படுவது பெரிய விஷயமல்ல. அந்தக் காதலைத் திருமணத்தில் கொண்டு போய் முடிக்கும் திறமை காதலர்களுக்கு இருக்க வேண்டும். உங்கள் காதல் தோல்வியடையாமல் இருக்க சில அறிவுரைகள்:

- 'கண்டதும் காதல்' என்பது சினிமாக்களுக்கு மட்டுமே பொருந்தும். நடைமுறைக்கு ஒத்துவராது. எனவே உங்களை யாராவது காதலிப்பதாகச் சொன்னால் அவரது ஆசை வார்த்தைகளுக்கு மயங்கி அடுத்த நாளே உங்கள் மனதைப் பறிகொடுத்து விடாதீர்கள். உடனடியாக அவரது காதலை ஏற்றுக் கொள்ளாமல், குறைந்த பட்சம் ஒரு வருடமாவது வெறும் நட்புடன் மட்டும் பழகுங்கள். ஒரு காதலியாக இருப்பதைவிட ஒரு தோழியாக இருப்பதன் மூலம் உங்கள் காதலரின் குணாதிசயங்களை உங்களால் மிகச் சரியாகக் கணிக்க முடியும். ஓராண்டிற்குப் பிறகு அவர் உங்களது காதலராக இருக்கத் தகுதியானவர்தான் என்று நன்றாகத் தெரிந்தால், உங்கள் விருப்பத்தைத் தெரிவியுங்கள். ஒருவேளை, அதற்குள் அவருக்குத் திருமணமாகி விட்டால்... என்ன செய்வது? பெட்டர் லக். நெக்ஸ்ட் டைம்.
- உங்கள் காதலுக்கு உங்கள் இரு வீட்டாரும் பச்சைக்கொடி காட்டும் வரை, நீங்கள் காதலிக்கும் விஷயத்தை உங்களுக்கு மிக நெருக்கமானவர்களிடம் கூட சொல்லி விடாதீர்கள். ஒருவேளை உங்கள் காதல் கை கூடாமல் போனால், பிறகு அவர்களெல்லாம் உங்களைப் பார்த்துப் பரிதாபப் பட ஆரம்பித்து விடுவார்கள் அல்லவா?
- தவறு செய்வது மனித இயல்பு. உங்கள் காதலர் செய்யும் சிறுசிறு தவறுகளை அவ்வப்போது மன்னித்து விடுங்கள். மன்னிக்கும் மனப்பான்மை இல்லாவிட்டால் காதல் வெற்றியடையாது.
- உங்களுக்கு இயல்பிலேயே தாழ்வு மனப்பான்மை அதிகமா? அப்படியானால் உங்களை யாராவது காதலிப்பதாகச் சொன்னால், 'அட, நம்மைக் கூட ஒருவர் காதலிக்கிறாராமே, அவர் எவ்வளவு பரந்த மனப்பான்மை உள்ளவராக இருப்பார்' என்று உருகி விடாதீர்கள். உங்கள் தாழ்வு மனப்பான்மை, நாளடைவில் உங்களை அவருக்கு எல்லாவிதத்திலும் அடிமையாக்கி விடும்.
- உங்கள் காதலுக்கு இரு வீட்டிலும் சம்மதம் கிடைத்து, திருமணத்திற்கு ஒப்புக் கொண்டாலும் கூட, திருமணம் முடியும் வரை, 'உரசல்'களைத் தவிர்த்து விடுங்கள். எத்தனையோ திருமணங்கள் கடைசி நிமிடத்தில்கூட நின்று போயிருக்கின்றன. எனவே, திருமணமாகும் வரை உங்கள் காதலரின் விரல் நுனி கூட உங்கள்மீது பட அனுமதிக்காதீர்கள்.



- காதலில் ஈடுபட்டவர்களுக்கு, ஆரம்ப காலத்தில் அது மிகவும் சுவாரசியமானதாகத்தான் தோன்றும். போகப் போகத்தான் காதலரின் சுயரூபமே தெரியவரும். எனவே, உங்கள் காதலரின் போக்கு சரியாகப்படாவிட்டாலோ, அவர் தவறான வழியில் செல்வதாகத் தெரிந்தாலோ, அதை உங்களால் திருத்த முடியாது என நினைத்தாலோ, உடனடியாக அவரது காதலை விட்டு விலகி விடுங்கள். 'மனதைப் பறிகொடுத்த பின், எப்படி மாற்றிக் கொள்வது' என்று யோசிக்காதீர்கள். உங்களுக்குத் தகுதியில்லாதவரைக் காதலித்து திருமணமும் செய்துகொண்டு வாழ்நாள் முழுவதும் கண்ணீர் சிந்துவதற்கு, அவரை மறக்க முயற்சிப்பது எவ்வளவோ மேல்.

## பக்குவம் தேவை

முதன் முதலில் கருத்தரிக்கும் பெண்களுக்குப் பிரசவகாலம் நெருங்க நெருங்கப் பய உணர்வு அதிகமாகிக் கொண்டே இருக்கும். எனவே வீட்டிலுள்ள வயதான பெண்கள், கர்ப்பிணிப் பெண்ணிடம் பக்குவமாகப் பேசி அவளுடைய பயத்தைப் போக்க வேண்டும். கருவுற்ற பெண்ணிற்கு நல்ல இதமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பது வீட்டிலுள்ள பெரியவர்களின் முக்கியமான கடமையாகும்.

கணவனும் மனைவியுடன் அன்பாக இருப்பது மிக முக்கியமாகும். மனைவியை விட்டுப் பிரிந்து வெகு தொலைவில் கணவன் இருப்பதைக் கருத்தரித்த பெண்கள் விரும்ப மாட்டார்கள். அதிலும், முதல் பிரசவத்தின் போது கணவனின் அன்பு, பாசம் முழுவதையும் கர்ப்பிணிப் பெண் ஆவலுடன் எதிர்பார்ப்பது இயற்கையாகும்.



எனவே, கர்ப்பிணிப் பெண்ணுடன் வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் அன்பாக இருந்தாலும் கூட கணவன் கண்டிப்பாக அன்பு மனைவியிடம் குழந்தைப் பேறு பற்றிய பயத்தை விரட்டி அன்பு மழை பொழிய வேண்டும்.

## டேப் ரெக்கோடர் பாதுகாப்பும்-பராமரிப்பும்

அடிக்கடி பழுதடையும் பொருட்களில் டேப் ரெக்கோடரும் ஒன்று. மிக மிக மென்மையாகக் கையாளப்பட வேண்டிய ஒரு சாதனம் இது. இதை முறையாகப் பராமரிக்காவிட்டால், பிரபல நிறுவனங்களின் தயாரிப்பாக இருந்தாலும் மிக விரைவில்



பழுதடைவது உறுதி. டேப் ரெக்கோடர் பராமரிப்பு முறைகள் சிலவற்றைப் பார்ப்போம்.

* ஈரப்பதன் அதிகமுள்ள இடத்திலோ, மழைச்சாரல் படுமிடத்திலோ டேப் ரெக்கோடரை வைப்பதைத் தவிர்க்க வேண்டும்.
* டேப் ரெக்கோடரை சுத்தப்படுத்துவதற்கு முன், மின்சார இணைப்பை நிறுத்திவிட்டு பிளக் வயரைக் கழற்றிய பின்னரே சுத்தப்படுத்த வேண்டும். சுத்தப்படுத்த வெறும் ஈரத்துணி மட்டுமே போதுமானது. வேறு எண்ணெய்களையோ, திரவங்களையோ அதனுள் நேரடியாக ஊற்றிச் சுத்தப்படுத்தக் கூடாது.

ஹெட் பகுதியில் தூசியோ, அழுக்கோ சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு அதை அவ்வப்போது சிறிது பஞ்சை ஹெட் கிளீனர் அல்லது ஓடிக்கொலோனில் நனைத்து, மிகவும் மென்மையாகத் துடைத்தெடுக்க வேண்டும்.

* எப்போதும் தரமான கசெட்டுக்களை மட்டுமே உபயோகிக்க வேண்டும்.
* மின்சாரத்திற்குப் பதிலாக பற்றரியைப் பயன்படுத்தும்போது கீழ்க்கண்ட விஷயங்களை நினைவில் கொள்ள வேண்டும்.

1. ஒரே மாதிரியான ஒரே பிராண்ட் பற்றரிகளை மட்டுமே உபயோகிக்கவேண்டும்.
2. புதிய பற்றரிகளோடு பழைய பற்றரிகளையும் சேர்த்துப் பயன்படுத்தக்கூடாது.
3. நீண்ட நாட்களுக்கு டேப் ரெக்கோடர் பயன்படுத்தப்படாமல் இருந்தால் அதிலிருந்த பற்றரிகளைக் கழற்றி விட வேண்டும்.

* டேப் ரெக்கோடர்களை, குழந்தைகளின் கைகளுக்கு எட்டாத உயரத்தில் வைப்பது நல்லது.

## பூச்சிகளால் தொல்லையா?

அன்றாடம் நமது வீடுகளில் ஏதாவது சில பூச்சித் தொல்லைகள் இருந்து கொண்டே இருக்கும். அதாவது எறும்பு, கரப்பான் பூச்சி, நுளம்பு, மூட்டைப்பூச்சி, இலையான், கறையான் போன்ற பூச்சிகள் அவ்வப்போது வீடுகளில் இருந்து கொண்டு நமக்குப் பலவித இடையூறுகளைச் செய்து கொண்டு தான் இருக்கும். தொல்லைகளில் இருந்து விடுபட கீழே கண்ட எளிய முறைகளைக் கடைப்பிடித்து வந்தால் பூச்சித் தொல்லைகளில் இருந்து விடுபடலாம்.

1. பொதுவாக வீடுகளில் கறையான் இருப்பதைக் கண்டறிந்து அழிக்காவிட்டால் பெரும் நாசம் ஏற்படுத்தி விடும். நீரில் கொஞ்சம் பெருங்காயத்தைக் கரைத்து கறையான் பிடித்துள்ள இடத்தில் விட்டால் அவை மறைந்து விடும்.

2. படுக்கும் மெத்தையில் சிறுபூச்சிகள் எப்படியோ வந்து விடுகின்றன. நிம்மதியான தூக்கத்திற்கு இடைஞ்சலாக உள்ளவை இவை. மெத்தைக்கு அடியில் சில மிளகுகளைப் போட்டு வைத்தால் எந்தப் பூச்சியும் வராது.

3. குளிக்கப் பயன்படுத்தும் சோப் தேய்ந்து கடைசியாக மிஞ்சும் சிறிய துண்டுகளை அலமாரி அல்லது பெட்டியில் வைத்திருக்கும் உடைகளுக்கு இடையில் போட்டு வைத்தால் துணிகள் மணமாக இருப்பதுடன் கரப்பான்பூச்சிகள் அண்டாமலும் இருக்கும்.

4. நீரில் புகையிலையை ஊறவைத்து அச்சாற்றை எறும்புப்புற்றில் ஊற்றினால் அவை அங்கே தங்காது.

5. சாப்பாட்டு மேசையில் கறிவேப்பிலையை வைத்திருந்தால் இலையான்கள் மொய்க்காது.

6. காய்ந்த வேப்பிலையைக் கொளுத்தி அதன் புகையை வீட்டில் பரவியிருக்கும்படி செய்தால் நுளம்புகள் வராது.

## வயது ஐம்பதா...?

ஐம்பது வயதை அடையவிருக்கும் பெண்களில் நீங்களும் ஒருவரா? அப்படியானால் இந்த வயதில் உங்கள் உடல் எடையைக் குறைக்கும் முயற்சியை முதலில் கைவிடுங்கள்.

இந்த வயதில் உடல் எடையில் பத்து சதவீதத்திற்கு மேல் குறைத்தால் பெண்களின் இடுப்பு எலும்புகள் முறிந்து பல வித பயங்கர விளைவுகள் ஏற்படக்கூடும். எனவே 50 வயதைத் தொடவிருக்கும் பெண்கள், தங்கள் உடல் எடையைக் குறைக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டாம் என்று சமீபத்திய நியூயோர்க் ஆராய்ச்சிக் குறிப்பு ஒன்று எச்சரிக்கிறது.

பொதுவாக இந்த வயதில் இடுப்பு எலும்பு முறிவு நிகழ்வதற்கான வாய்ப்பு ஆண்களை விட அதிகமான பெண்களுக்கு இருப்பதாகத் தெரிகிறது. இடுப்பு எலும்பு முறிந்துவிட்டால் அது பலவித நிரந்தர உடல் உபாதைகளை ஏற்படுத்திவிடும். மருத்துவத்துறையில் வியத்தகு முன்னேற்றங்



கள் நிகழ்ந்து வரும் இந்தக் காலத்தில், இடுப்பு எலும்பு முறிவை அறுவைச் சிகிச்சையின் மூலமாகச் சரி செய்துவிட வாய்ப்புக்கள் தென்பட்டாலும், அது அனைவருக்கும் பயனுள்ள வகையில் இருக்குமா? என்பது சந்தேகம்தான் என்றும் கூறப்படுகிறது.

## என்றும் இளமையுடன்

ஒரு கரண்டி அதிமதுரத் தூளுடன் இரண்டு கரண்டி தேன் கலந்து காலையில் உணவு அருந்துவதற்கு முன் சாப்பிட்டு வந்தால் உடலில் வயோதிகத் தோற்றம் மாறி உடல் என்றும் இளமையுடன் இருக்கலாம். மஞ்சள் காமாலை, காக்கை வலிப்புப் போன்ற நோய்கள் இதனால் குணமடையும்.

பசும்பாலுடன் அதிமதுரத் தூளைச் சேர்த்துக் காய்ச்சி கர்ப்பிணிப் பெண்கள் பருகி வந்தால் இரத்தம் தூய்மை பெறுவதுடன் உடல் வலிமை அடையும். வயிற்றிலுள்ள குழந்தை நல்ல வளர்ச்சி பெறும். இந்த முறையைக் குழந்தை பிறந்த பிறகு பின்பற்றினால் தாய்ப்பால் அதிகம் சுரக்கும்.



## சென்ட் சில தகவல்கள்

1. சென்ட் பூச வேண்டிய இடங்கள்:
   * காதுகளுக்குப்பின்னால்.
   * தொண்டைக்குக் கீழ்.
   * உள்ளங்கைகளில்.
   * மணிக்கட்டுக்களில்.
   * முழங்கை மடிப்புகளில்.
   * முழங்கால் மடிப்புகளில்.
   * கணுக்கால்களில்.
2. எப்போதும் குளித்த உடனேதான் சென்ட் பூச வேண்டும்.
3. மாதவிலக்காவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன் சென்ட் வாங்குவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அந்த நாட்களில் வாசனை அறியும் திறன் வழக்கத்தை விடக் குறைவாக இருக்கும்.
4. சிறிதளவு பஞ்சில் லேசாக சென்ட்டை நனைத்து உடைகளில் இறுக்கமான பகுதிகளில் வைத்துக்கொண்டால், நாள் முழுவதும் உடலில் நறுமணம் கமழும்.



5. வீட்டிலுள்ள அறைகளின் கதவுகளைச் சாத்திவிட்டு, சென்டைக் காற்றில் நன்றாக ஸ்பிறே செய்ய வேண்டும். பிறகு உடலை வளைத்துச் சுற்றினால் போதும். உடலும், துணிகளும் 'கமகம' வென மாறும். வீட்டின் அறையும் வாசனையுடன் இருக்கும்.

## சமைப்போம் சுவைப்போம்

[தொகுத்துத் தருவது – சுகந்தினி]

### வெண்டைக்காய் பஜ்ஜி

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| வெண்டைக்காய் | - 300 கிராம் |
| மாவு | - 250 கிராம் |
| சீரகம் | - 1/2 தேக்கரண்டி |
| மிளகாய்த்தூள் | - 1 தேக்கரண்டி |
| எண்ணெய் | - 300 மில்லி லீட்டர் |
| பெருங்காயம் | - 2 சிட்டிகை |
| உப்பு | - தேவையான அளவு. |

செய்முறை:

வெண்டைக்காயை நீளவாக்கில் இரண்டாக வெட்டிக் கொள்ளவும். மாவுடன் மிளகாய்த்தூள், பெருங்காயம், உப்பு, சீரகம், 50 மில்லி லீட்டர் எண்ணெய் விட்டு தண்ணீர் அளவாக விட்டுப் பிசைந்து கொள்ளவும்.

வெண்டைக்காயை மாக் கலவையில் தோய்த்து எண்ணெயில் பொரித்து எடுத்துச் சூடாகப் பரிமாறவும்.

## டிப்ஸ்

* பாகற்காயை வாங்கி முதல்நாள் இரவே நறுக்கி தயிரில் ஊற வைத்து, மறுநாள் கழுவி விட்டுச் சமைத்தால் கசப்பு இருக்காது.
* பட்டுத் துணிகளை அயர்ன் பண்ணும் போது அதில் தண்ணீர் தெளித்து அயர்ன் பண்ணக் கூடாது. தண்ணீர் தெளித்தால் பட்டுத்துணிகளில் கறை படிந்து விடுகின்றன.
* சில பெண்களுக்கு இடுப்பில் சேலை கட்டிய அடையாளம் கறுப்பாகத் தெரியும். ஒலிவ் எண்ணெயைக் கொதிக்க வைத்து, ஆறியபின் அதில் தடவி வந்தால் கறுப்பு நிறம் மறையும்.
* புளி வாங்கினால், அதை வெய்யிலில் காய வைத்து, கொட்டைகளை நீக்கி வைத்திருந்தால் அதிக நாட்கள் கெட்டுப் போகாமல் இருக்கும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் | மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை AD

பெயர்:........................

முகவரி:........................

........................

கையொப்பம்:........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 24-08-1996

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? டிக்கோயா வாசகிக்கு அதிஷ்டம்

இவ் வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**திருமதி. ரூபிகா ஞானகுமாரன்.**
பொயிஸ்டன் தோட்டம், டிக்கோயா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



### பரிசு பெற்றவர்

முரசின் பட்டுச் சேலைப் பரிசுப் போட்டியில் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர் இவர்.

**திருமதி. லச்சுமி வடிவேல்**
வட்டகொடை,
லிந்துலை.

www.padippakam.com

# இரவில் ஒரு நாள்

அள்ளித் தெளிக்கின்ற
ரவைகளில் ஒன்றோ,
சண்டி வீசப்படுகின்ற
செல்களில் ஒன்றோபட்டு
நிலவு செத்திருக்கவேண்டும்....!
அன்றைய இரவிற்கு
நிலவில்லை!
▫▫
மின்சார உயிரும் போய் விட்டதால்
இருள் அடைத்து
மூச்சுத்திணறியது ஊர்!
▫▫
ஆந்தையின் அலறலும்
பக்கிளின் முக்கலும்
பாழ் வீட்டின் நிசப்தமும்
இன்று
படிப்பதை விட
படுப்பது பாதுகாப்பென்றது.
▫▫
அதுவரை விழித்துக்கொண்டிருந்த
விளக்கும்,
எண்ணை தீர்ந்து போனதால்
காற்றுக்கு
அங்குமிங்கும்
திரும்பிப் பார்த்துவிட்டு
கண்ணை மூடிக்கொண்டது!
▫▫
அருகில்வரும் ஆகஸ்டு
நினைவில்வர
மனசு துள்ளியெழுந்து
படித்தவற்றை
படுத்தவாறே இரை மீட்டினோம்!
பாசிசம்
மாக்சிசம் சோசலிசம் எல்லாமே....!
▫▫
தூரத்தில் பிறந்த 'பூட்ஸ்' காலடிகள்
பெருத்து வளர்ந்து
அறைக் கதவடியில்
வெடித்து ஓய்ந்தன!
▫▫
இடியோசையோடு கதவுதிறக்க,
தெரியாத மொழி
காதை அடைத்தது.
நாங்கள் மௌனத்தால் பேசினோம்;
தமிழும், மௌனமும் தானே
எங்களுக்கு....!
▫▫
கண், மூக்கு, வாய், காது
அனைத்தையும்
அவரவர் சாறனால் கட்டி
கையிரண்டையும்
பின்னால் முறுக்கி முடிந்துவிட்டு
▫▫
சாக்கில் போட்ட
பூனைக்குட்டிகளாய்
கொண்டு சென்று,
சிறைக்குள் அவிழ்த்துவிட்டு
அடைத்துவிட்டார்கள்!
▫▫
இரவு முழுவதும்
கரப்பந்தாக...
உதைப்பந்தாக...
எலும்பெல்லாம் மறமறத்தது!
▫▫
விடிந்தது....
சிபாரிசில்
வெளியே வந்தோம்!
குடித்துவிட்டு வைத்த
தேனீர் கிளாசில் போல்
கொஞ்சம் எஞ்சியிருந்தது
உசிரு!

மீராவோடை எஸ். நளீம்.

# தேன் கிண்ணம்

••
கிளிச்சொண்டு மூக்கின் நுனியில்
வியர்வை முத்துக்கள்....
••
நிலவின் ஒளியை
சந்தனத்தோடு குழைத்துச் செய்த
அந்தக் கன்னங்களை
துணிகொண்டு போர்த்து!
அதன் ஒளி என் கண்களைக்
கூசச் செய்கிறது.
••
சங்குக் கழுத்துக்குக் கீழே
இரண்டு செம்புகள்;
என் நெஞ்சைக் குறிபார்க்கும்
அம்புகளா அவை?
••
ஊர் உறங்கிவிட்டது,
ஊழையிடும் நாயின் ஒலமும்
அடங்கிவிட்டது;
ஆயினும்....
••
நான் உன்னைத்தான்
பார்த்துக்கொண்டிருக்கிறேன்!
••
பட்டத்தின் குஞ்சம்போல
காதைக் கவ்விய ஜிமிக்கி...
உன்னைமட்டும் உயர்த்தவில்லை;
என்னையுமல்லவா தூக்குகிறது.
••
உன் ஈர இதழ்களில்
அரும்பும் 'சிமிழ்ச்சிரிப்பு'
காவியத்தின் கருவறைக்கு
என்னை இழுத்துச் செல்கிறது.
••
நாட்களென்ன...
யுகத்தையே உன்னோடு
கரைக்கலாம்;
களிக்கலாம்!
••
புதிய காவியங்கள்
புஷ்பிதமாகலாம்– உன்
புன்முறுவலில்!!
••
நான் ...
சிலநேரச் சுகங்களையல்ல...
யுகானுபவங்களை யாசிப்பவன்.
அதனால்
பூவே....!
••
யாருமே இல்லாத தனியறையில்
உன்னைக் கிடத்தி
ரசித்துக் கொண்டேயிருக்கிறேன்;
கட்டிப்பிடிக்காமல்....
ஹு...!
••

நீலா பாலன்.

# அவள் ஒரு ஓவியம்

இதுவரை
என் இதயத்திற்குள்
மறைந்திருந்த உன்னை
சிறையுடைத்து
வெளியிற்கொண்டுவந்த
வித்தகன் யார்?
••
கண்களை...
தயவு செய்து மூடு!
ஸ்ரீ லங்காவின் தேசியக்கொடியில்
சிங்கம் தூக்கிப் பிடித்துள்ள
கத்திபோல,
அது என்னையே குறிபார்க்கிறது;
தயவு செய்து கண்களை மூடு!
••
உன்னைப் பார்த்துக்கொண்டிருக்கையில்
என்னுள்ளே ஏற்படும் வேகம்....
அதை என்னால் கட்டுப்படுத்த
முடியவில்லை!
அது ஏன்?

# பகல் இல்லாத சூரியன்!

இனி–
என்னால் சுவாசிக்க முடியாது.
சுவாசப்பை வெடித்து
அதன் சிற்றறைகள் சிதறிவிடும்!
0–0
தூக்கம் இல்லாமல்
இனியும் கண்ணை மூடினால்
கண் கெட்டுத் தான் போகும்!
0–0
இடைக்கிடை கேட்கும்
வெடிச்சத்தங்களோடு
குரைக்கும் இந்த நாய்களின்
குரல் வளைகளை–
சப்பித் துப்பத்தான் ஆசை!
0–0
போதாக்குறைக்கு....
காலத்துக்குள் என்னைக்–
கட்டுப்படுத்தும் கடிகாரத்தை
உடைத்தெறியத்தான் வேண்டும்!
0–0
தூக்கத்தையும் விழிப்பையும்
சிருஷ்டித்த அந்த
வரட்டு கடவுளையும்
பார்க்க ஆசைவருகிறது!
0–0
அந்த சிறுக்கியின்
கக்கிப்போன
ஞாபகங்களும் கூட
..................,
வெப்பத்தோடு
வெக்கையும் சேர்ந்து
என்னை ஆவியாக்கிவிடும்!
0–0
இனி என்னால்
தூங்க முடியாது!
0–0
விடிவதற்குள்
வானத்தை உடைத்தாவது,
புவியின் அச்சிலிருந்து
பூமியை தள்ளியாவது,
சூரிய வெளிச்சத்தை
கொண்டுவரவேண்டும்!
அல்லது;
பூமியை–
புவியின் அச்சிலிருந்து கழற்றி
சூரிய வெளிச்சம் உள்ள
இடத்தில் பொருத்த வேண்டும்!
0–0
இனி–
என்னால்
தூங்க முடியாது!

எம்.ஏ. தஸ்ரீப்- அக்கரைப்பற்று.

# அந்த நாள் ஞாபகம்



தமிழ்நாட்டின் மதுரை மாவட்டத்து கிராம இளைஞன். அவன் இதயத்தில் சாதிக்க வேண்டும் என்ற எண்ண மின்னல். அந்த மின்னல் தான் பின்னர் தமிழ் திரைப்பட உலகில் புது மழை பொழியச் செய்தது. கண்களில் கனவுகளோடு புகைப்படத்தில் உள்ள இளைஞன் யார் தெரிகிறதா? அவர்தான் இயக்குநர் பாரதிராஜா.



யார் இது தெரிகிறதா?
கமலின் மனைவி சரிகாதான்.



சரிகாவும்—ரிஷி கபூரும்
இந்திப்படமொன்றில்.





கிட்டாருடன் காட்சி தருபவர் பிரசாந்த். வளரும் பிள்ளையை மண்விளையாட்டில் தெரியும் என்பார்கள். பிரசாந்தும் சிறுவயதிலேயே கலை ஆர்வத்தோடுதான் காணப்பட்டிருக்கிறார்.

# நாசமறுப்பார்

இன்றிரவு
என்னுள் வாழ்ந்த
சமாதான புறாக்கள்
செத்துப்போய்விட்டன!
**
ஆசைகள்
இடிந்து சரிந்துபோனது
உயிர் நார்நாராய்
கிழிந்து போனது!
**
நட்சத்திரங்கள்
எரிந்து எரிந்து
விழுந்து விழுந்து எரிந்தது!
**
இத்தனைக்குள்ளும்
இன்றிரவு
ஒரு நீண்ட இரவு...!
**
மனசு நெருப்பு நெருப்பாய்
கக்கியது....
எண்ணங்கள் நொறுங்கியது
உயிர்
சொட்டுச் சொட்டாய் வடிந்தது!
**
எத்தனை தரம்
நிலவும், சூரியனும்
முட்டி வெடித்து சிதறிப்போயின
**
நிச்சயமாய்
உயிர்முறிந்து
மண்ணிற்குள்
புதைந்து விடலாம்
அல்லது,
மேகத்தின் மேல் தங்கிவிடலாம்
ஆனால்
இரவைக்கும் அவர்கள் வருவர்
அவர்களுக்கு
எப்படி சொல்லிவிடமுடியும்
நானும் வாழ நினைப்பதை.....!

ஸாபிறா ஏ மஜீத், அக்கரைப்பற்று-

# மனக்காயம்

உடலின் காயம்
ஒரு நாள் ஆறும்
காற்றே மருந்தாய்
காய்ந்தே போகும்!
**
கண்ணீர் மருந்திலும்
காய்ந்திட மறுக்கும்
மனத்தின் காயம்
எப்படித் தீரும்?
மரணம் வரை
தொடரும் வதையாய்
தினமும் கொல்லும்.

எம். திசுருபன்.
கொழும்பு-10.

## இந்த வாரம் உங்கள் பலன்

( 18.08.96 முதல் 24.08.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| புதன்- காரியானுகூலம், கௌரவம். | காலை 6 மணி |
| வியாழன்- உறவினர் பகை, மனக்கிலேசம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், பண விரயம். | காலை 7 மணி |
| சனி- உயர்ந்த நிலை, பொருள் வரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி | பகல் 12 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- வண் தொல்லை, மனக் கவலை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| சனி- துயர் நீங்கும், காரியானுகூலம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வீண் மனஸ்தாபம், அந்நியர் பகை. | காலை 7 மணி |
| புதன்- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- கடன் சுமை, காரிய நஷ்டம். | காலை 7 மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, கௌரவம். | காலை 6 மணி |
| புதன்- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், காரியானுகூலம். | பகல் 12 மணி |
| சனி- மன மகிழ்ச்சி, உறவினர் உதவி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், பண வரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| புதன்- அந்நியர் உதவி, கௌரவம். | காலை 6 மணி |
| வியாழன்- காரியசித்தி, இனசன நன்மை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பெரியோர் பகை, வீண் கவலை. | காலை 6 மணி |
| சனி- காரியத் தடை, பண விரயம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன், புதன். |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |
| மிதுனம் | - வெள்ளி, செவ்வாய். |

★ சந்திரன்- கன்னி, துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, பண லாபம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், மனக் கவலை. | காலை 7 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், மன மகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |
| சனி- மனக் கலக்கம், பெரியோர் பகை. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- கடன் தொல்லை, பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. 3 மணி |
| புதன் - பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 6 மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு | காலை 7 மணி |
| சனி- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-8

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரிய சித்தி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- வீண் குறை கேட்டல், பண விரயம். | காலை 6 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- அந்நியர் உதவி, தொழில் சிறப்பு. | காலை 7 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| சனி- பெரியோர் பகை, மனக்கிலேசம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. 3 மணி |
| திங்கள்- அந்நியர் சகவாசம், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 12 மணி |
| புதன்- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | காலை 5 மணி |
| வியாழன்- அந்நியர் பகை, மனக் கவலை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- வீண் கவலை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| சனி- பயனுள்ள செயல், பொருள் வரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் விரயம், காரியக்கேடு. | பி.ப. 3 மணி |
| திங்கள்- மனக் குழப்பம், வீண் முயற்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரிய சித்தி. | காலை 7 மணி |
| புதன்- அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| வெள்ளி- மன மகிழ்ச்சி, பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| சனி- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், காரியத் தடை. | காலை 6 மணி |
| திங்கள்- மனக்கிலேசம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், வீண் கலக்கம். | பி.ப. 3 மணி |
| புதன்- காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 6 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பி.ப. 3 மணி |
| சனி- தொழில் விருத்தி, இனசன நன்மை. | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### கன்னி: சுப நேரம்


(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், மனக் கலக்கம். | பி.ப. 4 மணி |
| திங்கள்- இனசன நன்மை, பொருள் வரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- பெரியோர் நன்மை, பண வரவு. | காலை 8 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, தொழில் சிறப்பு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், கௌரவக் குறைவு. | காலை 6 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3


படிப்பகம்





# பள்ளிக்கூடக் கல்வி

பள்ளிக்கூடந்தன்னிலே
பயிலும் உயர்ந்த வித்தைகள்
நல்ல வாழ்வு கூடவே
நண்பனாக உதவிடும்!

உயர்வு தாழ்வு பேதங்கள்
உன்னில் இன்றிப் போய்விடும்
கயமையற்று கனிவுடன்
வாழும் எண்ணம் வளர்ந்திடும்!

அகத்தில் நிறைந்த இருட்தன்மை
அரிய கல்வி கற்பதால்
தகர்ந்து அகமும் ஒளிபெறும்
தகுந்த தெளிவை மனம்பெறும்!

ஏற்றம் தரும் கல்வியை
இன்றே கற்கப் புறப்படு!
வேண்டாம் என்று இருந்திடின்
விம்மி அழ நேர்ந்திடும்!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

சொல்லில் உயர்வு தமிழ்ச்
சொல்லே-அதைத்
தொழுது படித்திடடி பாப்பா!
செல்வம் நிறைந்த இந்துஸ்தானம் -
அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# ஒன்றுமில்லை!

பேராசைக்காரனும், மற்றவர்களை வம்புக்கிழுப்பதில் பிரியமுள்ளவனுமான நடேசன் என்பவன் வீதியில் நடந்து போய்க் கொண்டிருந்தான். அப்போது ஏழைத்தொழிலாளி ஒருவன் ஒரு மூட்டையைக் கீழிருந்து தனது முதுகில் தூக்கி வைப்பதற்கு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தான்.

அந்தக் கூலித் தொழிலாளியை வம்புக்கிழுக்க நினைத்த நடேசன் அவனிடம் சென்று,

"நான் உனக்கு உதவி செய்கிறேன். இந்த மூட்டையைத் தூக்கி, உன் முதுகில் வைத்து விடுகிறேன். அதற்கு மாறாக நீ எனக்கு என்ன கொடுப்பாய்?" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை" என்றான் தொழிலாளி.

"சரி உனக்கு உதவுகிறேன்!" என்ற நடேசன் மூட்டையைத் தூக்கி விட்டான். தொழிலாளி, நடேசனுக்கு நன்றி சொல்லி விட்டு நடந்தான்.

"என்ன, எனக்குக் கொடுப்பதாகச் சொன்னதைக் கொடுக்காமல் போகிறாயே?" என்று சத்தம் போட்டான்.

"நான் உனக்கு ஒன்றுமே கொடுப்பதாகச் சொல்லவில்லையே!" என்றான் தொழிலாளி.

"நன்றாக யோசித்துப்பார்! ஒன்றுமில்லை என்ற ஒன்றைக் கொடுப்பதாக நீ சொன்னாயே. மரியாதையாகக்கொடு!" என்று அதட்டினான்.

"ஒன்றுமில்லை என்ற ஒன்றை எப்படிக் கொடுக்க முடியும்?" என்று கேட்டான் தொழிலாளி.

"எப்படியாவது நீ எனக்குக் கொடுக்கத்தான் வேண்டும்," என்று கத்தினான் நடேசன். இவர்களின் சண்டையைப் பார்க்கக் கூட்டம் கூடிவிட்டது.

கூட்டத்தில் இருந்து பெரியவர் ஒருவர், "நண்பர்களே! இவர்களுக்குள் எழுந்த பிரச்சனை விசித்திரமானது. இந்தப் பிரச்சனையை, எமது ஊருக்குத் தீர்ப்புச் சொல்லும் பெரியவரால்தான் தீர்த்து வைக்க முடியும்." எனவே இவர்கள் இருவரையும் அவரிடம் அழைத்துச் செல்லுங்கள்!" என்று ஆலோசனை வழங்கினார்.



பெரியவர் சொல்வது சரியெனப்படவே இருவரையும் ஊர்ப்பெரியவர் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு அவருக்கு நடந்தவற்றை விளக்கினார்கள்.

"ஒன்றுமில்லை! இதுதானே உனக்கு வேண்டும்?" என்று நடேசனைப் பார்த்துக் கேட்டார் ஊர்ப்பெரியவர்.

"ஆமாம். அவன் எனக்குத் தருவதாகச் சொன்னதைத்தானே கேட்கிறேன். அதில் என்ன தவறு?" என்று திருப்பிக்கேட்டான் நடேசன்.

"சரி. நீ கேட்டது கிடைக்கும்!" என்ற ஊர்ப்பெரியவர்.

"இந்தத் தரை விரிப்பின் மூலையைத் தூக்கு" என்றார். ஊர்ப்பெரியவர் சொன்னபடி தரை விரிப்பின் மூலையைக் குனிந்து தூக்கினான் நடேசன்.

"தரை விரிப்பிற்குக் கீழே என்ன இருக்கிறது?" என்று கேட்டார் ஊர்ப்பெரியவர்.

"ஒன்றுமில்லை," என்று பதில் வந்தது நடேசனிடமிருந்து.

"இந்த ஒன்றுமில்லையை எடுத்துக் கொண்டு போய்விடு!" என்று நடேசனுக்குக் கட்டளையிட்டார் ஊர்ப்பெரியவர்.

'அவசரத்தில் தவறு செய்து விட்டோமே,' என்று மலங்க மலங்க விழித்தபடி கூட்டத்தினரை விலக்கியபடி வெளியேறினான் நடேசன்.

நடேசனைச் சாதுர்யமாக மடக்கிய ஊர்ப்பெரியவருக்கு நன்றி தெரிவித்து விட்டுப் புறப்பட்டான் தொழிலாளி.

# வாரம் ஒரு நாடு

ப னா மா



தலைநகர் - பனாமா நகரம்
பரப்பு - 77,082 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை - 26 இலட்சம்
மொழி - ஸ்பானிஷ், ஆங்கிலம்
எழுத்தறிவு - 87%
சமயம் - கிறிஸ்தவம்
நாணயம் - பால்போவா
தனி நபர் வருமானம் - 2130 டொலர்

**அமைவிடம்:**

பனாமா நாட்டின் துண்டு நிலப்பகுதி, வடக்கு-தெற்கு அமெரிக்காவைப் பிரிக்கும் பூசந்தியின் தென்கோடியில் அமைந்துள்ளது. இதன் மிகக்குறுகிய பகுதியில் 50 மைல் நீளமுள்ள பெயர் பெற்ற 'பனாமா கால்வாய்' அமைந்துள்ளது. இது அத்லாந்திக், பசிபிக் கடல்களை இணைக்கிறது.

**வரலாறு:**

கொலம்பியாவின் ஆதிக்கத்தில் இருந்து 1903 ல் விடுபட்டது. அமெரிக்க பின்துணையுடனேயே இச்சுதந்திரம் கிடைத்தது. இதைத் தொடர்ந்து பனாமா கால்வாயை நிர்வகிக்கும் பொறுப்பை அமெரிக்காவிடம் விட்டுக் கொடுத்தது. 1978 ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து 1999 ல் கால்வாய் நிர்வாகம் பனாமாவுக்குக் கிடைக்கும். அப்போதுதான் அமெரிக்க இராணுவம் அங்கிருந்து விலகும். அதிபர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். 1988ல் அமெரிக்க இராணுவம் பனாமாவின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டு அதிபராக இருந்த நொரீகாவை கைது செய்து, தேர்தலில் வெற்றிபெற்ற கட்சிகளிடம் ஆட்சியைக் கொடுத்தது.

**பொருளாதாரம்:**

நிலம் வளமுடையதாக இருப்பினும், பல பகுதிகள் பயிரிடப்படாமலேயே இருக்கிறது. பழங்கள், சீனி, மது போன்றவை முக்கிய உற்பத்திப் பொருட்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 24.08.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 154
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 152

பரிசுக்குரியவர்:
எம்.எவ்.பர்ஸானா.
கல்பிட்டி, புத்தளம்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| செல்வன் வே.சதீஸ் பிரசாந், சிங்கபுர் வீதி, சிலாபம். | செல்வி டுஷானி. டில்லிக்கூல்ட்றி த.வி, லிண்டுல. |
| எம். ஆர்.டில்சான், கட்டாப்பு வீதி, கல்ஹின்னை. | அ.அ. மஹம்மது அஸாம். சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். |
| செல்வன் ராகுல்ராஜ் நடராஜ், செபல் வீதி, நுவரெலியா. | எஸ். ஹரிபிரசாத், கோணஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை. |
| எம்.எஸ்.சராபத் மஹாசின், வடக்கு வீதி, புத்தளம். | எஸ். முரளிதாஸ், இராமகிருஷ்ணமிஷன், அக்கரைப்பற்று-7. |
| எஸ். சந்திரமோகன், சென் மேரிஸ் மகா வித்தியாலயம், மத்துகம. | செல்வன் பி.அன்ரு ராஜன், புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை. |

# கார்பன்-14

**★ கார்பன் - 14 என்றால் என்ன?**

கதிர்வீச்சுத்தன்மை கொண்ட கார்பனைத்தான் கார்பன் - 14 என்று அழைக்கிறார்கள். இது எல்லா உயிரினங்களிடமும் கலக்கும் தன்மையுடையது.

**★ இதை வைத்து அழிந்து போன உயிர்களின் வயதை எப்படிக் கணக்கிடுகின்றனர்?**

உயிரினங்கள் இறந்ததும் அதற்குள் இருக்கும் கார்பன்-14லும் அழுக ஆரம்பிக்கும். மீதியுள்ள கார்பன்-14 ஐக் கொண்டு அவற்றின் வயதை விஞ்ஞானிகள் கணக்கிடுகின்றனர்.

**★ இதன் அழுகும் தன்மையை வரையறுக்க முடியுமா?**

முடியும். பொருட்களில் உள்ள பாதியளவு கார்பன்-14 கதிர்களில், பாதி அழிவதற்கு 5730 ஆண்டுகள் ஆகும்.

**★ இப்படிக் கணக்கிடும் முறை மிகச் சரியானதா?**

ஆம். 40 ஆயிரம் வருடங்கள் ஆன உயிரினங்களின் வயதைக் கணக்கிடுவதற்கும் இம்முறை ஒத்து வருகிறது.



**★ இம்முறையைக் கண்டுபிடித்தவர் யார்?**

டாக்டர் வில்லார்ட் என்ற அமெரிக்க விஞ்ஞானி.

# விடுகதைகளும் விடைகளும்

1. குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டும் அண்ணன் தம்பிகள். அவர்கள் யார்?
2. அடுக்கடுக்காய் வெள்ளைமரம், அத்தனையும் முத்து மரம். அது என்ன?
3. அவனது நிறம் நீலம், அவனின் எல்லை நெடுந்தூரம். அவன் யார்?
4. உறுமுவான், குமுறுவான், ஆள் மட்டும் கண்ணில் படமாட்டான். அவன் யார்?
5. வளைவான், குழைவான் ஆனால் ஒடிய மாட்டான். அவன் யார்?
6. அனைவருக்கும் அடங்காது, ஆதவனுக்கு மட்டும் அடங்கும். அது என்ன?
7. வெட்டி வெட்டி எரியும் விளக்கால் ஊர் முழுக்க வெளிச்சம். அது என்ன?
8. வளைந்து நெளிந்தவன் தொடர்ந்த பயணத்தில் துணை வருபவன். அவன் யார்?

### விடைகள்

1. கடிகார பெரியமுள், சின்னமுள்.
2. பற்கள் 3. கடல் 4. இடி முழக்கம்
5. தலைமுடி 6. குளிர்
7. மின்னல் 8. வீதி.

தொகுப்பு:- எம்.உஷா.

# இரத்த வகைகள்



ஐரோப்பாவில் 17ம் நூற்றாண்டில் இருந்தே இரத்ததானம் செய்வது நடைமுறைக்கு வந்தது. ஆனால், பல சமயங்களில் இரத்தத்தைப் பெறுபவர் மரணமடைந்ததால் இதன் மர்மம் என்ன என்பது யாருக்கும் தெரியவில்லை.

1900ம் ஆண்டில் ஒஸ்ரிய நாட்டின் மருத்துவரான டாக்டர் கார்ல் லேன்ட்ஸ்டினர் என்பவர் இரத்தத்தில் மூன்று வகை இருப்பதைக் கண்டுபிடித்தார்.


ஒவ்வொருவர் உடலிலும் ஒவ்வொரு வகை இரத்தம் உள்ளது. ஒருவருக்குப் பொருந்தாத இரத்தத்தை உடலில் செலுத்தினால் அவர் இறந்து விடுவார் எனக் கண்டு பிடித்தார்.

தொடர்ந்து ஆராய்ச்சி செய்த லேன்ட்ஸ்டினர் இரத்தத்தில் நான்கு வகைகள் உள்ளன என்று கண்டுபிடித்தார். அவற்றுக்கு ஏ.பி.ஏபி.ஓ என்று பெயரிட்டார்.

# காந்தச் சீப்பு

தலைக்குக் குளித்த நாளில், தலை உலர்ந்த பின்னர் முடியை பிளாஸ்டிக் சீப்பினால் பலமுறை சீவிய உடன், சிறுசிறு துண்டுகளாகக் கிழிக்கப்பட்ட காகிதங்களுக்குப் பக்கத்தில் கொண்டு போனால் அவை சீப்பில் வந்து ஒட்டிக் கொள்ளும். அதே போல் ஒழுகும் குழாய் தண்ணீருக்கு அருகே சீப்பைக் கொண்டு போனால், தண்ணீர் சீப்பை நோக்கி வளைந்து வரும்.

அதே போல் அதே சீப்பைத் தலைமுடிக்குப் பதிலாகக் கம்பளித் துணியில் அழுந்தத் தேய்த்து, டேபிள் டென்னிஸ் விளையாட்டில் பயன்படுத்தப்படும் பந்துக்கு அருகே நீட்டி இழுத்தால் பந்தும் சீப்புடனேயே உருண்டு வரும்.



சீப்பில் இருக்கும் கவரும் சக்தி என்ன?

ஒவ்வொரு பொருளிலும் மின்துகள்கள் உள்ளன. சீப்பைத் தலையில் சீவுவதன் மூலம் அல்லது கம்பளியில் தேய்ப்பதன் மூலம் அதிலுள்ள மின் துகள்கள் சலனப்படுத்தப்படுகின்றன. அதனால் எதிரில் உள்ள இன்னொரு பொருளின் மின்துகளை தன்னை நோக்கிக் கவருகிறது. அதன் காரணமாகத்தான் பந்து உருள்வதும், தண்ணீர் வளைவதும், காகிதங்கள் வந்து ஒட்டிக் கொள்வதும் நடைபெறுகிறது.

## குட்டிச் செய்தி



நியூஸிலாந்தில் மட்டும் காணப்படும் 'டுவாட்டரா' என்னும் ஓணான் குடும்பத்தைச் சேர்ந்த பிராணி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கிறது. 'டுவாட்டரா' இடும் முட்டை குஞ்சு பொரிக்க ஒரு வருடம் தேவைப்படுகிறது.

www.padippakam.com

# அசத்தல் 6 கீதா!



## தமிழக கிரைம் கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்

"**யா**ரு? கோபாலகிருஷ்ணனா?"

"ஆமாம் சார். கூட வர்றது இந்த மதனோட ஃப்ரெண்டு. ரவின்னு பேரு. கோபாலகிருஷ்ணன் கொஞ்சம் அடாவடியான வக்கீலு. பார்த்து சமாளிங்க. அசைஞ்சி கொடுக்காதீங்க."

"ஹலோ இன்ஸ்பெக்டர், குட் மார்னிங்க்."

"வாங்க சார். உக்காருங்க. ரொம்ப நாளாச்சி."

"இங்கே மதன்னு ஒரு பையனை லாக்கப்ல வச்சிருக்கீங்களா?"

"ஆமாம். பேப்பர் பார்த்திருப்பீங்களே....கடற்கரை கொலை! இவன் தான்."

"சஸ்பெக்ட் பண்றீங்களா?"

"நேத்து ராத்திரி சஸ்பெக்ட் பண்ணோம். இப்போ உறுதியே செஞ்சிட்டோம்:"

"எப்படி?"

"மன்னிக்கணும். அது மாஜிஸ்ட்ரேட் கிட்டே தான் சொல்லியாகணும்."

"வெல். ப்ரட்யூஸ் பண்ணிட்டீங்களா?"

"இதோ.....பண்ணப்போறோம். டீசல் போடப் போயிருக்கு ஜீப்."

"என்ட்ரி போட்டிருக்கீங்களா?"

"போட்டுட்டாப் போச்சி!"

"நான் அழைச்சுட்டுப் போகட்டுமா?"

"விளையாடறீங்களா?"

"முறைப்படி வந்து அரெஸ்ட் பண்ணிக்கங்களேன்."

"முறை எல்லாம் தெரியும் சார். நீங்க பெய்ல் மூவ் பண்ணிக்கலாம். அதுக்கு முன்னாடி எதுவும் சொல்றதுக்கில்லை."

"பேசச்கூட கூடாதா?"

"தாராளமா பேசுங்க."

"மணி பர்ஸ் வாங்கிட்டதுக்கு கையெழுத்துப் போட்டுட்டு வந்துடலாம் வாங்கன்னு நைஸா அழைச்சிட்டு வந்துட்டாங்க சார்."

"ரவி அமைதியா இருங்க. நான் பார்த்துக்கிறேன். இவன்தான் உங்க ஃப்ரெண்டா?"

"ஆமாம்...மதன் டேய் மதன்....இங்கே வா."

"என்னப்பா, அடிச்சாங்களா உன்னை?"

"ஆமாம் சார்....பெல்ட்டால....."

"என்ன இன்ஸ்பெக்டர் இது?"

"என்னமோ நாட்ல நடக்காத விஷயம் மாதிரி கேட்டா எப்படி வக்கீல் சார்? உண்மையை வரவழைக்கிறது எப்படி? அடிக்கத்தான் செய்வோம்."

"யு ஷுட் நாட் டாக் லைக் திஸ் இன்ஸ்பெக்டர். வெல் மதன். இந்த கொலையை நீங்க செஞ்சிங்களா?"

"அய்யோ! சத்தியமா இல்லை சார்.....நடந்தது என்னன்னா.............. ..........................இதான் சார் நடந்திச்சி."

"வெரிகுட். எதிலையும் கையெழுத்துப் போட்டீங்களா?"

"இல்லை சார்."

"இனிமே போடச் சொன்னாலும் போடவேணாம். என்ன கேட்டாலும், எப்படி கேட்டாலும் இதையே திருப்பி திருப்பி சொல்லுங்க. கோர்ட் கஸ்டடி வாங்கிடறேன். அப்புறம் உன்னை அடிக்க நினைச்சாலும் அடிக்கமுடியாது. அந்தப்பொண்ணு கீதா அட்ரஸ் சொல்லுங்க. ரைட்டு உங்களையும், கீதாவையும் சேர்ந்தாப்ல வேற யாராச்சும் பார்த்தாங்களா?"

"இல்லை சார்......."

"சரி. நான் பார்த்துக்கறேன். தைரியமா இருங்க. சாப்பிட்டீங்களா?"

"இன்னும் இல்லை."

"இன்ஸ்பெக்டர், மணி பதினொன்னு, இன்னும் இவர் சாப்பிடலை."

"என்ன நீங்க சீறிக்கிட்டே இருக்கீங்க? வாங்கித் தரத்தான் சொல்லுது சட்டம். வாய்ல ஊட்டி விட முடியாது. உள்ளே பாருங்க. பொட்லம் கிடக்குதா, இல்லையா? தந்தூரி சிக்கன் வேணுமாமா?"

"தேவையில்லை. மதன் சாப்பிடுங்க. ஒண்ணும் பயப்படாதீங்க. வெளியே கொண்டாந்துடறேன்,. உங்களை. இன்ஸ்பெக்டர், அப்ப நான் வர்றேன்."

"சந்தோஷம்."

"**யா**ரை பார்க்கணும்?"

"மிஸ் கீதா இருக்காங்களா? நான் ஒரு வக்கீல்."

"இப்படி உக்காருங்க. போய் சொல்றேன்."

"சரி. மிஸ்டர் ரவி, இந்தப் பொண்ணு தான் முக்கியமான சாட்சி. இதை வச்சே ஊதித் தள்ளிடலாம்."

"சரியா விசாரிக்காம ஏன் சார் இவ்வளவு அவசரமா கேசை முடிக்கப் பார்க்கறாங்க?"

"போலீசுக்கு கொஞ்சூண்டு சந்தேகப்படும் படியா ஒரு நபர் கிடைச்சுட்டாப் போதும், கண், காது மாட்டி ஜோடனையிலே இறங்கிடுவாங்க. கேஸ் முடியணும் பாருங்க. பிரமோஷன் வேற கிடைக்குமே."

"ஸ்ஸ்ஸ்... வர்றாங்க..... வர்றாங்க."

"நடையைப் பாரு. பணக்கார திமிர் தெறிக்கிதுய்யா. வணக்கம்மா."

"வணக்கம். நீங்க.."

"நான் லாயர் கோபாலகிருஷ்ணன். இவர் ரவி. மிஸ்டர் மதனோட ஃப்ரெண்டு. மதன் யாருன்னு உங்களுக்கு சொல்ல வேண்டிய அவசியமில்லை."

"சங்கரா, நாலு பெட்டரி செல் வாங்கிட்டு வரச்சொன்னேனே, போகலையா?"

"இதோ, போறேன்ம்மா."

"இப்ப சொல்லுங்க சார். மதனை சந்தேகப்படறாங்களா போலீஸ்? பேப்பர்ல விபரம் பூரா படிச்சி பதறிப் போய்ட்டேன்."

"அப்பா! இப்பதான் மூச்சே வருது. மதன்னா யாருன்னு எங்ககிட்டேயே கேட்டுடுவிங்களோன்னு நினைச்சோம்."

"நேத்து நடுராத்திரி போன்ல கேட்டாங்க பக்கத்திலே அப்பா நிற்கிறார். நான் என்ன சார் சொல்ல முடியும்? சரி, சொல்லுங்க. எங்கே இருக்கார் மதன்?"

"போலீஸ் ரிமாண்ட்ல இருக்கார்."

"எப்ப விடுவாங்க?"

"விடறதா? தூக்குல ஏத்திட்டுதான் சாப்பிடறதுன்னு கங்கணம் கட்டிக்கிட்டு வேலை பார்க்குது போலீஸ்."

"என்ன சார் இப்படி சொல்றீங்க? இவர் கொலை செய்யலை."

"தெரியும். சந்தர்ப்ப சூழ்நிலை அப்படி சொல்லுது."

"உண்மையான குற்றவாளியை பிடிச்சா இவரை விட்டுடுவாங்கதானே?"

"அப்படி எந்த ஸ்டெப்பும் அவங்க எடுக்கிறதா இல்லை. பய மாட்டினான். தீர்த்துடுவோம்னு முடிவு கட்டிட்டாங்க. கத்தில இவன் கைரேகை இருக்கு. அது போதும் அவங்களுக்கு. நடந்த உண்மை எனக்கே நம்ப முடியலை. போலீஸ் எப்படி நம்பும்?"

"இப்ப என்ன சார் செய்றது? அவரை எப்படியாச்சும் காப்பாத்திடுங்க."

"காப்பாத்திடலாம். நீங்க மனசு வச்சா போதும்."

"என்ன செய்யச் சொல்றீங்க?"

"டிஃபன்ஸ் தரப்புல அஸ்த்திவாரமே நீங்க தான். உங்க சாட்சியத்தை நம்பிதான் நான் இந்த கேசையே எடுத்துக்கறேன்."

"புரியும்படியா சொல்லுங்க."

"கோர்ட்டுக்கு வந்து மதன் என்னோட காதலர். சம்பவம் நடந்த சாயங்காலம் நாங்க ரெண்டு பேரும்தான் நடந்தோம். பேசினோம்னு நடந்ததை சாட்சி சொல்லணும்."

"சார் என்ன விளையாடறிங்களா?"

"இல்லைம்மா. சீரியஸாதான் சொல்றேன்."

"அதெப்படி சார் முடியும்?"

"ஏன் முடியாது?"

"பப்ளிக்ல அவ்வளவு பேருக்கு முன்னாடி அவர் என் காதலர்னு சொல்லச் சொல்றிங்களா....? இப்போ உங்ககிட்டே பேசறதுக்கே நடுங்கறேன். இந்த நிமிஷம் அப்பா வந்துட்டா என்ன சொல்றதுன்னு உள்ளுக்குள்ளே பதறிக்கிட்டு இருக்கேன்."

"வேற வழி இல்லைம்மா கீதா."

"சாட்சி எல்லாம் சொல்லமுடியாது சார். அப்பா என்னை சுட்டுப் பொசுக்கிடுவார். அவருக்கு பிரஸ்டீஜ் முக்கியம்."

"அதைவிட காதல் முக்கியம் இல்லையா?"

"முக்கியம் தான். என்னை தெருவில நிக்கச் சொல்றிங்களா? ஒரு பைசா சொத்து கிடைக்காது எனக்கு. போடி வெளியேன்னிடுவார். ஒரே பொண்ணு நான். யு நோ, அரை கோடி சொத்து!"

"அப்ப என்னதான் பண்ணலாம். மதனை காப்பாத்த வேணாமா?"

"காப்பாத்தணும்"

"அதுக்கு நீங்க சாட்சி சொல்லித்தான் ஆகணும்."

"முடியவே முடியாது."

"கோர்ட் மூலமா சம்மன் அனுப்பினா வந்துதான் ஆகணும்மா."

"என்ன சார் மிரட்றிங்களா? அப்படி எல்லாம் செஞ்சிங்கன்னா, அங்கே வந்து எனக்கு யாரையும் தெரியாதுன்னுடுவேன்."

"அவ்வளவு சுலபமில்லைம்மா அது. நீ மதனுக்கு எழுதின லெட்டர்ஸ் எல்லாம் எனக்கு கலெக்ட் பண்ண முடியாதா?"

"முடியாது சார். நான் அவருக்கு லெட்டர் எழுதினதே இல்லை."

"கீதா, என்ன இவ்வளவு பிடிவாதமா பேசறிங்க? மதனை நேசிச்சது பூரா பொய்யா?"

"இல்லை. உண்மைதான். இப்பகூட நேசிக்கிறேன்."

"அப்போ அவர் உயிர் தப்புறது முக்கியமில்லையா?"

"வேற வழி பாருங்களேன்னு சொல்றேன். பணம் தரட்டுமா? எவ்வளவு வேணும்? ஜட்ஜையோ, பப்ளிக் பிராசிகியூட்டரையோ சரிகட்ட முடியுமான்னு பாருங்க. என்னால அந்த வகையிலே தான் ஒத்துழைப்பு தர முடியும்."

"இந்த கேஸைப் பொறுத்தவரை பணம் பத்தாதும்மா. உங்கசாட்சியம்தான் சாதிக்கும்."

"அதைத் தவிர வேற எதாச்சும் பேசுங்க சார்."

"உங்களைப் புரிஞ்சுக்கவே முடியலை."

"நான் உள்ளே போகட்டுமா, தலை வலிக்குது."

"போங்கம்மா. யார் எப்படிப் போனா உங்களுக்கு என்ன கவலை? ஏ.சி. போட்டுக் கிட்டு தூங்குங்க. வாய்யா ரவி. நம்மால ஆனதைப் பார்ப்போம்."

"இருங்க சார். ஒரே ஒரு வார்த்தை பேசிட்டு வந்துடறேன். இங்க பாரும்மா கீதா, நீங்க சந்திச்சிக்கிட்டது, பேசினதுக்கு சாட்சி எதுவும் இல்லை. ஆனா உன்னைப் பத்தி மதன் எங்கிட்ட எவ்வளவு தூரம் உருகி உருகி பேசியிருக்கான் தெரியுமா? ஜாக்கிரதையான பொண்ணுன்னு சொல்வான். இப்பதான் புரியுது அது. அவனை நீ மனப்பூர்வமா காதலிக்கலை. விளக்குக் கம்பத்திலே உரசிக்கிட்டு சுகம் காண்ற எருமைக்கும் உனக்கும் வித்தியாசம் இல்லை. உனக்கு உன் சொத்து தான் பெரிசு. உருப்படப் போறதில்லை நீ. அனுபவிப்பே. நிச்சயம் அனுபவிப்பே."

"மிஸ்டர்! வெளியே போறிங்களா, இல்லை வெளியே அனுப்பட்டுமா...?"

"ச்சீ போ! வாங்க சார், போலாம்."

"ஆட்டோ! ஆட்டோ! ஏறிக்கப்பா. என்ன இது, இந்தப் பொண்ணு இப்படி பல்டி அடிச்சிடுச்சி?"

"அதான் சார் பொம்பளை. நம்மவே முடியாது. சரிதான் போடா, எனக்கு என் சொத்துதான் முக்கியம்னுட்டா பார்த்திங்களா? சுகம் மட்டும் வேணும். சோகம் வேணாம். அப்புறம் என்ன சார் காதல் இது?"

"திஸ் ஈஸ் த லவ் ஆஃ 1987 ரவி."

**(தொடர்ந்து வரும்)**

**இதுவரை**

மதன் கீதா இருவரும் காதலர்கள். கடற்கரையில் மாலை நேரத்தில் சந்திக்கின்றனர். இருட்டாகி விட்டதால் இருவரும் புறப்படுகின்றனர். மதனின் பர்ஸ் தொலைந்து விடுகிறது. கடற்கரையில் ஒரு பெண்ணின் உடல் கிடக்கிறது. அந்தப் பெண்ணின் பெயரும் கீதா. மரிய கீதா. பொலிசார் விசாரணைக்கு வருகின்றனர். மதனின் பர்ஸ் கிடைக்கிறது. மதனைத் தேடி வருகின்றனர். மதனின் காற்சட்டையில் இரத்தக்கறை இருக்கிறது. மதன் கைது செய்யப்படுகிறான். காற்சட்டையில் எப்படி இரத்தக்கறை வந்தது என்பதை அவனால் விளக்க முடியவில்லை. மதனின் காதலி கீதாவுக்கு பொலிசார் போன் செய்கின்றனர். மதன் என்று யாரையும் தனக்குத் தெரியாது என்கிறாள் கீதா. விசாரணை தொடர்கிறது.

**இனி...**

## பேனா நண்பர் அரங்கம்













பெயர்: எம். சிவகுமார்.
வயது: 20
முகவரி: சண்முகலிங்கம் வீதி, கறுவாக்கேணி, வாழைச்சேனை.
பொழுதுபோக்கு: பத்திரிகை படித்தல்.

பெயர்: எம். இக்பால்.
வயது: 22
முகவரி: 48/16 ஏ, சென் தோமஸ் லோவர் வீதி, பண்டாரவளை.
பொழுது போக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.

பெயர்: கே. ஜோன் பொஸ்கோ.
வயது: 26
முகவரி: P.O.BOX- 2000, SALMIYA- 22020, KUWAIT.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: பி. ஜெயமலர்.
வயது: 19
முகவரி: 26/13, ஏ.ஏ. தர்மசேன மாவத்தை, கண்டி.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: சி. உவைஸா.
வயது: 18
முகவரி: 694/ ஏ, பழைய சினிமா வீதி, அக்கரைப்பற்று-01.
பொழுது போக்கு: தையல், பத்திரிகை.

பெயர்: பி. முகமட் பைஸல்.
வயது: 33
முகவரி: P.O.BOX-52396, RIYADH- 11563, K.S.A.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எல். மஜித்.
வயது: 15
முகவரி: 62, சொறிக்கல் முனை, சம்மாந்துறை.
பொழுது போக்கு: முத்திரை சேகரித்தல், நாவல் படித்தல்.

பெயர்: ஏ. றபீக்.
வயது: 17
முகவரி: புதிய துறைமுக வீதி, நெய்தல் நகர், மூதூர்-01.
பொழுது போக்கு: கதைப்புத்தகம், உதைபந்து.

பெயர்: ஆர். சந்துரு.
வயது: 21
முகவரி: இ.சி/1, ஞானவிமல வீதி, தெமட்ட கொட, கொழும்பு-09.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: எஸ். அமிர்தலிங்கம்.
வயது: 23
முகவரி: பெல்மடுல்ல எஸ்டேட், 5ம் பிரிவு, காவத்தை.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: எஸ். சிவநேசராசா.
வயது: 23
முகவரி: ENGLICHGURS STR-04. 6006 LUZERN. SWITZERLAND.
பொழுது போக்கு: பத்திரிகை, சினிமா.

பெயர்: எம். றாபி.
வயது: 20
முகவரி: 66, பிரதான வீதி, ஹொரவப் பொத்தான.
பொழுது போக்கு: ரீ.வி., வானொலி, பத்திரிகை.


படிப்பகம்

www.padippakam.com

# தாய்

## 89

**"மன்னராட்சி என்ற முதல் விலங்கைத் தறித்து மக்களை விடுவிக்க வேண்டியது எங்கள் கடமை"**

**-பாவெல்-**

**மக்சீம் கார்க்கி**



சிஸோவ் பெஞ்சில் உட்கார்ந்தவாறே ஏதோ வாய்க்குள் முனகிக் கொண்டான்.

"என்ன விஷயம்?" என்று கேட்டாள் தாய்.

"ஒன்றும் பிரமாதமில்லை. ஜனங்கள் முட்டாள்கள்." மணி அடித்தது.

"அமைதி, ஒழுங்கு!"

எல்லோரும் மீண்டும் ஒரு முறை எழுந்து நின்றார்கள். நீதிபதிகள் ஒவ்வொருவராக வந்து தத்தம் ஆசனங்களில் அமர்ந்து கொண்டார்கள். கைதிகளையும் அவர்கள் இடத்துக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள்.

"கவனி!" என்று இரகசியமாகக் கூறினான் சிஸோவ். "அரசாங்க வக்கீல் பேசப் போகிறார்."

தாய் தன் உடம்பு முழுவதையும் முன்னால் தள்ளிக் குனிந்து கொண்டு, ஏதோ ஒரு பயங்கரத்தைப் புதிதாக எதிர்பார்ப்பதுபோல் ஆர்வத்தோடு கவனித்தாள்.

அரசாங்க வக்கீல் நீதிபதிகளுக்கு ஒரு பக்கமாக எழுந்து நின்று மேஜைமீது ஒரு கையை ஊன்றியவாறு அவர்களைப் பார்த்துத் திரும்பினார். ஒரு பெருமூச்சோடும், வலது கையின் வீச்சோடும் அவர் பேசத் தொடங்கினார். அவரது பேச்சின் ஆரம்பத்தைத் தாயால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவரது குரல் கனத்து மெதுவாக, ஆனால் ஒழுங்கற்று, சமயங்களில் துரிதமாகவும் சமயங்களில் மந்தமாகவும் ஒலித்தது. சிறிது நேரத்துக்கு அவரது பேச்சு மெதுவாகவும் ஆயாசத்தோடும், சிரமத்தோடும் ஒலித்தது; திடீரென்று அந்தப் பேச்சு கும்மென்று இரைந்தெழுந்து சர்க்கரைக் கட்டியை மொய்க்கும் ஈக்கூட்டத்தைப்போல் ரீங்காரித்து விம்மியது. அந்தப் பேச்சில் எந்தக் கெடுதியும் இருப்பதாகத் தாய்க்குத் தோன்றவில்லை. அந்த வார்த்தைகள் பனியைப்போலக் குளிர்ந்தும், சாம்பலைப் போலக் கறுத்தும், கவிந்து குவிந்து மூடும் தூசியைப் போல் அந்த அறையில் கொஞ்சம் கொஞ்சமாக விழுந்து நிரம்பிக் கொண்டிருந்தன. வார்த்தை அலங்காரமும், உணர்ச்சியின் வறட்சியும் கொண்ட அந்தப் பேச்சு பாவெலையும் அவனது தோழர்களையும் கொஞ்சம்கூடத் தொட்டதாகத் தெரியவில்லை, எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை. அவர்கள் தம் பாட்டுக்கு உட்கார்ந்து அமைதியாகவும், நிதானமாகவும் தமக்குள் பேசிக் கொண்டார்கள்; புன்னகை புரிந்தார்கள்; பொங்கி வரும் சிரிப்பை மறைப்பதற்காக முகத்தைச் சுழித்துக் கொண்டார்கள்.

"அவன் பொய் சொல்கிறான்!" என்றான் சிஸோவ்.

அவள் அதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அவள் அரசாங்க வக்கீலின் பேச்சையே கேட்டுக் கொண்டிருந்தாள்; அவர் எல்லாக் கைதிகளையுமே பாரபட்சமில்லாமல் சகட்டு மேனிக்குக் குற்றம் சாட்டிப் பேசுவதை அவள் உணர்ந்தறிந்தாள். பாவெலைப்பற்றிப் பேசிய பின் பியோதரைப் பற்றியும் பேசினார். பியோதரைப் பற்றிய பேச்சை முடிக்கப் போகும் தருணத்தில், புகினைப் பற்றிய பேச்சைத் தொடங்கினார். இப்படியாக அவர்கள் அனைவரையும் ஒரே கோணிச் சாக்குக்குள் பிடித்துத் தள்ளி மூட்டை கட்டுவதுபோல் அவரது பேச்சு இருந்தது. ஆனால் அந்தப் பேச்சின் வெளி அர்த்தத்தைக் கண்டு அவளுக்குத் திருப்தி ஏற்படவில்லை. அந்த மேலோட்டமான அர்த்த பாவம் அவளைத் தொடவும் இல்லை; கலக்குறச் செய்யவும் இல்லை.

அவள் இன்னும் ஏதோ ஒரு பெரிய பயங்கரத்தை எதிர்பார்த்தாள்; அந்தப் பயங்கரத்தை அந்த வார்த்தைகளின் உள்ளர்த்தத்திலும், அரசாங்க வக்கீலின் முகத்திலும், கண்களிலும், குரலிலும், லாவகமாக வீசி விளாசும் அவரது வெள்ளைக் கரத்திலும் துருவித்துருவித் தேடிக் கொண்டிருந்தாள். இருந்தாலும் அதில் ஏதோ பயங்கரமிருப்பதாகத் தோன்றியது. அதை அவள் உணர்ந்தாள். எனினும் அதை அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை; அதை உருவாக்கிக் காண முடியவில்லை. அவளது இதயம் எப்படித்தான் எச்சரித்த போதிலும் அவளால் அதை இனம் காணமுடியவில்லை.

அவள் நீதிபதிகளைப் பார்த்தாள். அந்தப் பேச்சைக் கேட்டு அவர்கள் அலுத்துப் போய்விட்டார்கள் என்பது சந்தேகத்துக்கு இடமில்லாமல் தெளிவாகத் தெரிந்தது. அவர்களது உயிரற்ற சாம்பல் நிற, மஞ்சள் மூஞ்சிகளில் எந்த வித உணர்ச்சியுமே பிரதிபலிக்கவில்லை. அரசாங்க வக்கீலின் பேச்சு கண்ணுக்குத் தெரியாத ஒரு பனிமூட்டத்தைப் பரப்பியது. அந்த பனிமூட்டம் நீதிபதிகளின் மீது அடர்ந்து கவிந்தது. அலுப்போடும் வேண்டாவெறுப்போடும் காத்திருக்கும்படி, அவர்களை நிர்ப்பந்தித்தது. பிரதம நீதிபதி தமது ஆசனத்திலேயே உறைந்து சமைந்து உட்கார்ந்து போய்விட்டார். இடையிடையே எப்போதாவது மட்டும் அவரது கண்ணாடிக்குள்ளாகத் தெரியும் கரும்புள்ளிக் கண்கள் உணர்ச்சியற்று அகல விரிந்து மூடின.

இந்த மாதிரியான உயிரற்ற வெறுப்புணர்ச்சியையும், உணர்ச்சியற்ற பற்றின்மையையும், கண்டு தனக்குள் தானே கேட்டுக் கொண்டாள்:

"இவர்களா தீர்ப்புக் கூறப் போகிறார்கள்?"

இந்தக் கேள்வி அவளது இதயத்தை குன்றிக் குறுகச் செய்தது; அவளது இதயத்திலிருந்த பயபீதியைப் பிதுக்கி வெளித்தள்ளி, வேதனை தரும் அவமான உணர்ச்சியைக் குடி புகுத்தியது.

அரசாங்க வக்கீலின் பேச்சு எதிர்பாராத விதமாகத் திடீரென நின்றுவிட்டது. அவர் விருட்டென இரண்டடி முன்னால் வந்து நீதிபதிகளுக்கு வணக்கம் செலுத்தினார்; தமது கைகளைத் தேய்த்துக் கொடுத்துக் கொண்டே உட்கார்ந்தார். பிரபுவம்சத் தலைவர் அவரைப் பார்த்துத் தலையை ஆட்டி, கண்களை உருட்டி விழித்தார். நகர மேயர் அவரோடு கைகுலுக்குவதற்காகத் தம் கரத்தை நீட்டினார்; ஜில்லா அதிகாரி தமது தொந்தியையே பார்த்தார்; லேசாகப் புன்னகை புரிந்து கொண்டார்.

ஆனால் நீதிபதிகளோ இந்தப் பேச்சினால் எந்த விதத்திலும் மகிழ்வுற்றதாகத் தெரியவில்லை. அவர்கள் அசையாது உட்கார்ந்திருந்தார்கள்.

அந்தக் கிழ நீதிபதி தம் முகத்துக்கு நேராக ஒரு காகிதத்தை உயர்த்திப் பிடித்துப் பார்த்தவாறே பேசினார்:

"இப்பொழுது பெதசேயெவ், மார்க்கவ், சகாரவ் மூவர் தரப்பு வக்கீலும் பேசலாம்."

நிகலாயின் வீட்டில் தாய் பார்த்திருந்த அந்த வக்கீல் எழுந்து நின்றார். சுமுகமான தோற்றம் கொண்ட பரந்த முகமும், சிவந்த புருவங்களுக்குக் கீழாகத் துருத்தி நின்று, இருகத்தி முனைகளைப் போல் பளபளத்து, கத்திரியைப் போல் எதையும் வெட்டித் தள்ளி நோக்கும் சிறு கண்களும் கொண்டிருந்தார் அவர். அவர் உரத்த குரலில் தெளிவாக நிதானமாகப் பேசினார்; எனினும் அவரது பேச்சையும் தாயால் உணர்ந்து புரிந்து கொள்ள முடியவில்லை.

"அவர் சொன்னது புரிகிறதா?" என்று அவள் காதில் இரகசியமாகக் கேட்டான் சிஸோவ். "புரிகிறதா? அந்தக் கைதிகளெல்லாம் மிகவும் மனமுடைந்து போய் நினைவிழந்து போனதாகக் கூறுகிறார். பியோதரைத் தான் சொல்லுகிறாரோ?"

அவளது மனத்தில் நிரம்பியிருந்த அதிருப்தி உணர்ச்சியால் அவளால் பதில் கூடக் கூறமுடியவில்லை. அவளது அவமான உணர்ச்சி விரிந்து பெருகி, இதயத்தையே ஒரு பெரும்பாரத்தோடு அழுத்திக் கொண்டிருந்தது. தான் ஏன் நியாயத்தை எதிர்பார்த்தாள் என்பது பெலகேயாவுக்கு அப்போதுதான் தெளிவாயிற்று. தன்னுடைய மகனுடைய சத்தியத்தை, அந்த நீதிபதிகளின் நியாய சத்தியத்துக்கு எதிரான நேர்மையோடு துல்லியமாக எடைபோடுவதைக் காணமுடியும் என்று அவள் எதிர்பார்த்தாள். அந்த நீதிபதியின் அவன் இப்படிச் செய்வதற்குரிய காரண காரியங்களைப்பற்றி, அவனது சிந்தனைகளையும் செயல்களையும் கூர்ந்து கவனித்து அவனைச் சமமாநியாக, இடைவிடாது, கேள்விகள் கேட்பார்கள் என்று அவள் எதிர்பார்த்தாள். அவன் கூறுவதைக் கேட்டு, அதன் உண்மையை அவர்களும் கண்டறிந்து, உற்சாகத்தோடு உரத்த குரலில் "இவன் சொல்வதுதான் உண்மை!" என்று நியாய பூர்வமாகச் சொல்லி விடுவார்கள் என்றும் அவள் எதிர்பார்த்தாள்.

ஆனால் அவள் எதிர்பார்த்தது எதுவுமே நடக்கவில்லை. விசாரணைக்காகக் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருக்கும் அந்தக் கைதிகளுக்கும் அந்த நீதிபதிகளின் கண்ணோட்டத்துக்கும் வெகு தூரம் என்றே தோன்றியது. மேலும் அந்த நீதிபதிகளை அந்தக் கைதிகள் ஒரு பொருட்டாக மதித்ததாகவும் தோன்றவில்லை. ஆயாசத்தினால், தாய்க்கு அந்த விசாரணையிலேயே அக்கறையற்று அலுத்துப்போய்விட்டது. அங்கு ஒலிக்கும் பேச்சுக்களைக் கேட்காமல் அவள் தனக்குள் தானே கூறிக் கொண்டாள்:

"இதையா விசாரணை என்கிறீர்கள்?"

"அவர்களுக்கு வேணும்!" என்று அதை ஆமோதித்து இரகசியமாகக் கூறினான் சிஸோவ்.

இப்போது வேறொரு வக்கீல் பேசிக் கொண்டிருந்தார். அவர் ஏளனபாவத்தோடு துடிப்பாகத் தோன்றும் வெளுத்த முகம் கொண்ட குட்டை ஆசாமி. அவரது பேச்சில் நீதிபதிகள் அடிக்கடி குறுக்கிட்டுப் பேசினார்கள்.

அரசாங்க வக்கீல் கோபத்தோடு துள்ளி எழுந்து, ஏதோ ஒரு நியாய ஒழுங்கைச் சுட்டிக் காட்டினார். உடனே அந்த ஆட்சேபனையைக் கிழ நீதிபதி ஏற்றுக்கொண்டார். பிரதிவாதித் தரப்பு வக்கீல் அவர் கூறியதைத் தலை வணங்கி மரியாதையோடு கேட்டுக் கொண்டு, தமது பேச்சை மேலும் தொடங்கினார்.

"விடாதே. அடி முடி காணும் வரையிலும் விடாதே!" என்று சொன்னான் சிஸோவ்.

அந்த அறை முழுவதும் ஒரு புத்துணர்ச்சி பரவி கலகலத்தது. குத்தலான வார்த்தைகளால் அந்த வக்கீல் அந்த நீதிபதிகளின் தடித்த உணர்ச்சிகளைக் கிளறிவிட்ட போது, ஜனக் கூட்டத்திடையே ஓர் ஆக்கிரமிப்புச் சக்தி கட்டிழந்து பரவுவது போல் தோன்றியது. நீதிபதிகள் ஒருவருக்கொருவர் நெருங்கிக் கொண்டு, அந்த வக்கீலின் வாசகத்தால் தமக்கு ஏற்படும் வேதனை உணர்ச்சியைத் தாங்கிக்கொண்டு உம்மென்று முறைத்துக் கொண்டிருந்தார்கள்.

பாவெல் எழுந்திருந்தான். திடீரென அந்த அறை முழுவதிலும் அமைதி நிலவியது. தாய் தன் உடம்பை முன்னால் தள்ளிக் கொண்டு பார்த்தாள். பாவெல் மிகுந்த அமைதியோடு பேசத் தொடங்கினான்.

"கட்சியின் அங்கத்தினன் என்ற முறையில், நான் என் கட்சியின் தீர்ப்பைத் தான் அங்கீகரிக்கிறேன். எனவே என் குற்றமின்மையைப் பற்றி எதுவுமே பேசத் தயாராயில்லை. ஆனால், என் தோழர்களின் வேண்டுகோளுக்காக, என்னைப் போலவே தங்கள் சார்பிலும் வாதாட மறுத்துவிட்ட தோழர்களின் வேண்டுகோளுக்காக, நீங்கள் புரிந்து கொள்ளாத சில விஷயங்களை நான் விளக்கிச் சொல்ல முயல்கிறேன். சோஷல்- டெமாக்ரஸி என்ற பெயரால் எங்கள் இயக்கம் ஆட்சி அதிகாரத்துக்கு எதிராகக் கிளர்ச்சி செய்கிறது என அரசாங்க வக்கீல் குறிப்பிட்டார். நாங்கள் அனைவருமே ஜார் அரசனைக் கவிழ்க்க முயலும் கூட்டத்தார் என்றே அவர் எங்களைப்பற்றி எப்போதும் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார். ஆனால் உங்களுக்கு நான் ஒரு விஷயத்தைத் தெளிவாக்கிவிட வேண்டும். மன்னராட்சி ஒன்றே ஒன்று மட்டும்தான் நமது நாட்டைப் பிணைத்துக் கட்டியிருக்கும் விலங்கு என்று நாங்கள் கருதவில்லை. ஆனால், அதுதான் முதல் விலங்கு; அது தான் நம் கைக்கு விரைவில் எட்டக் கூடிய விலங்கு; அந்த விலங்கைத் தறித்து மக்களை விடுவிக்க வேண்டியது எங்கள் கடமை!"

அவனது உறுதி வாய்ந்த குரலின் ஓங்காரத்தால் அந்த அறையின் அமைதி மேலும் அழுத்தமாகத் தோன்றியது. அந்த அறையின் சுவர்களே பின்வாங்கி விசாரிப்பது போலத் தோன்றியது. உயர்ந்ததொரு இடத்துக்குச் சென்று விட்டவனைப் போல் பாவெல் காட்சி அளித்தான்.

நீதிபதிகள் நிலை கொள்ளாமல் தவித்துத் தத்தளித்துத் தமது ஆசனங்களில் நெளிந்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள். பிரபுவம்சத் தலைவர், உம்மென்று முகத்தை வைத்துக்கொண்டிருக்கும் நீதிபதியிடம் ஏதோ இரகசியமாகச் சொன்னார். அதைக்கேட்டு, அந்த நீதிபதி தலையை ஆட்டிவிட்டு, பிரதம நீதிபதியிடம் ஏதோ சொன்னார். அவருக்கு அடுத்தாற் போலிருந்த நோயாளியான நீதிபதி அவரது இன்னொரு காதில் ஏதோ ஓதினார். அந்தக் கிழ நீதிபதி வலது இடது புறமாக அசைந்து கொண்டே பாவெலின் பக்கமாகத் திரும்பி ஏதோ சொன்னார்.

(தொடர்ந்து வரும்)

# காதல் கடிதம்

**சீனிவாசன்**

**புவனாவின் அன்பு மழையால் வாசுவின் இதய நிலத்தில் காதல் விதை....**

'இன்று எப்படியாவது கடிதத்தைக் கொடுத்து காதல் விஷயத்தை சொல்லிடணும்.' என்ற முடிவோடு அலுவலகம் புறப்பட்டான் வாசு.

அவன் வேலை பார்க்கும் நிறுவனத்தில் புதிய டைப்பிஸ்ட்டாக சேர்ந்திருந்தாள் புவனா.

அவள் அழகும், பழகும் விதமும் அங்கு அனைவரையும் காந்தமாய் கவர்ந்தது. குறிப்பாக, வாசுவை சற்று அதிகம் கவர்ந்தது.

அவள் இருக்கை வாசுவிற்கு எதிரில் இருந்ததால், அவன் சந்தோஷ வானில் சிறகடித்தான்.

தனக்கு வேலைகளில் அடிக்கடி ஏற்படும் சந்தேகங்களை அவனிடம் கேட்டுச் சரி செய்து கொண்டாள் புவனா.

தன்னைவிட அனுபவசாலிகள் இருந்தும் தன்னிடம் சந்தேகம் கேட்பதைப் பெருமையாக எண்ணினான் வாசு.

தொடக்கத்தில் அலுவலக வேலை சந்தேகங்களில் இருந்த பேச்சு, இரண்டு மாதத்தில் அரட்டையாக விஸ்வரூபம் எடுத்திருந்தது.

"சிகரெட் குடிக்காதீங்க, உடம்பு கெடும்" சொன்னாள் புவனா. மறுநாளே அவன் புகைக்குப் பகையானான்.

சேர், பிறகு வாசுசேர், இறுதியில் வாசு என அவள் மரியாதை குறைந்தது. உரிமை உயர்ந்தது.

ஒரு நாள் "புவனா மேடம்" என வாசு அழைத்தான். அதற்கு அவள், "என்ன புவனா மேடம் வேண்டியிருக்கு? சும்மா புவனான்னு கூப்பிடுங்க, அப்படிதான் இனிமே கூப்பிடணும்!" என்று சொன்னாள்.

இப்படி புவனாவின் அன்பு மழையினால் வாசுவின் இதய நிலத்தில் காதல் விதை முளைக்கத் தொடங்கியது.

இப்படி பழக்கமிருந்தும், காதலை அவளிடம் சொல்ல அச்சம் வாசுவைத் தடுத்தது.

ஏதாவது நினைத்து விடுவாளோ?

அலுவலகத்தில் அத்தனை பேருக்கும் முன்னால் எசகுபிசகாக திட்டி அவமானப் படுத்திட்டா அசிங்கமாயிடுமே என அவன் பயந்து பயந்து நாள்களை நகர்த்தினான்.

இன்று ஏதோ ஒரு துணிவோடு கடிதத்தை அவளிடம் நேரில் தந்து காதலைச் சொல்லிவிட முடிவு செய்தான்.

அலுவலகம் நுழைந்ததும் அவள் இருக்கையை நோக்கினான் வாசு. புவனா வேலையில் மும்முரமாய் ஈடுபட்டிருந்தாள்.

லெட்டரை எப்படிக் கொடுப்பது? யோசித்தான்.

ஏதாவது பைலில் லெட்டரை வைத்து, டைப் அடிக்கக் கொடுப்பது போல் கொடுத்துவிட வேண்டியது தான் என்று முடிவு செய்தான்.



அதற்குள் புவனா அவன் இருக்கையை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

"ஹலோ வாசு, குட்டமோர்னிங்."

"........."

"என்ன வாசு, எந்தக் கோட்டையைப் பிடிக்க பிளான் பண்ணிட்டிருக்கீங்க?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை புவனா." என்றான் வாசு. "சரி என்ன விஷயம் சொல்லு!"

"உங்ககிட்ட பின்நேரம் நான் பேர்சனலாப் பேசணும். நீங்க ஃப்ரியா?" என்றாள் புவனா.

"என்ன பேர்சனலாவா?"

"ஆமாம் வாசு."

'சரி. பின்நேரம் நம் கடிதத்தைக் கொடுத்து நம் காதலை ரிலீஸ் செய்ய இதுதான் சரியான சந்தர்ப்பம், என நினைத்துக் கொண்டான் வாசு.

"ஓகே புவி, ஐ ஆம் ஃப்ரீ."

"தாங்க் யு வாசு" சொல்லிவிட்டு நகர்ந்தாள், புவனா.

**மா**லை 5.30 மணி.

கடற்கரையில் கடலையைக் கொறித்துக் கொண்டே நடந்தனர் இருவரும்.

வாசு, தன் கடிதத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

"என்ன விஷயம் புவனா?"

மௌனம்.

"ஏதோ பேர்சனல்னு சொன்னியே. என்ன அது?"

புவனாவின் கண்களில் ஈரம் படிந்திருந்தது.

"வாசு, உன்னோடு பழக ஆரம்பித்த பிறகுதான் நான் உண்மையிலேயே சந்தோஷமாய் இருக்கிறேன். அதுவும் இந்த ஆபீஸில் இருக்கும் போது மட்டும்தான்.

வீட்டில் நானும் அம்மாவும் தான். அப்பா எங்களை விட்டு மறைஞ்சு ரொம்ப நாளாச்சு. எனக்கு ஓர் அண்ணன் இருந்தான். பேங்கில் வேலை பார்த்தான். போன வருடம் லாரி விபத்தில் இறந்து விட்டான். அவன் என்மீது ரொம்பப் பாசமாகவும் பிரியமாகவும் இருந்தான்.

திடீரென்று அவனுக்கு ஏற்பட்ட மரணத்தை என்னால் தாங்கிக்க முடியலை.

இந்த மாதிரி சூழ்நிலையில்தான் ஆபீஸில் உன்னைப் பார்த்தேன். உன்னோடு பழகினேன். அதில் எனக்கு அமைதியும் ஏதோ ஒரு வகை ஆனந்தமும் கிடைத்தது. அதனால் உன்னோடு மிகுந்த உரிமையோடு பழகினேன். இப்பகூட உன்னிடம் அந்த உரிமையில் தான் ஒன்று கேட்கப்போறேன்" என்று கூறிவிட்டு வாசுவை ஒருமுறை பார்தாள்.

"என்ன கேளு புவி" என்றான் வாசு.

தயங்கித் தயங்கி புவனா கேட்க ஆரம்பித்தாள்.

"வாசு! நீதான் நாளைக்கு எனக்கு நடக்கப் போற நிச்சயதார்த்தத்தை என் அண்ணன் ஸ்தானத்திலிருந்து நடத்தணும். எங்க வீட்ல ஆம்பிளைங்கன்னு சொல்லிக்க அப்பாவும் இல்லை, அண்ணனும் இல்லை. ப்ளீஸ் வாசு! மறுக்காமே சரின்னு சொல்லு வாசு! ப்ளீஸ்" என்றாள்.

அவள் வார்த்தைகள் அவன் இதயத்தைத் துப்பாக்கிக் குண்டுகளாய்த் துளைத்தன. மௌனமானான் வாசு.

தான் போட்ட தவறான காதல் கணக்கை எண்ணிக் கலங்கிப் போனான்.

'ச்சே. ஒரு பொண்ணு நெருங்கிப் பழகினா ஏன் இப்படி மனசு காதல் கீதல்னு கற்பனை வளர்த்துக்குது?'ன்னு வெட்கத்தில் தன்னை வெறுத்தான். சிறிது நேரம் மௌனத்திற்கு பிறகு ஒரு முடிவுக்கு வந்தவனாய்,

"நாளைக்கு எத்தனை மணிக்கு புவனா உனக்கு நிச்சயதார்த்தம்?"



படிப்பகம்

www.padippakam.com

# இரண்டாவது வானம்

மானுடபுத்ரன்

> இப்போது பிரவீனா பட்டது, தொட்டதெற்கெல்லாம் சண்டை போட்டாள். "நீங்கள் அவளை ரசியுங்கள் ஆனா ஓவரா....." பொறாமைப்பட்டாள்.

"பிரவீனா! சத்தியமாச் சொல்லுறன்: எனக்கு உன்னைப் பிடிக்காமல் இல்லை. பிடிக்காட்டில் இவ்வளவு காலமும் உன்னோடை இவ்வளவு அன்பா குடும்பம் நடத்தியிருப்பனே? ஆனா..."

"என்ன ரகு ஆனா...?"

"கீதாவும் எனக்கு வேணும்!"

"உது நடக்குமே...?"

"ஏன் நடக்காது? நீ மனம் வைச்சி யெண்டால் சரிதானே?"

"ஓம் எனக்கு சம்மதம் எண்டு வைச்சுக் கொள்ளுங்கோ; அவளின்ரை அம்மா அப்பா சம்மதிப்பினமே?"

"ஏன் சம்மதிக்க மாட்டினம்?"

"ஏற்கனவே திருமணமான உங்களைப் போய் ஒரு குமர்பிள்ளைக்கு...."

"அட அதைச் சொல்லுறியோ...? எனக்கு அது இதெல்லாம் தேவையில்லை. உன்ரை சம்மதம் மட்டும்தான் வேணும்."

"அப்பிடி எண்டால் என்ன மருந்து



கிருந்து...." சொல்லிவிட்டு அழகாய்ச் சிரித்தாள் பிரவீனா.

தன் அன்பான மனைவியைக் கட்டிக் கொண்டான் ரகு. அன்பாய் முத்தமிட்டான். "எனக்குத் தெரியாது பிரவீனா. என்னில் சபலத்தை உண்டாக்கியவள் நீதானே. இதை நீ ஒப்புக் கொள்ளத்தான் வேணும் ஓ.." ரகு சிரிக்க பிரவீனா ரகுவின் மடியில் சாய்ந்தாள். ரகு பிரவீனா மீது உயிரையே வைத்திருந் தான். இன்னும் அது மாறவில்லை. பிரவீனா வும் ரகுவோடு என்னவாய் பிரியம். ஆனால் இந்த கீதா ரகுவின் உள்ளத்தில் அத்துமீறி நுழைந்து கொண்ட அலங்காரத் தேர். ரகுவிலும் பார்க்க பிரவீனாவுக்குத்தான் கீதா மீது அளவற்ற பிடிப்பு, அன்பான பாசம், மாறாத பிணைப்பு எல்லாம். கீதாவிற்கு வயது இருபது. பிரவீனாவிற்கு இருபத்தினான்கு.

ரகுவும் பிரவீனாவும் திருமணம் முடித்து தனிக்குடித்தனம் போக ஆயத்தமான போது வாடகை வீடு தேடும்படலம் ஆரம்பமானது. ஒரு திருமணத்தை ஒப்பேற்றி விடலாம். ஆனால் இந்தக் காலத்தில் வாடகை வீடு தேடுவதை விட்டுவிட்டு..

கீதாவின் அப்பா ஒரு ஆங்கில ஆசிரியர். அவரோடு போய் ரகு பேசினான். அவருக் கும் ரகுவைப் பிடித்துவிட்டது. பிரவீனாவிற்கு அந்தப் பழைய வீடாவது கிடைத்ததே என்று மனம் நிறைய மகிழ்ச்சி.

வீட்டுக்கு வந்த ஆரம்பத்தில் கீத் இடைக் கிடை வருவாள், பிரவீனாவோடு பேசுவாள். அந்தவீடு கீதாவின் அப்பம்மாவினுடையது. பழங்கால மண் வீடு. கீதாவின் வீட்டோடு ஒட்டிய ஒரு பகுதி.

முதலில் கதைப்புத்தகங்கள், தினமுரசு பரிமாற்றம். பின்னர் அத்துமீறி ரகுவின் அலுமாரியை உறவில்லாத உறவோடு திறந்து கிண்டி அலைக்கழித்து அவனின் புத்தகங்கள் அவனின் கவிதைகள், கதைகள் என்றெல் லாம் எடுத்துப்போய் விடுவாள். மாலையில் வேலை விட்டு வரும்போது எல்லாம் கிண்டி வைத்திருப்பாள். கோபம் வரும் அவனுக்கு.

"கீத்... என்ன இது?"

"அதுகளா அதுகள் புத்தகம்... தினமுரசு..., பேப்பர்..."

"அதை யார் உன்னிடம் கேட்டது?"

"அப்ப..." நெற்றியில் படியும் முடியை வலது கையால் சரிப்படுத்துவாள்.

"தலை!" சிரிப்பாள். "தலை எல்லாம் கடதாசிகளா...?"

"அம்மாடியோவ்.. என்ர தலையில்லை. எல்லாம் உங்கடைதான்" அவன் தலையில் குட்டுவதற்கு ஓடுவான். அவள் விர்ரென்று வாயை நெளித்துக்காட்டிவிட்டு ஓடிவிடு வாள். அவள் என்ன செய்தாலும் பிரவீனா ஒன்றும் சொல்லமாட்டாள். பிரவீனா-கீத் உறவு வலுப்பெற்றுக்கொண்டே போனது. சில நேரம் கீதாவின் அப்பா சொல்வார்: "கீத்தையும் பிரவீனாவையும் கலியாணம் செய்து வையுங்கடி...."

ஒரே அறையில் உட்காருவது. ஒன்றாக உண்பது. ஒன்றாகச் சேர்ந்து கதைப்பது. பாடசாலையில் கூட்டாளிப் பெண்பிள்ளை களோடு பேசும் எல்லாக் கொச்சைக் கேலிகளையும் மாலையில் வந்து பிரவீனா விடம் சொல்லி கெக்கட்டம் போட்டுச் சிரிக்காவிட்டால் அவளுக்கு விடியாது... கீதா என்ன சொன்னாலும் எல்லாவற்றையும் ரகுவிடம் ஒப்படைப்பாள் பிரவீனா.

எல்லாம்... எல்லாமே... ரகு குளிக்கும் போது அவனது உடம்பழகை ஒளிந்திருந்து பார்த்தது; ரகு சிரிக்கும் போது அழகாக இருக்கும் என்று சொன்னது; ரகுவின் பத்திரிகைக் கவிதைகள், கதைகள் எல்லா வற்றையும் ஒன்றுவிடாது கத்தரித்து அழகாக ஒரு சீ.ஆர் புத்தகத்தில் ஒட்டி வைத்து தினம் தினம் ஆசையாய் பார்ப்பது; ரகுவைப் பற்றி தனது நண்பிகளிடத்திலும் புகழுவது. ஒருமுறை இரண்டு முறை அவனின் மோட்டார் சைக்கிளில் யாருக்கும் தெரியாமல் போனது... ரகுவின் உள்ளத்தில் கீத் ஒரு ஆசைப்புயல்.

❤ ❤ ❤

"எனக்கென்றால் இரண்டாம் கலி யாணம் முடிக்கிறவங்களைக் கண் கொண்டு காட்டேலாது..." வெறுப்பை உமிழ்ந்தவள் அவள். ஆனால் ரகு என்றவுடன் சம்மதித்து விட்டாள். அப்பாவுக்குத் தெரியாமல் கீத்தை இழக்க முடியாத பிரவீனாவின் சம்மதத் தோடு ரகு கீதாவிற்கும் உரிமையாளனாகி விட்டான். ஆரம்பத்தில் கீதாவின் அப்பா அதிர்ந்துதான் போனார். பின்னர் எல்லாம் முடிந்துவிட அரைச்சம்மதத்தோடு ஊர் வாய்க்குப் பயந்து தொடர்புகளை கழட்டி விட்டது போல் காட்டிக் கொண்டார்.

ஆனால் கொழும்புக்குப் போனால் கீதாவையும், பிரவீனாவையும் ரகுவையும் பார்த்து விட்டுத்தான் வருவார். பிரவீனா விற்கு இப்போதுதான் ஏழுமாதம் வயிற்றில். பிரவீனாவைவிட கீதாவின் அழகு அவனுக்கு அவளையே அடிக்கடி சுற்றி வரச் செய் தது. இது இப்பொழுது கொஞ்சம் பிரவீனா வின் உள்ளத்தில் ஒரு கரும்புள்ளியை வைத்துவிட்டு மறைந்து கொண்டது. பெரி தாய் பாதிப்பு ஒன்றுமில்லை.

"ரகு என்னது? என்னையும் கொஞ்சம் கவனியுங்களேன்!" வேலை விட்டு வந்தவ னிடம் பிரவீனா சொன்னது அவனுக்குப் பிடிக்கவில்லை.

"இப்ப என்ன தான் உனக்கு குறை வைச்சன்?"

"ஏனோ தெரியாது என்னை விட்டுட்டு நீங்க தூரப் போறமாதிரி இருக்கு ரகு"

"உனக்குப் பைத்தியம். இப்ப என்ன உனக்குப் பிடிச்சிருக்கு?"

"ஓ.. எனக்குப் பைத்தியம்தான். இரண்டு முறை அவளை மோட்டர் சைக்கிளிலை கூட்டிக் கொண்டு போனனீங்கள். எனக்கு தலை சுத்தி... வாந்தி எடுத்து... இஞ்சை நான் தனிய..."

"கொஞ்சம் என்ரை சந்தோஷத்துக்கும் அனுமதியேன். பகல் முழுக்க ஒஃபிஸிலை வேலை. கொஞ்சம் காத்து வாங்க அனு மதியேன்!"

"உங்களை ஆர் வேண்டாமெண்டது! அவளின்ரை அழகில அப்பிடியே அமுங் கிப் போகாமல்..."

"ஏன் நான் அவளின்ரை அழகை ரசிக்கக் கூடாதா?"

"ரசியுங்க ஆனால் ஓவரா..."

"எனக்குப் புத்தி சொல்ல வாறியா...?" வந்த வேகத்தில் அறை விழுந்தது. பிரவீனா வாயை மூடினாள். அவளின் உள்ளத்தின் மாற்றத்தை- கீதாவோடு பொறாமைப்படு வதை அவனால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை.

❧ ❧ ❧

இப்பொழுது தொட்டது பட்டதுக் கெல்லாம் பிரவீனா சண்டை பிடிக்க ஆரம்பித்துவிட்டாள், ரகு ஆரம்பத்தில் நினைத்தான்- இரண்டு திருமணம் செய்தால் தனக்கு வசதியாக இருக்கும் என்று. பணி விடை, தேவைகள், அன்பு இவைகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் பொறாமை யின் காரணமாக குறையத் தொடங்கின. இருந்த நிம்மதியும் இல்லாமல் போனது... பிரவீனா மாறிப் போயிருந்தாள். கீதாவிற்கு தடுமாற்றம். கீதாவிற்கு ரகுவை விட விருப்ப மில்லை. அவன் மீது அவள் உயிரையே வைத்திருந்தாள், ரகுவிற்கு பிரவீனா மீது வர வர வெறுப்புத்தான் ஏற்பட்டது. அவள் அவனை உதாசீனம் செய்யத் தொடங்கினாள்.

ஆரம்பத்தில் என்ன அன்பு.... என்ன அன்னியோன்யம்..... என்ன பரிவு-அவை யெல்லாம் இப்போது எங்கே போயின...? என் பிரவீனாவா அது? ரகு இடைக்கிடை சிந்திப்பான். விடைகிடைக்கவில்லை. இரண்டு பேரோடும் இன்பமாக வாழுவோம் என்று கனவு கண்டவன் எல்லாம் உடைந்துபோன காகிதக் கப்பலாகி...

இப்படியே போனால் நஞ்சு கிஞ்சு குடித்துத்தான் உயிரை விடவேண்டும் போல இருந்தது. ரகுவிற்கும் பிரவீனாவிற்கும் இடையில் உள்ள சண்டை பொறுக்க முடியாமல் கீதா தனது தகப்பன் வீட்டிற்குப் போய்விட்டாள்.

ரகு கீதாவை அவளின் வீட்டிற்குப் போய் பார்த்து விட்டு வருவான். அவளோடு வாழ்ந்த காலங்கள் பசுமையானவை. இனிமையானவை. பிரவீனாவும் அன்பாகத் தானே இருந்தாள். மனம் நிறைய விரக்தி.

ரகு பாஸ்போட்டையும் எடுத்துக் கொண்டு இந்தியா விசா அலுவலகத்திற்குப் போனான். 'பிரிய வேண்டும்! இல்லாவிட்டால் என்க்குப் பைத்தியம் பிடித்துவிடும்' நினைத்த வன் வேறுவழியில்லாமல் யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டு வெளியாகினான்.

"இரண்டாவது வானம் கறுப்பு" ●

# நியதி

ஆத்மராஜா றூத் சந்திரிக்கா

> "நேசம் என்பது சந்தோசத்தை மட்டும் பகிர்ந்து கொள்வதில்லை. கஷ்டங்களையும் பகிர்ந்து கொள்வது."

சிலுசிலுவென்று காற்று முகத்தில் அறைந்தது. இறப்பர் மரங்கள் நிரைப் படுத்தப்பட்ட பசுமையான சூழல். தனிமை விரும்பிகளின் தபோவனமாய், படிக்கும் பிள்ளைகளின் சொர்க்கபுரியாய் பரிணமித்தது 'சுபோதி'. வெல்வெற் மொசுமொசுப்பில் பஞ்சுப் பாதம் பதிந்து பதிந்து மேலெழும்



போது எழுந்த கொலுசின் அதிர்வில் தலை உயர்த்திப் பார்த்தாள் துளசி. நெஞ்சுக்குள் பிரபஞ்சம் குலுங்கியது-எதிரே ப்ரியங்கா சோகத்திலும் பளீரென ஒரு மோகனப் புன்னகை மின்னி மறைந்தது ப்ரியங்காவில். துளசி மனதில் வேதனைச்சுமை.

இலக்கியக் கதாபாத்திரங்களின் உணர்ச் சிகளை, உருக்கங்களைப் புரிந்து உருகி யுருகிப் போகும் அண்ணனுக்கு... காவியங் களைச் சிருஷ்டிக்கும் அண்ணனுக்கு நிஜ உணர்ச்சிகளை- உருக்கங்களைப் புரிந்து கொள்ள முடியாமல் போனது பரிதாபம் என்று பட்டது துளசிக்கு. அடுப்புக்குள் தணலாய் கோபம் உள்ளே கனன்றது. அண்ணன் என்பதற்காகச் செய்யும் அநியா யங்களையெல்லாம் சகித்துக்கொள்ள வேண் டும் என்பது அவளளவில் ஏற்றுக் கொள்ளக் கூடிய சமாச்சாரமுமல்ல; அது நியாயமு மல்ல- உள் மனது அடித்துச் சொன்னது.

"துளசி... ஏன் மௌனமாயிட்டே..."

"பேசுறதுக்கு எனக்குள் தைரியமும் தகுதியும் இல்லண்ணு நினைக்கிறன் ப்ரியங்கா.."

"நிகழ்காலத்துக்கு வருவோம் துளசி"

"இறந்த காலத்தின் சுவடுகள் அழிக்கப் படாமல் இருக்கிறப்போ இயல்புக்கு எப்பிடி வரமுடியும்! ஒரு சராசரி மனுஷனுக்கு சகோதரமாய் பிறந்திருந்தால் நான் நேர்நின்று பேசலாம். இந்த நிலமைல சந்திக்கிறப்போ எவ்வளவு குற்றவுணர்வு குபீரிடுது- கையா லாகாத்தனத்தோட நிற்கவேண்டியிருக்கு உன் முன்னாடி....!"

"பழசை மறப்போம்-புதிதாய் சிந்திப் போம் துளசி." இருவரும் சமாந்தரமாய் நடந்து ரிசப்ஷனுக்கு வந்தார்கள். 'வெல்கம்' போட் தாண்டி உள் இறங்கினார்கள். ஆறு வயதில் ஒரு பையன் குதித்தோடிவந்து பிரியங்காவை இறுக்கியணைத்து "அம்மா" என்றான். துளசி ஸ்தம்பித்துப் போனாள். அண்ணன்.... வித்தியண்ணனின் அதே பிரதியாய் ப்ரியங்கா அணைப்பில் குழந்தை புரண்டது. "இது யார் தெரியுமா துளசி..? யார் சாயல்ல இருக்கு இந்த ஷெமின் வித்யாசாகர்" என்றாள் ப்ரியங்கா சிரித்துக் கொண்டே. "ஓ... குழந்தைகூட..." அலறியே விட்டாள் துளசி.

"ஷெமின் இது யார் தெரியுமா..? உங்க அப்பாட சிஸ்டர் ஜவ்னால இருந்து வந் திருக்கா..."

ஓ... அப்பா வரல்லையா ஆன்ரி" அதிர்ந்தாள்.

"அப்பாவ யவ்னால இருந்து வர பெமிஷன் குடுக்கமாட்டாங்களா...? நீங்க போறப்போ என்னையும் கூட்டிப் போவீங் களா...? ப்ளீஸ்... எனக்கு அப்பாவப் பார்க்க நல்ல விருப்பம். அம்மாதான் விட மாட்டேங்கிறா.." துளசியின் கரங்களைப் பிடித்துக் கெஞ்சியது குழந்தை- வார்த்தைகள் வெளிவராமல் திணறிப்போனாள் துளசி.

அவள் அண்ணன் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் இருந்தபோது ப்ரியங்காவை அறிமுகப்படுத்தியிருந்தான் அவளுக்கு. அவர்கள் ஸ்நேகம் பற்றிப் புரிந்திருந்தாள். யுத்தத்தில் சிதறிய உறவுகள் போல அவர்களும் துருவமாகிப் போனார்கள்.

வடக்கிற்கும் இதர பகுதிகளுக்கும் தொடர்பறுந்து போன தொண்ணூறுகளில் ப்ரியங்கா தொடர்பு கொள்ள முயற்சித்து தோல்வி கண்டாள். எதேச்சையாக கொழும் பில் ஒரு நாள் துளசியைச் சந்தித்தபோது அழுதே விட்டாள். தீர்மானத்தோடு ப்ரியங்கா வின் பிரதிநிதியாய் அண்ணனிடம் நீதி கேட்கப் போனபோது அடியும் உதையுமே பெறுதியானது. துளசி வெகுண்டாள். 'ஆணின் அதிரடித் தாக்குதலுக்கு அடி பணிந்து அநியாயத்திற்குத் துணைபோகக் கூடாதென' வெகுண்டெழுந்தும் பக்கபல மில்லாமல் மௌனமாக்கப்பட்டாள்.

நாட்கள் நழுவ அண்ணன் வலிகாமத்துக் குள்ளே ஒரு இருபது லெட்சங்களுக்கு விலைப்பட்டுப் போனான். கலைந்தாள் துளசி.

காலம் மிக மோசமான அவலங்களை தோற்றுவித்துவிட்டிருக்கிறது.

குழந்தையில்லாமல் கண்ணீரும் புலம்பலுமாய் அண்ணி..

பிறந்த குழந்தைக்கு தந்தை முகம் காட்டாமல் அவமானமாய் ப்ரியங்கா...

வாரிசு இல்லாத கலக்கத்தில் அண்ணன்...

தந்தையைக் காணாத ஏக்கத்தில் பிள்ளை...

"எத்தனை முரண்பாடான நிகழ்வுகள். 'எப்போ ஜவ்னா போறாய் துளசி?" "நானும் வாறன் கூட்டிப்போவீங்களா அப்பாவப் பார்க்க?" குழந்தை கேட்க திகீரிட்டது. என்னவென்று குழந்தையை அறிமுகப்படுத் துவது..? சிந்தித்தாள். "இல்ல ஷெமின். சின்னப்பிள்ளையள அங்கு போகவிடமாட் டாங்கள்... அப்பாவ இஞ்சை அனுப்புவன்."

"ப்ரொமிஸ்"

"ப்ரொமிஸ்" ஷெமின் குதூகலித்தான்.

துளசியின் வேதனை அதிகரிக்க விழிகள் குபீரிட்டன. "ஏய் துளசி.. வித்திக்கு ஏதும் நடந்திட்டுதோ? ம்..சொல்லும் சொல்லு மனப்பா!" ப்ரியங்கா உலுக்கினாள்.

"அண்ணை பொறி வெடியில பட்டு ரெண்டு காலும் கழற்றியாச்சு-அண்ணைக்கு நடமாட ஏலாது இப்போ!" ஓவென அழுதாள் அரண்டாள்.

"உன் கவலைகளோடு இது வேறு..." என்ற துளசியின் வாய் பொத்தினாள். "நேசம்கிறது சந்தோஷத்தை மட்டும் பகிர்ந்து கொள்வதில்ல துளசி; கஷ்டங்களையும் பகிர்ந்துக்கிறது!"

துளசி வியந்தாள். 'எப்பேர்ப்பட்ட பெண்ணிவள்? தன் வாழ்வே சூன்யமான நிலையிலும்-அதற்குக் காரணமானவனுக்காய் அழுது அரண்டு கொள்கிறாள்.' ●

# தாய்க்குத் தெரியாத உண்மை

-ரூபராணி-

> நாராயணன் கடை முன்பாக அந்த ஜீப் போய் நின்றது. அது ஒரு இராணுவ ஜீப்.......



அமைதியாக இருந்த சுற்றுப்புறம் அந்த ஜீப்பின் வருகையால் அலைக்கழிக்கப்பட்டது. வீட்டுக்குள்ளிருந்து தலைவிரிகோலமாய் ஓடி வந்த தெய்வானை வாசல்கதவை அவசர அவசரமாகத் திறந்தாள். அரிக்கன்லாம்பு ஒன்றைக் கையில் பிடித்திருந்தாள்.

என்னவோ ஏதோ என்று அண்டை அயலவர்கள் படபடத்து நடுங்கிய இராத்திரி வேளை; தெய்வானை எதுவித பதட்டமும் இன்றிக் காணப்பட்டாள். அவள் கண்களில் ஆவல் பளிச்சிட்டது, அந்த ஜீப் தன்னுடைய வாசலில் வந்து நிற்கும் என்று எண்ணிய தெய்வானைக்கு ஏமாற்றம் முகத்தில் பரவியது.

எல்லாவீடுகளும் உறங்கிப் போயின. தெருவின் மறுமுனையில் நாராயணனின் டீக்கடை சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டி ருந்தது. இந்தக்கடை அந்தத் தெருவில் பிரசித்தம். நள்ளிரவுவரை புட்டு, இடியப்பம். என்று டீயோடு சேர்த்து விற்பான். அவனுடைய இறைச்சிப்பிரட்டலுக்குத் தனிமவுசு. நாராயண னின் பழைய கிறமபோண், பராசக்திப் படப் பாடல்களைத் திரும்பத் திரும்பப் பாடிக் கொண்டே இருக்கும்.

தெய்வானை வீதிமுனைவரை பார்வை யால் நோட்டம் விட்டாள். நாராயணன் கடைமுன்னால் அந்த ஜீப் போய் நின்றிருந்தது. அது ஒரு இராணுவஜீப். தெய்வானை, வாசல் கதவைச் சாத்தக்கூட மறந்தாள். அரிக்கன் லாம்பை மேசையில் வைத்தவள் தரையில் உட்கார்ந்து சுவரில் மாட்டியிருந்த படத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்தாள். சல்வாரிக் கமிசில் சுந்தரி சிரித்துக்கொண்டிருந்தாள். தெய்வானை தன் முகத்தை முந்தானையால் மூடிக்கொண்டு அழுதாள். "சுந்தரி, நீ ஏம்மா படிக்க ஆசைப்பட்டாய்?" என்று புலம்பினாள்.

சுந்தரி தெய்வானையின் ஒரே பெண். நடுத்தரக்குடும்பம். மத்திய கிழக்கில் அவள் அப்பா ஆறுமுகம் வேலைக்குச் சேர்ந்து மூன்று மாதங்கள்தான். ரஷ்யா நடத்தும் புலமைப் பரிசில் பரீட்சை ஒன்றுக்கு சுந்தரி தெரிவாகியிருந்தாள். தெய்வானையின் மனதுக் குள் மத்தாப்பு. சுந்தரியின் கெட்டித்தனத்தைத் தனக்குள்ளே வியந்தாள்.

இடியப்பமும் இறால்வறையும் சுந்தரிக்குப் பிடிக்கும். தெய்வானை அதைத் தயார் செய்து கொடுத்தாள். அதுவே தன் மகளுக்கு தான் கொடுக்கும் கடைசிச் சாப்பாடு என்பதை அந்தத் தாய் அறிந்திருக்கவில்லை.

தன் நண்பிகளுடன் கொழும்பு நோக்கிப் புறப்பட்ட சுந்தரி பரீட்சையை எழுதிவிட்டு வீடு நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந் தாள். வழிநெடுகத் தன் எதிர்காலக் கற்பனையில் மிதந்து மகிழ்ந்திருந்தாள்.

சோதனை முகாம் ஒன்றில் பஸ்குலுங்கித் தரித்ததும் சுந்தரி சுய நினைவுக்கு வந்தாள். முண்டாசு கட்டிய இராணுவம் தன் சோத னையை முடுக்கி விட்டது. பதட்டத்துடன் எல்லோரும் இறக்கப்பட்டனர். பல பேருடன் வந்த பஸ் சிலபேருடன் புறப்பட்டது. தடுத்து நிறுத்தப்பட்டவர்களுள் சுந்தரியும் ஒருத்தி. அவளுடைய நண்பிகள் யாரும் அகப்பட வில்லை.

தெய்வானை வாசலில் விழிவைத்து நின்றாள் சுந்தரி வருவாளென்று. அவள் நண்பிகள் கொண்டு வந்த செய்தி "சுந்தரி இறக்கப்பட்டாள்" என்பதுதான். இடி விழுந்த மரமாகிப்போனாள் தெய்வானை. அழுதழுது அவள் கண்களில் நீர் வற்றி விட்டது. நாட்கள் மாதங்களாகி வருஷங்கள் மூன்றைக்கடந்து விட்டன. சுந்தரி எங்காவது ஒரு முகாமில் இருப்பாள் என்ற நப்பாசை, தெய்வானைக்கு. என்றைக்காவது இராணுவம் தன் மகளைத் தருமோ என்ற அங்கலாய்ப்பு. சுந்தரி விடுதலை பெற்று வீட்டுக்கு ஒரு நாள்... ஜீப்பிலோ பஸ்ஸிலோ வருவாள் என்று காத்திருக்கிறாள் தெய்வானை. அவளைப் பைத்தியமாகப் பார்க்கும் ஊரவர்களுக்கு மட்டுந்தான் தெரியும் "சுந்தரி உயிருடன் இல்லை" என்ற உண்மை.


படிப்பகம்

www.padippakam.com



# ஒரும் கண்கள்

**தருவது ரசிகன்**

முரசு அதிர்ந்தது! முகம் மலர்ந்தது!
முகத்தில் திரண்டிருந்த மீசை துடித்தது.
சிரசு நிமிர துள்ளியெழுந்தான்
அகத்தில் வீரம் கொப்பளித்தது!

போர் உடைபூண்டு, உறைவாள் அணிந்து
பார் போற்றும் வீர நடையுடன் கிளம்ப,
கார்மேகக் கூந்தல் அலையாய் புரள
தேர்போல அசைந்து தேவி குறுக்கிட்டாள்!

கட்டழகு அவிழாத பெட்டகம்.
வட்டநிலா போன்ற முகச் சித்திரம்.
முட்டவந்து அழகிரண்டும் மோகனம்.
கிட்டவந்தால் ஆசைவரும் சத்தியம்.

செம்பவள இதழிரண்டும் தேன்குடம்.
பெண் அவளோ போதையதன் இருப்பிடம்
தாங்கிக்கொள்ள, தழுவிக்கொள்ள தத்தரிகிடதோம்!
ஏங்கிக்கொண்ட நெஞ்சுக்குள் தீக் குடம்!

வாழைத்தண்டு காலிரண்டும் வாகனம்,
குத்துகின்ற விழியிரண்டும் ஆயுதம்;
சிந்தும் நகைமினிலே ஓராயிரம் காவியம்;
வாழவைக்கும் அன்புக்கு சாட்சியம்!

போருக்குப் புறப்பட்டவன் குறுக்கே வந்த
தேருக்குள் மனதை தொலைத்துவிட்டான்!
வாளுக்கு கூர் பார்க்க வேண்டியவன்-அவள்
தோளுக்கு உவமை தேடிக்கொண்டிருந்தான்.

பகைவனை குறிபார்க்கும் விழிகள்
பாவையின் நயம் பார்த்துக்கொண்டிருப்பதா?
படைகளத்தில் பாய்ந்து பந்தாடவேண்டியவன்
பாவையின் அழகைப் பருகிக் கொண்டிருப்பதா?

குத்தவரும் வேலோடு விளையாடும் கரங்கள்
குத்துமோ எழில்கள் என்று குறுகுறுப்பதா?
நினைவுகளை துரத்தினான். நிமிர்ந்து நடந்தான்.
கனவுகள் வேண்டாம். களம் அழைக்கிறது!

"நில்லுங்கள்" என்றாள் நேரிழையாள்.
கொஞ்சும் இதழால் நழுவும் தமிழும்
வாசத்தோடுதானே வந்து தழுவுகிறது!
'மீண்டும் உவமையா? போ, போய்விடு!'

"என்ன?" என்பதுபோல் புருவம் விரித்தான்.
குத்தும் விழிகளில் இருந்து கொட்டியது மழை.
கடமையைத் தடுக்க கண்ணீர் அணை!
கட்டுப்படுவதில்லை என்ற முடிவு பிறந்தது!

விம்மிக்கொண்டிருந்தது வெண்ணிலா.
விடுபடத்துடித்தான் வீரக் காளை!
"போதும் நிறுத்து, போருக்கோ மறுப்பு?
வீர உலாவுக்கு வாழ்த்தியனுப்பு
ஈரவிழிகளை முதலில் உலர்த்து!"

நிலவின் முகத்தில் நீர்த்தடாகம்.
"எப்படி முடியும்" என்றவள் உதடு துடித்தது.

"அன்னைநாடு அழைக்கும்போது
நான் அதன் மைந்தன் எப்படி மறுப்பது?
போருக்கு பயந்த பேடியாய் கிடந்து
புற்றுக்குள் புகுந்த பாம்பெனப் பகைவர்
நற்றமிழ் மண்ணில் நடமாட விடுவதோ?"

"எப்படியத்தான் என் நிலை சொல்ல,
உயிரைப்பிரிந்து உடல் நிலைக்குமோ?
உங்களைப்பிரிந்து என் ஆவி இருக்குமோ?
திங்களைப் பிரிந்த வானம் போல
தங்களைப் பிரிந்தால் என் மனம் இருளும்!"

"காதல் பெரிதா, கடமை பெரிதா?
வினாவை வீசினால் என் விடை என்ன?
காதலும் வீரமும் இரண்டு கண்கள்.
வீரம் இல்லாத காதலும் பொய்யே!
காதல் இல்லாத வீரமும் பொய்யே!"

"புரிகிறது அத்தான் அனைத்தும் மெய்தான்!
என் நெஞ்சில் எரியும் வேதனைத் தீயில்
உங்கள் பிரிவு நெய்யாய் பெய்யும்!
உங்களைவிட்டால் யாருண்டு எனக்கு?
உயிரும் நீரே, உறவும் நீரே,
உணர்வும் நீரே, ஒளியும் நீரே!"

"சாவும்-வாழ்வும் ஒன்றெனக் கருதும்
சாதிதமானே வீரர் வாழ்க்கை.
இரவும், பகலும் எப்படி மெய்யோ,
அதுபோல்தானே சாவும் வாழ்வும்!"

"அய்யோ......அத்தான் இதென்ன வார்த்தை?
சமர்க்களம் செல்கையில் அமங்கலம் ஏனோ?
ஒன்று சொல்வேன், உறுதியான வார்த்தை;
என்று நீர் இல்லையோ
அன்று நான் பூமியில் பட்டமரமாய் வீழ்வேன்!"

"பேதையைப் போல பிதற்றல் வேண்டாம்.
முல்லைக்கொடி நீ, முத்துச்சரம் நீ.
பிணமாய் களத்தில் நான் வீழ்ந்தாலும்
மணம் வீசும் மலராய் நீ வாழ வேண்டும்!"

"கனவிலும் அப்படி நினைப்பு வேண்டாம்.
தணலோ, புனலோ எதனைக் கடப்பினும்
திருவே உருவே உன்னோடு வருவேன்.
துணையாய் நீவிர் இல்லாது போனால்
முறிந்த பனையாய் என் கதை முடியும்!"

"காதல் பித்தில் சித்தம் கெட்டதோ?"

"பித்தல்ல அத்தான், உம்மீது பற்று.
பஞ்சில் பட்ட நெருப்புப்போல
உம்மீது சூழ்ந்த நிகரற்ற பற்று!"

"வாள் என் காதலி, போர் என் தோழன்
இந்த வாழ்க்கையில் நீ ஒரு சுமையடி!"

"மலருக்கு வண்டு சுமையாவதுண்டோ.
மனதுக்கு காதலும் அப்படித்தானே!"

"போதும் நிறுத்து!
போய்வர விடைகொடு!"

"கேட்பதைத் தந்தால்
புண்பட்ட நெஞ்சம் சற்றே ஆறும்!"

"கொடுக்க முடிந்தால்
மறுப்பு இருக்காது!"

"ஒரே ஒரு முத்தம்!
உயிரை அள்ளிப் பருக ஆசை!"

# இலக்கிய நயம்

"சித்தம் இனிக்க முத்தம் தரும்
சூழ்நிலை இதுவல்ல!
உன்னைக் கட்டிக்கொள்ளும்
ஒரு காலம் வந்தால்
நிச்சயம் நீ கேட்டது கிடைக்கும்!"

மறுத்தான்-விரைந்தான்-
பார்வையிலிருந்து மறைந்து போனான்.

என்ன மனிதர்? வெறுப்பாய் இருந்தது.
கல்லோ மனம்? விரக்தியாய் இருந்தது.
எல்லாம் கொஞ்ச நேரம்தான்.
மீண்டும் மனது அவனை நினைத்தது.
கண்கள் வழிமேல் சென்று நிலைத்தன.
வருவான் என்று காத்திருந்தன.

மனமும், கண்களும்
வெறுத்தவர் பின்னால் ஓடுவதென்ன?
கண்கள் பொருந்த மறுப்பது என்ன?
வினா மனதில் விதையாய் விழுந்தது.

திருக்குறள் அதற்கு
பதிலாய் அமைந்தது.

"பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணாது அமையல கண்."
குறள்-1283- அதிகாரம்-129.

# சிந்தியா பதில்கள்

✉ திடீர் விலைவாசி அதிகரிப்புக்கள் தொடரும் அபாயம் உண்டா?

கலைநேசன் ஜவாத், புத்தளம்.

சேச்சே அபாயம் எல்லாம் கிடையாது. சர்வசாதாரணமாகத் தொடரும் சமாச்சாரத்தை போய் அபாயம் எனலாமா ஜவாத்?

○◆●

✉ இலங்கைதான் ஒலிம்பிக்கில் ஒரு பதக்கமும் எடுக்கவில்லை. இந்தியா ஒரு பதக்கம் எடுத்ததே. அதை ஏன் கடந்தவாரம் மறந்து போனீர்?

கே. திவாகரன், திருக்கோணமலை.

பதக்கம் என்றவுடன் தங்கம் என்று நினைத்துக்கொண்டு பதில் சொல்லிவிட்டேன். வெண்கலம் ஒன்று இந்தியாவுக்கு கிடைத்தது. தவறுக்கு மன்னிக்கவும்.

○◆●

✉ டியர் சிந்தியா! இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்களின் ஆட்டம் எப்படி?

ந. மல்லிகாதேவி, முன்னேஸ்வரம்.

கடந்தகால தோல்விகளில் இருந்து சுதாகரித்துக்கொண்டு சுறுசுறுப்பாக எழுந்திருக்கிறார்கள். அடுத்த உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்து அணி ஒரு சவாலான அணியாக மாறும் சாத்தியம் உண்டு.

○◆●

✉ சிந்தியா! புலிகளின் தலைவர் பிரபாகரனின் பலம் என்ன? பலவீனம் என்ன?

எம். றபியுல்தீன், பாலாவி.

வளைந்து கொடாமை, பலமும் அதுதான் பலவீனமும் அதுதான் என்று நினைக்கிறேன்.

○◆●

✉ சிலர் நமக்காக உயிரையும் கொடுப்போம் என்கிறார்கள். பின்னர் நமக்கொரு கஷ்டம் வந்தால் ஓடி ஒளிகிறார்கள். உண்மையான விசுவாசிகளை எப்படிக் கண்டுபிடிப்பது?

ஜெ. செல்வநாதன், மட்டக்களப்பு.

ஒரு சாமியாரிடம் மூன்று சிஷ்யர்கள் இருந்தார்கள். மூன்று பேரிலும் தனக்கு நம்பிக்கையான சிஷ்யன் யார் என்று கண்டறிய ஒரு பரீட்சை நடத்தினார் சாமியார்.

"உன்னுடைய தாடியும், என்னுடைய தாடியும் ஒரே நேரத்தில் நெருப்புப் பிடித்தால் எதை முதலில் அணைப்பாய்?" என்று கேட்டார் சாமியார்.

முதலாவது சிஷ்யன் சொன்னான்; "சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். என்னுடைய தாடி நெருப்பை அணைத்துவிட்டு, பின்னர் உங்கள் தாடி நெருப்பை அணைப்பேன்."

இரண்டாவது சிஷ்யன்: "சாமியாரே! உங்கள் தாடி நெருப்பை அணைப்பதுதான் எனது முதல் கடமை" என்றான்.

மூன்றாவது சிஷ்யன் முன்னே வந்தான். "நான் என்னுடைய ஒரு கையால் என் தாடியையும், மற்றொரு கையால் உங்கள் தாடி நெருப்பையும் அணைப்பேன்." என்றான்.

மூன்றாவது சிஷ்யன்தான் உண்மையானவன் என்று தனது வாரிசாக்கிக்கொண்டார் சாமியார். நடைமுறைச் சாத்தியமில்லாமல் பேசுகிறவர்களை நம்பக்கூடாது.

○◆●

✉ டியர் சிந்தியா! கார்லோஸை வைத்துச் சொல்லும், மீசைக்கும் ஆண்மைக்கும் சம்பந்தம் உண்டா?

வி.நிசாத் முஹமட், கொழும்பு.

மீசைக்கும் உதட்டுக்கும்தான் சம்பந்தம் இருக்கிறது. இன்னொரு விஷயம், மீசையின் பலா பலன்கள்கூட ஆண்களுக்கு மட்டும்தான் தெரியும் என்பதுமில்லை.

○◆●

✉ எதற்கெடுத்தாலும் எரிந்துவிழும் ஆண்களை திருத்துவது எப்படி?

எஸ். மாதவி, நுவரெலியா.

மனைவி செலவுக்கு பணம் கேட்கும்போதெல்லாம் எரிந்துவிழும் கணவனை எப்படி வாயடைக்கச் செய்யலாம் என்று யோசித்தாள் ஒரு மனைவி. ஐடியாவும் கிடைத்தது. "கடைத்தெருவுக்கு செல்ல வேண்டும், பணம் வேண்டும்" என்றாள் மனைவி.

"எப்போது பார்த்தாலும் பணம்தான். பணம், பணம், பணம். இங்கே பாரடி, உனக்குப் பணத்தைவிட புத்திதான் அதிகம் தேவைப்படுகிறது" என்று சத்தம் போட்டான் கணவன்.

மனைவி நிதானமாகப் பதில் சொன்னாள்: "உண்மைதான். ஆனால் உங்களிடம் எது அதிகமாக இருக்கிறதோ, அதைத்தானே நான் கேட்கவேண்டும்."

○◆●

✉ அறிவிப்புப் பலகைகளில் விஷமம் செய்பவர்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? தவறான காரியம்தானே?

சி.புஸ்பகுமார், நீர்கொழும்பு.

தவறுதான். சில வேடிக்கைகளை ரசித்தும் தொலைக்க முடிகிறதே. ஒரு சேர்ச் ஒன்றில் அதன் முன்பகுதியில் ஒரு அறிவிப்பு இப்படி இருந்தது.

"பாவம் செய்வதில் அலுப்பு தோன்றினால் உள்ளே வருக."

அதன்கீழே ஒரு குறும்புக்காரன் இப்படி எழுதினான்;

"பாவம் செய்வதில் அலுப்பு தோன்றாவிட்டால் வரவேண்டிய முகவரி: நீலா 10, ஜி.பி.ரோடு."

○◆●

✉ ஒரு பெண்ணை மனதாரக் காதலித்து அதை அவளிடம் கூறாமல் இருந்தால் கடைசியில் என்ன நிகழும்?

எஸ். விஜயன், அக்கரைப்பற்று-07.

அந்தப் பெண்ணுக்கு கல்யாணம் நடக்கும். நீர் ஒரு வாழ்த்துமடல் அனுப்பவேண்டியிருக்கும். எங்கிருந்தாலும் வாழ்க.

○◆●

✉ நவீன உலகம் எத்தனையோ துறைகளில் முன்னேறிவருகிறது. நாம் எப்போது உருப்படப்போகிறோம்?

என். யோகராஜன், கண்டி.

சர்வதேசக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. விஞ்ஞானிகள் ஒவ்வொருவரும் தங்கள் நாடுகளின் விஞ்ஞான சாதனைகளைப் பற்றிப் பேசினார்கள்.

**அமெரிக்க விஞ்ஞானி:-** நாங்கள் தயாரித்த ராக்கெட் வெற்றிகரமாக சென்று கொண்டிருக்கிறது.

**ரஷ்ய விஞ்ஞானி:-** நாங்கள் தயாரித்த நீர்மூழ்கிக் கப்பலும் கடலின் தரையை தொட்டு முத்தமிடக்கூடியது.

**இலங்கை விஞ்ஞானி:-** நாங்கள் மட்டும் என்னவாம். 'ஏறக்குறைய' எங்கள் மூக்கின் வழியாக உணவு உட்கொள்கிறோம்.

○◆●

✉ அழிவுப் பாதையில் மட்டுமே நாம் சென்று கொண்டிருப்பதற்கு என்ன காரணம்?

கு. அன்ரனி, நீர்கொழும்பு.

நமது தலைவர்கள் பலர் தங்களை தோமஸ் அல்வா எடிசன் என்று நினைத்துக் கொள்கிறார்களாக்கும்.

1914ல் தோமஸ் அல்வா எடிசனின் சோதனைக் கூடத்தில் ஒரு பெரிய தீ விபத்து ஏற்பட்டது.

பல இலட்சம் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள், எடிசன் தன் வாழ்நாள் முழுவதும் விழுந்து, விழுந்து ஆராய்ச்சி செய்த குறிப்புக்கள் அனைத்தும் சாம்பலாகிக் கொண்டிருந்தன.

அதனைக் கேள்விப்பட்ட எடிசனின் மகன் விழுந்தடித்து ஓடி வந்தான்.

எடிசன் ஒரு ஓரத்தில் நின்றபடி கொழுந்துவிட்டெரியும் தீயை ரசித்துக் கொண்டிருந்தார். மகனைப் பார்த்ததும் எடிசன் என்ன சொன்னார் தெரியுமா?

"அம்மா எங்கே? சீக்கிரமாக தேடிச் சென்று கூட்டிவா. இந்தமாதிரிக் காட்சியை மறுபடியும் அவளால் பார்க்க முடியாது."

மறுநாள் தனது நம்பிக்கைகளும், கனவுகளும் கருகிய சாம்பலுக்கிடையே நடந்து கொண்டே எடிசன் சொன்னார்;

"அழிவில் எவ்வளவு அனுகூலம் இருக்கிறது! நம்முடைய அனைத்து தவறுகளும் எரிந்து போய்விட்டன."

○◆●

✉ சிங்கர் கிண்ணப் போட்டிக்கு அவுஸ்திரேலிய அணி வருமா?

எம்.என். ஜபார், கல்முனை.

அவுஸ்திரேலிய அணியை இலங்கைக்கு அழைக்கும் அபிப்பிராயம் எப்போது தோன்றினாலும் அது ஏன் குண்டு வெடிக்கிறதோ தெரியவில்லை. தெகிவளைக் குண்டு வெடிப்புக்கு முன்னரே 'வரமாட்டோம்' என்று முடிவு சொல்லிவிட்டது அவுஸ்திரேலிய அணி. தெகிவளைக்குப் பின்னர் நல்ல சாட்டுக் கிடைத்த சந்தோசத்தில் இருப்பார்கள்.

○◆●

✉ ஜர்வர்யாராய் படம் போட்டீர்கள். நம் அபிமான சுஷ்மிதாசென் படம் ஒன்றும் போட்டால் என்னவாம்?

வி.ஜெகான், பாணந்துறை.

போடலாமே! முன்னாள் உலக அழகியின் முன்னேற்றம் பாரீர், பாரீர்!

○◆●



சுஷ்மிதாசென்

# கப்டன் பதவி எனக்குப் புதிதல்ல

## டெண்டுல்கர் பரபரப்பு பேட்டி

கிரிக்கெட் விளையாட்டில், ஒட்ட சராசரியாக 99 ரன்களைப் பெற்றுச் சாதனை படைத்தவர் டொன் பிரட்மன்.

"என்னைப் போலவே விளையாடுகிறார்!"



என்று டொன் பிரட்மனே பாராட்டும் அளவிற்குச் சிறப்பாக விளையாடுபவர் சச்சின் டெண்டுல்கர்.

வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷிப் பட்டம்பெற்ற இவரை இரண்டாவது பிரட்மன் என்று புகழ்கிறது, சர்வதேச கிரிக்கெட் அரங்கம்.

தனது 16 வது வயதில் கிரிக்கெட்டில் நுழைந்து குறுகிய காலத்தில் உலகளாவிய புகழைப் பெற்றுவிட்ட டெண்டுல்கர் 50 ரன்களைச் சராசரியாகக் கொண்டிருப்பவர்.

அசாருதீனுக்குப் பிறகு, இந்திய அணியின் கப்டன் பதவிக்கு இவர்தான் தகுதி வாய்ந்தவர் என்று, பிரபல முன்னாள் வீரர்களே ஒப்புக்கொள்கின்றனர்.

அண்மைய இங்கிலாந்து சுற்றுப் பயணத்திற்குப் பின்னர் டெண்டுல்கர் அளித்த பரபரப்புப் பேட்டி:

**கேள்வி: இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் பங்கேற்றவர் என்ற வகையில் அதில் இந்திய அணியின் செயற்பாடு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில்: ஒருநாள் போட்டிகள் மற்றும் டெஸ்ட் தொடர்களில் நாம் தோல்வியடைந்தாலும், இதைப் படுதோல்வி என்று விமர்சிக்க முடியாது.

இந்தமுறை நமது அணியில் பல இளம்வீரர்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தனர். இங்கிலாந்தில் நிலவிய மோசமான குளிர், கிரிக்கெட் போட்டியைப் பாதிக்கும் அளவிற்கு இருந்தது. இருப்பினும் நமது அணியின் அனைத்து வீரர்களுமே, தங்கள் திறமையை முழு அளவில் வெளிப்படுத்த முயற்சி செய்தனர் என்பதில் எனக்குத் துளியளவு சந்தேகம்கூட இல்லை.

**கேள்வி: இங்கிலாந்தில் ட்ரெண்ட் பிரிட்ஜ் டெஸ்டின்போது இரட்டைச் சதம் அடிக்கும் வாய்ப்பு கைநழுவிப் போனதற்காக உங்களுக்கு வருத்தம் ஏற்படவில்லையா?**

பதில்: ஆம்.....இரட்டைச் சதம் அடிக்கும் வாய்ப்பு நெருங்குகிறது என்பது, விளையாடும்போதே எனக்கு தெரிந்துவிட்டது, நிதானமாகப் பந்துகளை எதிர்கொண்டு, அதிக ரன்களை எடுத்துவிட வேண்டும் என்று விரும்பினேன். வாய்ப்பு நழுவியது. எனக்கு அதிர்ச்சி அளித்தது.

ஆனால், இந்த வாய்ப்போடு, எனது கிரிக்கெட் எதிர்காலம் ஓய்ந்து விடப்போவதில்லை என்று சமாதானப்படுத்திக் கொண்டேன்.

**கேள்வி: விரைவில் தென்னாபிரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளில் இந்திய அணி செய்யவிருக்கும் சுற்றுப்பயணத்தில், இந்திய அணி இதற்கு எந்தவகையில் தயார் படுத்திக்கொள்ள வேண்டும்?**

பதில்: வெளிநாடுகளைப் பொறுத்தவரை வேகப்பந்து வீச்சுத்தான் முக்கியம். அங்குள்ள ஆடுகளத்தில் நமது சுழற்பந்து வீச்சுமுறை தேவையான பலனைத் தராது. இதனால் குறைந்த பட்சம் 4 அல்லது 5 வேகப்பந்து வீச்சாளர்கள் நமது அணியில் இடம்பெற்றால் நல்லது.

**கேள்வி: கப்டன் பதவியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில்: இது ஒரு கடினமான பணி. உள்நாட்டுப் போட்டிகளின்போது ஓரளவு சமாளித்துவிடலாம். ஆனால் வெளிநாட்டுப் போட்டிகளின்போது கடுமையான விமர்சனங்களை கப்டன்தான் எதிர்கொள்ளவேண்டி இருக்கும். தனிப்பட்ட வீரர்களின் தவறுகள் பின்னணிக்குப் போய்விடும்.

**கேள்வி: உங்களுக்கு கப்டன் பதவி வழங்கப்பட்டிருப்பது பற்றி...?**

பதில்: கப்டன் பதவி எனக்குப் புதிதான விஷயமல்ல, கடந்த இரண்டரை ஆண்டுகளாக பம்பாய் அணியின் கப்டனாக இருந்து வருகிறேன். இந்த அணி பல வெற்றிகளைப் பெற்றுள்ளது.

ஆனால் சர்வதேச அளவில் விளையாடும் இந்திய அணிக்குத் தலைமை வகிப்பது கடினமான விஷயம்.

அணி வீரர்களும் நானும் ஒருவரை ஒருவர் சரியாகப் புரிந்து கொண்டால் இந்தக் கடினமான பணி எளிதான ஒன்றாக மாறிவிடும்.

**கேள்வி: சிறந்த வீரர்கள், கப்டன் பதவி அளிக்கப்பட்டபின், கிரிக்கெட்டில் பிரகாசிக்க முடியாமல் போகிறது. இது உங்கள் விஷயத்திலும் எதிரொலிக்குமோ என்று சிலர் அஞ்சுகிறார்கள். இது பற்றி....?**

பதில்: இது தவறான கருத்து. பொறுப்புகள் அதிகரிக்கும்போது திறமைகளைமேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற உற்சாகம் தான் பிறக்கும் என்பது எனது கருத்து. இதனால் கப்டன் பதவி என்னைப் பாதிக்கப் போவதில்லை. எனது திறமைகளை எந்தப் பதவியும் பறிக்கமுடியாது என்று உறுதியாக நம்புகிறேன். ■



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 44

இராமபிரானுடைய தாகத்தைத் தணிப்பதற்காக நீர்தேடி இலக்குமணன் புறப்பட்டான். அந்த வனத்தில் பல இடங்களையும் சுற்றி அலைந்தும் நீர் நிலை ஒன்றைத் தானும் காண முடியாமல் இலக்குமணன் தவித்தான். அலைச்சலினால் சோர்ந்து களைப்புற்ற போதும் நீர் தேடும் முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்தான்.

அடர்ந்து வளர்ந்த அக்கானகத்தில் எங்கும் பசுமை நிறைந்திருந்தது. தாவரங்களின் வளர்ச்சிக்கும் பசுமைக்கும் இன்றியமையாதது தண்ணீராகும். அப்படியிருந்தும் தண்ணீர்த் தடாகங்களோ ஆறுகளோ அருவிகளோ எங்கும் காணப்படவில்லை. ஆங்காங்கே நீர்கொள் நிலைகள் இருந்தமைக்கான அடையாளங்கள் காணப்பட்டன. அண்மைக் காலம்வரை நீர் வடிந்தோடிய அருவிகளுக்கான அடையாளங்களும் தென்பட்டன. அவைகளெல்லாம் கோடைகாலத்தில் வற்றிப் போனவை போன்று வரண்டு காணப்பட்டன. இது இயற்கைக்கு முரணாக இலக்குவனுக்குப்பட்டது. இத்தனைக்கும் அப்போது கோடை காலமாகவும் தெரியவில்லை. அவ்வப்போது மழை பொழியக்கூடிய இடமாகவும் அப்பிரதேசம் விளங்கியது.

இலக்குவன் இவ்வாறு அலைந்து கொண்டிருக்கும்போது சகிக்க முடியாத துர்நாற்றம் அவன் மூக்கில் நுழைந்தது. கீழே குனிந்து தரையைப் பார்த்தான். ஆங்காங்கே யானை, புலி போன்ற பெரிய வன விலங்குகளின் தோல், எலும்புகள் போன்ற எச்சங்கள் சிதறிக்கிடந்தன. அவற்றின் சதை எதுவும் காணப்படவில்லை. இவற்றைக் கண்டதும், மாமிசம் புசிக்கும் இராட்சதர்கள் அப்பகுதியில் நடமாடுகிறார்களோ என்ற ஐயம் இலக்குவனுக்கு ஏற்பட்டது.

## இலக்குவனை விரும்பிய அரக்கி

சற்று நேரத்துக்கெல்லாம் பெரிய மரங்களெல்லாம் சுழல் காற்றில் சுழல்வது போன்ற தன்மையினை இலக்குவன் அவதானித்தான். பயங்கரப் பிராணி ஒன்று தன்னருகில் வந்து கொண்டிருக்கிறது என்பதனை உணர்ந்தான். தன்னுடைய வில்லினைக் கையிலெடுத்து அதன் நாண் இறுக்கமாக இருக்கிறதா என்பதையும் பரிசோதித்துக் கொண்டான். அம்புகளையும் அம்பறாத் தூணியில் வரிசைப்படுத்திக் கொண்டான்.

இலக்குவன் எதிர்பார்த்ததைப் போன்றே பயங்கர உருவம் ஒன்று அவன் முன்னே வந்து நின்றது. தன்னுடைய அண்ணன் இராமரால் முன்னர் வதைக்கப்பட்ட தாடகையோ அல்லது தன்னால் சில நாட்களுக்கு முன்னர் மூக்கும் முலையும் அறுக்கப்பட்ட சூர்ப்பணகையோ மாற்றுருக்கொண்டு மீண்டும் வந்திருக்கிறார்களோ; இவர்களல்லாது வேறொரு அரக்கிதான் வந்திருக்கிறாளோ என்று இலக்குவன் எண்ணிப்பார்ப்பதற்கிடையில் அங்கு வந்து நின்ற உருவம் இலக்குவனைப் பார்த்து நாணி நின்று-பற்களைக் காட்டிச் சிரித்தது.

அந்த உருவத்தின் அங்க அமைப்புகளையும் தோற்றத்தையும் கண்ணுற்ற இலக்குவனுக்கு, அந்தக் கானகத்தில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூடக் கிடைக்காமல் போனமைக்கான காரணம் விளங்கிவிட்டது. அப்பகுதியிலுள்ள வனவிலங்குகளனைத்தையும் தன் பசிக்கு இரையாக்கி விட்டு, நீர் நிலைகள் அனைத்திலுமிருந்த நீரை-ஒருசொட்டுக் கூடவிட்டு வைக்காமல்-குடித்துவிட்டுள்ளது அந்த இராட்சத உருவம் என்பதனை

இராஜகுமாரன்

இலக்குவன் அறிந்து கொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை.

அந்த இராக்கத உருவம் தன்னை அயோமுகி என்று இலக்குமணனிடம் அறிமுகப்படுத்தியது. அகப்பட்ட உயிரினங்கள் அனைத்தையுமே தன் இரையாக்கும் சுபாவம் கொண்ட அயோமுகி, இலக்குமணனைக் கண்டதும் அவன்மீது அடங்காத ஆசை கொண்டாள். எப்படியும் அவனை அடைந்துவிட வேண்டும் என்று துடிதுடித்தாள். தன்னை ஏற்று தனது காமப்பசியைத் தீர்த்து விடுமாறு இலக்குவனிடம் அவள் கெஞ்சினாள்.


அயோமுகியின் கோரிக்கை கேட்டு இலக்குவன் வாய்விட்டுச் சிரித்தான். தான் ஏற்கனவே திருமணமானவன் என்றும் தற்போது பிரம்மச்சரிய விரதம் அனுஷ்டிப்பதாகவும், தன்னால் அவளுடைய விருப்பத்துக்கு இணங்க முடியாதென்றும் எடுத்துரைத்தான். ஆனால் அவள் இலகுவில் விடுவதாயில்லை. கெஞ்சிக் கேட்டதுபோக இப்பொழுது தனது பலத்தால் இலக்குவனை அடிபணியவைத்து

# அயோமுகி என்றோர் அரக்கி

தனது இச்சையைத் தீர்த்துக் கொள்வதென நினைத்தாள். தனது இரு கைகளையும் தலைமேல் தூக்கி இலக்குமணனைத் தொழுவது போல் சற்று நேரம் நின்று விட்டு சாஷ்டாங்கமாக அவன் பாதங்களில் விழுந்தாள். நொடிப் பொழுதில் நடந்த இச்செயலை இலக்குவன் நிதானித்து அறிந்து கொள்வதற்குள்ளாக இலக்குவனை அவனுடைய கால்களில் பிடித்தே தூக்கி எடுத்து வானில் தாவிப் பறக்கலானாள். ஒரு வகை மாய வலையுள் சிக்கியவன் போல் சிறிது நேரம் இலக்குவன் தடுமாறினான்.

## இராமரின் கலக்கம்

தன்னுடைய தாகத்தைத் தீர்த்து வைக்க நீர் தேடிச் சென்ற தம்பி இலக்குவன் வெகு நேரமாகியும் திரும்பாத நிலை கண்டு இராமர் துயரடைந்தார். சீதைக்கு நேர்ந்தது போன்று இலக்குவனுக்கும் அரக்கர்கள் தீங்கிழைத்து



விட்டனரோ என்று ஏங்கினார். தனக்கு இளையவனானாலும் தன்னை அன்னை போல்-தந்தைபோல் காத்துவரும் அருமைத் தம்பியை நிரந்தரமாகவே பிரிந்து விடநேர்ந்து விடுமோ என்று இராமர் கலங்கினார். 'அன்புத் தந்தையை இழந்து, அருமைத் தாய்மாரைப்பிரிந்து, பாசமுள்ள மனைவி சீதையைப் பறி கொடுத்து, இப்பொழுது அருந்துணையாக நின்ற தம்பியையும் பறிகொடுத்துவிட்ட பெரும்பாவியாகிவிட்டேனே,' என்று புலம்பலானார். தன் கால் போன போக்கெல்லாம் அலைந்தார்.

● ☐ ○

அயோமுகி, மோகனை எனும் மந்திரத்தைப் பிரயோகித்தாள். இதனால் சற்று நேரம் சுய நினைவற்றிருந்த இலக்குவன் அயோமுகியின் ஸ்பரிசத்தினால் சுய நினைவு பெற்றான். நடந்தவற்றை ஊகித்தறிந்தான். மெதுவாகத் தன்னுடைய வாளினை எடுத்து அயோமுகியின் மூக்கு காது மற்றும் அதரங்கள் முதலான உறுப்புகளை அறுத்தான். வலிதாங்காமல் அவள் எழுப்பிய ஒலி அந்தக் கானகத்தையே அதிர வைத்தது. இராமபிரானுக்கும் அவ்வொலிகேட்டது.

உடனே மாயமானுருக் கொண்டு வந்த மாரீசனுடைய செயலை எண்ணி அத்தகையதோர் சூழ்ச்சியாக இருக்குமோ என்று எண்ணினார். உடனே அவருக்கு உண்மை விளங்கிற்று. கேட்டது ஒரு பெண்குரல்; ஆகவே யாரோ அரக்கி இலக்குவனுடன் மோதுகிறாள் என்று அறிந்து கொண்டார். சப்தம் வந்த திசையை நோக்கிப் புயல் வேகத்தில் இராமர் கிளம்பினார்.

## பிரிந்தவர் கூடினர்

இராமர், தம்பி இலக்குமணனை நோக்கிச் சென்ற வேகத்தை, புலவர் பெருமான் கம்பநாட்டாழ்வார் வர்ணிக்கும் பாங்கினைப் பார்ப்போம்:

**நெடு வரை பொடிபட,**
**நிவந்த மா மரம்**
**ஒடிவுற, நிலமகள் உலைய,**
**ஊங்கு எலாம்**
**சட சட எனும் ஒலி**
**தழைப்பத் தாக்கவும்**
**முடுகினான் இராமன், வெங்**
**காலின் மும்மையான்.**

(ஆரணிய காண்டம்-3621)

பொருள்:

*நெடி துயர்ந்த மலைகள் தூள்தூளாக நொருங்கவும், நீண்டு வளர்ந்தோங்கிய பெரு மரங்கள் உடைந்து வீழவும், (இராமரின் பாதங்கள் கனவேகத்தில் உதைத்தமையினால்) பூமாதேவி வருந்தவும், இருபுறத்தே சட சட என்ற ஒலி எழவும் கடுங்காற்றின் வேகத்திலும் பார்க்க மூன்று மடங்கு வேகத்துடன், இலக்குவனுடன் மோதும் அரக்கியைத் தூக்குவதற்காக இராமர் ஓடிச் சென்றார்.*

☆ ☆ ☆

ஊழிக்காலத்தில் கடலானது பெருகி உலகினை மூடிவிடும் என்ற கருத்து பல நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு கருமை நிறமுடைய கடல் ஊழிக்காலம் போல் வருவதற்கு ஒப்ப இலக்குவனை நோக்கி இராமர் வருகிறார். இதனைக்கண்ட இலக்குவன், அண்ணனை நோக்கி ஓடிச் சென்று "அண்ணா வருந்த வேண்டாம்... வருந்த வேண்டாம்; எனக்கு எதுவுமே நடக்கவில்லை" என்றான். இராமரின் பொற்பாதங்களைப் பணிந்தான். இலக்குவனை வாரி எடுத்து அணைத்த இராமரின் கண்களில் மாரி பொழிந்தது. இலக்குவனைப் பிரிந்து கண்ணிழந்த கபோதியாகி நின்று, அவன் தன்னிடம் சேர்ந்ததும், இழந்த கண்களை மீண்டும் பெற்ற நிலையினை அடைந்தார்.

தன்னுடைய இளங்கன்றினைப் பிரிந்த தாய்ப்பசு துயர்தாங்காது அரற்றி அழும் வேளை அதே கன்று ஓடோடி வந்து தாய்ப் பசுவிடம் சேரும்போது அதன் பால் மடிதானே சுரக்குமாம். இந்நிலையில் இலக்குவனைக் கண்டதும் அன்புப்பெருக்கால் இராமர் அகமகிழ்வடைந்தார்.

← (தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 42

**சரியானவிடை:- தென்திசை**

1. செல்வி. கே. சிவசாமி. சோகம எல்.டி., புசல்லாவ.
2. சி.கௌஷிக்கா 411/20 காலி வீதி, பம்பலப்பிட்டி,கொழு-4.
3. பொ. லோகநாதன். 11/1, உனுக்கட்டை, இறத்தோட்டை.
4. கே. செல்வராஜ். 176/9, கண்டி வீதி, கம்பளை.
5. க. விக்னேஸ்வரி. 23 11/ஏ, செல்வகந்த கிராமம், பாரதெக.

**போட்டி இல. 44** கேள்வி:- இலக்குவனை அடைய நினைத்த அரக்கியின் பெயர் என்ன?

ஆகஸ்ட்.24 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி—இல.44, தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

---

## காதிலொரு கந்தசாமி

செ:- அண்ணே! வணக்கமண்ணே.
கவு:-வாடா என் விளக்கெண்ணெய் தலையா! ஏன்டா வந்தே?
செ:- ஏனண்ணே நான் வந்தது பிடிக்கலையாண்ணே?
கவு- இல்லையெண்ணா போகவா போறே?
செ:- நான் எங்க போவன்? எனக்கு யார் இருக்கா? எங்க போறதெண்ணு சொல்லியே...
கவு:- நிறுத்துடா, இவரு பெரிய சிவாஜி கணேசன். கௌரவம் பட ஸ்ரைல்ல பேசுறாரு. நாம கேட்கணும். ஏன்டா எனக்கென்ன தலையெழுத்தாடா? என்னங்க அப்படி யோசிக்கிறீங்க? இப்பதானே நல்லா பேசிக்கிட்டிருந்தீங்க?
செ:-இலங்கைப் பிரச்சனையிருக் கேண்ணே, இலங்கைப் பிரச்சனை....
கவு- அது இருந்துகிட்டுத்தாண்டா இருக்கும். எங்கேயும் போகாது. ஏன்னா அவங்க ராசியப்படி.
செ:- நான் சொல்லி முடிக்கேல்லையண்ணே. இலங்கைப் பிரச்சனை எப்படி தீர்த்து வைக்கலாம் எண்ணு திங்க் பண்ணிக் கிட்டிருக்கேன்.
கவு:- கலைகுரே திங்க் பண்ணிறதை விட்டிட்டாரு. நீ கிளம்பிட்டியாடா?
செ:- கைவிட்டிட்டாரா அண்ணே?
கவு:- ஆமாடா.
செ:- ஏனண்ணே?

# கவுண்டமணி-செந்தில் அரசியல் டிஸ்கஷன்



கவு:- பிடிச்சுக்கிட்டேயிருந்தா நம்ம கையிலேயும் கொத்திடுமோ எண்ணு பயந்துட்டாருடா.
செ:- குரல் கொடுப்போம் எண்ணு சொல்லியிருக்காரண்ணே.
கவு:- குரல் கொடுப்பாரு. தோள் கொடுக்க மாட்டாரு.
செ:- புரியல்லண்ணே.
கவு:- இதுக்குத்தாண்டா ஞானம் வேணும் என்கிறது.
செ:- யாரண்ணே அது? நமக்கு வேண்டப்பட்டவரா?
கவு:- அட பன்னித் தலையா! கொழுக்கட்டை வாயா! ஞானம் என்னா அறிவு வெளிச்சம்டா. குரல் கொடுத்தா எப்போ வேணும்னாலும் நிறுத்திடலாம். தோள் கொடுத்தா, அவங்க தோளில ஏறி உட்கார்ந்து காதை கடிச்சுட்டா என்ன செய்யிறது? அதுதான் கலைகுரு குரல் மட்டும்தான் குடுப்பாரு!
செ:- கலைஞர்தானே அண்ணே உலகத் தமிழருக்கெல்லாம் தலைவரு?
கவு:-இங்க பாரு சட்டித் தலையா! கலைஞரை வம்புலமாட்டிவிடாத. உலகத் தமிழர்களுக்கு தலைவர் என்று சொல்லிக் கொண்டே இருந்தாரு. தமிழக முதல்வரா வர முடியல்லே. வந்தாலும் ஆட்சி நடத்த முடியல்லே. தமிழக முதல்வரா மட்டும் இருந்தால் போதும்; வம்பே வேண்டாம் எண்ணு முடிவு பண்ணிட்டாரு கலைஞர்.
செ:- அண்ணே ஒரு கேள்வி கேட்கலாமா?
கவு:- கேளு. இன்னைக்கு நான் ரொம்ப குசியா இருக்கேன்டா.
செ:- ஜோதியக்கா கூப்பிட்டிருந்தாங்களா அண்ணே?
கவு:- ஜொள்ளு வடியுது பாரு, துடைச்சுக்க. கேளுடா.
செ:- தமிழ்நாட்டில புலிகள் வந்திட்டதா ஜெயலலிதாம்மா சொல்லியிருக்காங்களே, உண்மையா அண்ணே?
கவு:- அந்தம்மா எப்படா உண்மை பேசியிருக்காங்க. பொழுதுபோக சசியக்கா இல்லைப் பாரு, அதுதான் புலி காட்டிக் கிட்டிருக்காங்க.
செ:- பாவம் அண்ணே அந்தம்மா. எஸ்.டி.எஸ். தாத்தாகூட கழண்டுகிட்டாரு.
கவு:- கழறவேண்டிய நேரம் வந்தா கழன்று தானேயடா ஆகணும். கழறாம இருந்தாங்கண்ணு வைவி, ஜெயலலிதாவே தள்ளி விட்டிருப்பாங்க.
செ:- டோர்ச் லைட் முத்துச்சாமி பாவமண்ணே.
கவு:- அதென்னடா டோர்ச் லைட் முத்துச்சாமி?
செ:- ஜெயலலிதா முன்னாடி டோர்ச் லைட் பிடிச்சுக்கிட்டே இருப்பாரு மேடையிலே. டோர்ச் லைட்டும் கையுமா அவரு அந்தம்மா முன்னாடி அலையிறத பார்த்துட்டு, டோர்ச் லைட் முத்துச்சாமி எண்ணு பட்டம் கொடுத்திட்டாங்க.
கவு:- ரொம்ப விவரமாத்தான் பேசறே!
செ:- ஜெயலலிதா இப்ப என்ன செய்துகிட்டிருப்பாங்க தெரியுமா?
கவு:- அதையும் நீயே சொல்லு.
செ:- உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல. உன்னை எண்ணாத நாளும் நாளல்ல எண்ணு பாட்டுப் பாடிக்கிட்டு இருப்பாங்க.
கவு:- சசிகலா என்ன பாட்டு பாடிக்கிட்டிருப்பாங்க?
செ:- பானையிருக்கும், தண்ணியிருக்கும், பசும் பாலிருக்காது.
பாண் இருக்கும், பருப்பிருக்கும், ருசியிருக்காது.
கொசு விருக்கும், கடியிருக்கும், ஏ.சிக் குளிர் இருக்காது.
கட்டிலிருக்கும், பெட்சீட்டிருக்கும், சுகமிருக்காது.
கழுத்திருக்கும், காதிருக்கும், வைரநகை இருக்காது.
பல் இருக்கும், உதடிருக்கும், பால் சிரிப்பிருக்காது.
கல் இருக்கும், மண் இருக்கும், நல்ல சோறிருக்காது.
ஆள் இருக்கும், காவலிருக்கும், அடியாள் இருக்காது.
சிறைநிலமிருக்கும், மரமிருக்கும், வாங்கப் பணமிருக்காது.
குறையிருக்கும், கோபமிருக்கும், வெளியே சொல்ல முடியாது.
உறையிருக்கும், தலையணையுறையிருக்கும், உள்ளே நோட்டிருக்காது.
சிறையிருக்கும், சிறு அறையிருக்கும், உன் துணையிருக்காது.

கவு:- செந்தில், டேய் செந்தில்!
செ:- அண்ணே, என்னண்ணே!
கவு:- கம்பனை கவிழ்த்திட்டியடா, கவிழ்த்திட்டே.
செ:- அண்ணே! இதுவரை நீங்க என்னை புரட்டி எடுத்திருக்கீங்க. இன்னைக்கு தானன்ணே போற்றிப் புகழ்ந்திருக்கீங்க.
கவு:- எதை எதை எப்பப்போ செய்யணுமோ, அதையதை அப்பப்போ செய்யணுமடா.
செ: தெய்வமே!
கவு:- எங்கேடா?
செ:- நீங்கதானண்ணே.
கவு:- ஏன்டா பரதேசி நாயே! நான் உயிரோட இருக்கிறது பிடிக்கலையாடா?
செ:- ஏனண்ணே அப்படிச் சொல்றீங்க?
கவு:- உயிரோடு இருக்கும்வரைக்கும் எவன் எத்தனை பெரிய நல்லவனா இருந்தாலும் நாயே, பேயே எண்ணு திட்டுவீங்க. மண்டையைப் போட்டுட்டான், அல்லது போடப்போறான் எண்ணு தெரிஞ்சாத் தானேயாடா தெய்வமே, மனிதருள் மாணிக்கமே என்றெல்லாம் போற்றுவீங்க.
செ:- என்னையும் அந்தக் கணக்கில சேர்க்காதீங்கண்ணே.
கவு:- அதுக்கேன்டா குலுங்கி குலுங்கி அழுவுறாய்? இதென்னடா சில்க் சுமிதா மார்க் அழுகையாடா?
செ:- சில்க் என்றதும் ஞாபகம் வந்திடுச்சு.
கவு:- என்னடா..?
செ:- குண்டண்ணே. பெரிய குண்டு. அட்லாண்டாவில குண்டுவெடிச்சது எப்படியண்ணே?
கவு:- குண்டெல்லாம் எப்படி வெடிக்குமோ அப்படித்தான். அதுமட்டுமென்ன ஸ்பெஷலாவா வெடிச்சிருக்கும்?
செ:- சில்க் மார்க் குண்டென்னா குலுங்கி குலுங்கி வெடிச்சிருக்குமண்ணே. நான் கேட்டது அதில்லையண்ணே. அந்தப் பெரிய அமெரிக்காவிலேயே எப்படியண்ணே குண்டு வைச்சாங்க.
கவு:- அமெரிக்கா பெரிசு. குண்டு சிறிசு. சுலபமா கொன்னுபோய் உள்ளே வைச்சிட்டாங்க. கேள்வி கேட்கிறான் பாரு. அடே, பனங்கொட்டைத்தலையா, வினை விதைச்சா வினைதான்டா அறுக்கணும்.
செ:- யாரு விதைச்சாங்க, யாரு அறுத்தாங்க?
கவு:- அமெரிக்காக்காரன்தான் முன்னாடி குண்டு ஏற்றுமதியை மொத்த குத்தகையா எடுத்து வைச்சிருந்தான். அமெரிக்காவில குடிசைக் கைத்தொழில் மாதிரி குண்டுகளையும், ஆயுதங்களையும் உற்பத்தி பண்ணி கிட்டேயிருந்தாங்க. இப்ப பாரு எல்லா நாட்டிலயும் அவனவன் சுய தொழில் வேலை வாய்ப்புத் திட்டம் மாதிரி குண்டு செய்யக் கத்துக்கிட்டாங்க. அமெரிக்காவில குண்டு மிஞ்சிப் போச்சு. சரி சும்மா கிடப்பானேன் எண்ணு அங்கேயே குண்டை வெடிக்க வைச்சுப் பார்க்கிறானுங்க. கவர்மெண்டு முழிக்குது. இப்ப முழிச்சு என்ன பண்றது?
செ:- ஆண்டவனே, ஆண்டவனே!
கவு:- அப்படிச் செல்லாதேடா எண்ணு சொன்னேனேயடா. (உதைக்கிறார்)
செ:- அண்ணே கேட்டுட்டு அடியுங்கண்ணே.
கவு:- நாங்க அடித்துட்டுத்தானுங்க எப்படியிருக்குண்ணு கேட்போமுங்க. (உதைக்கிறார்)
செ:- அண்ணே அடிக்காதீங்கண்ணே. நன்றி சொல்லதானண்ணே ஆண்டவனைக் கூப்பிட்டேன்.
கவு:- எதுக்கடா நன்றி?
செ:- உங்களை மாதிரி ஒரு அறிவுத் திலகத்தை என் வாழ்நாளுக்குள்ளே பார்க்க வைச்சாரு பாருங்க- அதுக்குத்தானண்ணே!
கவு:- அப்பமங்களா? இப்போது அடியுலகத்திலகத்தை ஆண்டவன் அனுப்பி வைக்கப் போறாரு பாருங்க. (கவுண்டமணி உதைக்க, செந்தில் வழக்கம் போல ஓடிக் கொண்டிருக்கிறார்)



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
436331


# மூன்று முத்துக்கள்



விவியன் மக்டொனாவுக்கு 51 வயது. (படத்தில் இருப்பவர்) அவரது கணவர் ஸினுக்கு வயது 45. இவர்களுக்கு ஒரே ஒரு மகள். பெயர் - பைப்பர். ஒரு குழந்தையுடன் மட்டும் நிறுத்திக்கொள்ள விரும்பவில்லை.

ஆனால் என்னதான் முயன்றும் முயற்சி திருவினையாகவில்லை. அதனால் பைப்பரை செல்லமாக வளர்த்தனர். பைப்பருக்கும் திருமணமாகிவிட்டது. அதன் பின்னர் மீண்டும் ஒரு பிள்ளை பெற்றுக் கொள்ளலாம் என்று ஆசைப்பட்டார் மக்டொனல்.

51 வயதில் குழந்தை பெறும் ஆசையா? ஆசையிருக்கட்டும், பத்து வருடத்திற்கு முன்னரே கருத்தரிக்கும் நிலையினை நீங்கள் இழந்துவிட்டீர்கள் என்றார் டாக்டர்.

அவ்வளவுதான் திருமதி மக்டொனல் இடிவிழுந்தது போலாகிவிட்டார்.

தாயாரின் மனக்கவலையைப் போக்க முன்வந்தார் மகள் பைப்பர். ஒரு துணிச்சலான யோசனையையும் சொன்னார். அதைக் கேட்ட தந்தையார் ஸினுக்கு முதலில் அதிர்ச்சி.

தனது கரு முட்டையை எடுத்து பரிசோதனைக் குழாயில் வைத்து தந்தை ஸினின் விந்து மூலம் கருக்கட்டச் செய்வது. பின்னர் அந்தக் கருக்கட்டிய முட்டையை தாயார் மாக்டொனால் வயிற்றில் சுமப்பது என்பதுதான் மகள் பைப்பரின் யோசனை.

முதலில் யோசித்தாலும் பின்னர் அது தான் சரியென்று பட்டது.

டாக்டர் சுவான்சன் என்பவரை அணுகி தம் விருப்பத்தை தெரிவித்தனர்.

டாக்டரும் சம்மதித்தார்.

தன் கணவரின் விந்து மூலமும், தன் மகளின் கரு முட்டை மூலமும் கருத்தரித்த முட்டையை பத்துமாதம் சுமந்தார் திருமதி மாக்டொனல்.

அவரது உடல்நிலையை கவனமாகக் கண்காணித்து வந்தார் டாக்டர் சுவான்.

பத்தாவது மாதம் குழந்தையை எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு ஒன்றுக்கு மூன்று மடங்கு சந்தோசம்.

பிறந்தது மூன்று குழந்தைகள்.

இரண்டு பெண் குழந்தைகள், ஒரு ஆண் குழந்தை.

மூன்றும் ஆரோக்கியமாக இருந்ததும் மகிழ்ச்சியான செய்தி.

அதனால் தாயாகவும், பாட்டியாகவும் பெரு மகிழ்வில் இருக்கிறார் மாக்டொனால்.

உங்கள் மனநிலை எப்படியிருக்கிறது என்று கேட்டதற்கு மாக்டொனால் சொன்ன பதில்: "நான் எப்போதுமே வயதாகிவிட்டதாக நினைத்தது கிடையாது."




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
323657


# தங்கப் பெண்



↓ இளம் கன்று பயமறியாது, முயற்சியில் சலிப்பும் அடையாது என்பதை நிரூபித்துவிட்டார் இந்த இளம் வீராங்கனை.


இம்முறை ஒலிம்பிக்கில் 108 கிலோமீட்டர் சைக்கிள் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் இந்த சிவந்த முடி அழகியிடம் சென்றுவிட்டது. இவரது பெயர் கிளாரா ஹக்ஸ், வயது 23. கனடாவைச் சேர்ந்தவர்.

இவர் வெற்றி பெருவார் என்று யாருமே நினைக்கவில்லை. கிளாரா ஹக்ஸ் மட்டும் மகா நம்பிக்கையோடு களத்தில் இறங்கினார்.

முதுபெரும் வீராங்கனைகள் எல்லாம் போட்டியில் பங்கு கொண்டனர். இலக்கை எட்டும் போது மழை கொட்டியது. சறுக்கி விழுந்து அவர்கள் எல்லாம் புரண்டு எழுந்து கொண்டிருக்க, சறுக்காமல் சமாளித்து, லாவகமாக சைக்கிளை செலுத்தி இலக்கைத் தொட்டார் கிளாரா ஹக்ஸ்.

2 மணி 36 நிமிடம் 44 செக்கன்களில் 108 கிலோமீட்டர் தூரத்தை தொட்டார் கிளாரா. அவரது இளமை வேகம் முதுபெரும் வீராங்கனைகளை ஓரம்கட்டிவிட்டது.

# வேக மனிதன்



↑ சியோல் ஒலிம்பிக் போட்டியில் (1988) நூறுமீட்டர் ஓட்டப்பந்தயத்தில் கனடா வீரர் பென் ஜோன்சன் உலக சாதனை படைத்தார். 9.79 நிமிடத்தில் ஓடி முடித்தார். கனடாவே மகிழ்ச்சியில் மெய்மறந்த நேரத்தில், பென் ஜோன்சன் போதை மருந்து பாவித்ததாகக்கூறி பதக்கம் பறிபோனது. அதற்கு பழிவாங்குவது போல இம்முறை கனடாவீரர் டொனோவன் பெயிலியன் நூறு மீட்டர் ஓட்டத்தில் உலக சாதனை படைத்துள்ளார். (மத்தியில் நிற்பவர்) எனினும் பென் ஜோன்சனின் சாதனையை முறியடிக்க முடியவில்லை. டொனோவன் 9.84 நிமிடத்தில் நூறுமீட்டரை ஓடிமுடித்துத்தான் உலக சாதனை படைத்துள்ளார்.

"பென் ஜோன்சன் மீது வீண் பழி சுமத்தப்பட்டது அல்லது அவரது சாதனையை முறியடிக்க ஆளே கிடையாது" என்கிறார் டொனோவன்.

பென் ஜோன்சனுக்கும், டொனோவனுக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. இருவரும் ஜமேய்க்கா நாட்டிலிருந்து சென்று கனடாவில் குடியேறியவர்கள்.

# வி.வி.ஐ.ப்





வி.ஐ.பி என்றால் வெரி இம்போட்டன் பேர்சன்ஸ். வி.வி.ஐ.பி. என்றால் வெரி வெரி இம்போட்டன் பேர்சன். கீழே பாருங்கள். என்ன ஒரு பிரமாதமான காட்சி.

குடை என்ன, குசாலான சாய்வுக்கதிரை என்ன, பொறாமையாக இருக்கிறதல்லவா. கொடுத்துவைத்த நாய் என்று பெருமூச்சு விடாதீர்கள். கண்ணுபடப்போகிறது. இது கனடாவில் 'கிளிக்' செய்யப்பட்டது. ஒரு கோடீஸ்வர வீட்டின் செல்லப்பிள்ளை இந்த நாயார். வி.வி.ஐ.பி.

# வாழ்க வளமுடன்

கொஞ்சும் ரோஜா
நீ எமக்கு!
உன்னால்தானே - எம்
இதயமெங்கும்
நேச வாசனை!
நீ வளர, நாம் மகிழ்வோம்.
நாம் மகிழ
நீ உயர்வாய்!



மட்டுநகர் காரைதீவு-8 ஐச் சேர்ந்த தேவராஜா ரஞ்சினி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் **பிரவீன்** தனது முதலாவது பிறந்தநாளை பெரும் மகிழ்வோடு, பெற்றோரும், உற்றாரும் வாழ்த்த கொண்டாடினார்.

**18.08.96** அன்று சுவிட்ஸர்லாந்தில் உள்ள **PFAEFFEKON** இல் பிரவீனின் பிறந்தநாள் கொண்டாட்டம் குதூகலமாக நடைபெற்றது.

பிரவீனை வாழ்க வளமுடன் நீடூழி என்று உளமார வாழ்த்துவோர்:

கொலின், ஜெலா, பெனில்டன் (குட்டி), கணேசன், கௌரீசன், கமல், அப்பன், ஐங்கரன், சுபாஸ், மகேஸ், சசி, மற்றும் தீபன்.

-சுவிஸ்-